Vol.4, Issue 9 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

பிப்ரவரி 2022

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary



# கலிஃபோர்னியாவில் பங்கேற்ற ரோட்டரி மிதவை

*கலிஃபோர்னியாவில் உள்ள பசடெனா-வில் புத்தாண்டு நாளில் நடைபெற்ற 2022 ரோஜா அணிவகுப்பில் (Rose Parade) தொடர்ந்து 42வது ஆண்டாகப் பங்கேற்றது ரோட்டரி. ரோட்டரி மிதவையின் கருப்பொருள், கல்வியின் வழியாக வாழ்க்கைகளை மாற்றுதல்.*

*இந்த மிதவையில் அமர்ந்திருந்த RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி அணிவகுப்புப் பாதையின் இருபுறமும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களுக்குக் கையசைத்தார்கள். “இது ரோட்டரியைப் பற்றிய விழிப்புணர்வை வளர்க்க உதவும், நம் மிதவையைக் காணும் ஒவ்வொருவரும் நம் உறுப்பினராகக் கூடும்” என்று தன் செய்தியில் குறிப்பிட்டார் மேத்தா.*

*இந்த மிதவையில், புத்தகங்களால் சூழப்பட்ட 16 அடி உயர ஆந்தை ஒன்று கண்ணாடி போட்டுக் கொண்டு, கையில் ஓர் ஆப்பிள்/உலகத்தை வைத்துக் கொண்டு காணப்பட்டது. இது உலகெங்கும் கல்வியின் முக்கியத்துவத்தை, அதை எல்லாருக்கும் எங்கும் கிடைக்கச் செய்கிற ரோட்டரியின் உறுதியைச் சுட்டிக் காண்பித்தது.*












# உள்ளே


12



20



44


56


72


74


**12** **கை கொடுக்கும் ரூர்கேலா ரோட்டேரியன்ஸ்!**
லட்சிய நோக்கு கொண்ட LN-4 கை பொருத்தல் முகாம் ஒன்றின்மூலம் 110 பேர் செயற்கை, செயலுள்ள கைகளைப் பெற உதவிய RCகள் ரூர்கேலா ராயல், ரூர்கேலா க்வீன்ஸ்.

**20** **மகாராஷ்டிரா, குஜராத் கிராமப்புற பெண்களுக்கு உதவும் நீர்ச்சக்கரங்கள்**
வறட்சி ஆபத்து உள்ள பகுதிகளில் வாழும் பெண்கள் இனி தலையில் தண்ணீர்ப் பானைகளைச் சுமக்கவேண்டியதில்லை, ரோட்டரி மற்றும் இன்னர் வீல் சங்கங்கள் அவர்களுக்கு நீர்ச்சக்கரங்களைப் பரிசளித்துள்ளன.

**38** **தில்லி அனந்தா ரோட்டரி சங்கத்தின் மருத்துவமனை திட்டம்**
இந்தச் சங்கம் நலிந்த குடும்பங்களுக்கு உதவுவதற்காகக் கிரேட்டர் நோய்டா பகுதியில் ஒரு மிகப் பெரிய மருத்துவமனை, பயிற்சி மற்றும் திறன் வழங்கல் திட்டத்தை அமைத்துள்ளது.

**44** **TRF மானியம்: வரமா சாபமா**
TRF நல்கைகளைப்பற்றிய ஐயங்களைத் தீர்த்துவைத்து, நுணுக்கங்களை விளக்கிய மகாப்ஸ் 21 மாநாடு.

**52** **சதுப்புநிலத் தோட்டங்கள் மற்றும் கழிவு மேலாண்மையில் கவனம்**
மாநாட்டின் சுற்றுச் சூழல் நீடித்திருத்தல் நிகழ்ச்சி, சதுப்பு நிலக்காடுகளைப் பாதுகாத்தல், குப்பைகளைப் போடும் இடத்தில் பிரித்தலின் முக்கியத்துவத்தை விவாதித்தது.

**56** **பள்ளி குழந்தைகளுக்கு ருத்ராபூர் ரோட்டரியின் பரிசு**
வெள்ளத்தில் அனைத்தையும் இழந்த குழந்தைகளுக்குத் தேவையான பள்ளிப் பொருட்களை வழங்கி வியக்கவைத்தது RC ருத்ராபூர்.

**72** **பார்வையற்ற மாணவர்களுக்கு புனேவில் ஒரு ரோட்ராக்ட் சங்கம்**
26 உறுப்பினர்கள் (அனைவரும் பார்வைக் குறைபாடு கொண்டவர்கள்) உள்ள RAC திவ்ய ஜெப்-ஐ ஆதரிக்கிறது RC புணே ஈஸ்ட்.

**74** **பசுமை ஆடைக்கு மாற வேண்டிய தருணம் இது!**
நம்முடைய பசுமைப் பத்தி, கண்டபடி ஆடைகளை வாங்கித் தள்ளுவதற்கும், ஆடைத் தொழில்துறையின் பன்னாட்டுக் கார்பன் உமிழ்வுக்கும் உள்ள இணைப்பைச் சுட்டிக்காண்பிக்கிறது.


RCs ரூர்கேலா ராயல் மற்றும் ரூர்கேலா க்ரீண் இணைந்து நடத்திய LN-4 செயற்கை கை பொருத்தும் முகாமில் பயனாளி ஒருவர் தன் புதிய கையால் எழுத பழகுகிறார்.

Scan our QR code & visit our Website


Scan our QR code & read our Magazine

## ரோட்டரி நியூஸ் மூலம் கண் முன் வந்த மஹாப்ஸ் சந்திப்பு

*நான் மஹாப்ஸ் சந்திப்பில் கலந்து கொள்ளாவிட்டாலும், அதுபற்றிய உங்கள் கட்டுரைகள் மிகச் சிறப்பாக இருந்தன, புகைப்படங்கள் கண்ணைக் கவர்ந்தன. அவை என்னை வீட்டில் இருந்தபடி சந்திப்பில் கலந்துகொண்டது போல் உணரச்செய்தன. சுருக்கமாக என்கிற பத்தி, ஆர்வமூட்டும் செய்திகள், விளையாட்டுத் துணுக்குகள் மற்றும் நேர்வித உணர்வைத் தூண்டும் நிகழ்ச்சி களுடைய நல்ல தொகுப்பு. மாற்றுத் திறனாளிகளுக்கு வலிக் குறைப்புப் பராமரிப்பை வழங்குகிற, அவர்கள் மன நலப் பிரச்சனையிலிருந்து மன நலனுக்கு மாற அவர்களுக்கு உதவுகிற RC அம்ராவதி மிட்-டவுனை நாம் பாராட்டவேண்டும். ரோட்டரி உலகின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றாக இந்த இதழை ஆக்குவதற்குப் பாராட்டுகள்.*

*டாக்டர் பசவ வராஹலு*
*RC ரஜோல் — D 3020*

*மஹாப்ஸ் பகுதிச் சந்திப்பின் வண்ணமயமான புகைப்படங்கள், விரிவான கட்டுரைகள் ஜனவரி இதழை ஈர்ப்பான, பாராட்டக்கூடிய தொகுப்பாக ஆக்கின. இந்த மிகப் பெரிய நிகழ்ச்சியைக் கவனமாகத் திட்டமிட்டு, கடின உழைப்பால் அதை வெற்றி பெறச் செய்த மஹாப்ஸ் தலைவர் PDG M முருகானந்தம் அவர்களுக்கும் அவருடைய குழுவினருக்கும் பாராட்டுகள், இந்த நிகழ்ச்சியின் அழைப்பாளராகத் தன்னுடைய தலைமையை வழங்கிய RID A S வெங்கடேஷ் அவர்களுக்கும் பாராட்டுகள்.*




*RNT குழு இந்த நிகழ்ச்சியைப்பற்றி எழுதியுள்ள கட்டுரைகளைப் படித்தபின், நாங்களே முழு நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டதுபோல் நாங்கள் உணர்ந்தோம். ரோட்டரி உலகில் நம் பகுதியைப் போல் வேறு எங்கும் நிறைய நல்ல பணிகள் நடைபெறுவதில்லை என்று RI தலைவர் சேகர் மேத்தா கூறுவது மிகச் சரி. சந்திப்புக் கட்டுரைகள், அம்சங்கள் வழங்கப்பட்ட விதமும் கட்டுரைகளும் ரோட்டரியன்களைப் பெருமையாக உணரச்செய்யும், ரோட்டரியை முன்னெடுத்துச்செல்வதில் அவர்களுக்குக் கூடுதல் அர்ப்பணிப்பை உண்டாக்கும்.*

*R ஸ்ரீனிவாசன், RC மதுரை*
*மிட்-டவுன் — D 3000*

*சந்திப்பில் நடைபெற்ற பண்பாட்டு நிகழ்ச்சியின் அட்டைப் படப் புகைப்படம் மிக நன்றாக இருந்தது. சேகர் மேத்தாவின் செய்தியாகிய உங்கள் தொழிலைப் பயன்படுத்தி வாழ்க்கைகளை மாற்றுங்கள் என்பது முக்கியமானது.*

*ஆசிரியர் குறிப்பாகிய சவாலான நேரத்தில் ஒரு பகுதிச் சந்திப்பு ஆர்வத்தை ஊட்டியது. அறங்காவலர் தலைவர் ஜான் ஜெர்ம் பன்னாட்டு இளம்பிள்ளைவாத அகற்றல் முன்னெடுப்பைப்பற்றி வழங்கிய செய்தி மிக நன்றாக இருந்தது. ரோட்டரியில் சவால்களைக் கையாளுதல் என்ற ரஷீதாவின் கட்டுரை மிக நன்றாக இருந்தது, DEI கொள்கைகள் ரோட்டரியின் வளர்ச்சி க்குக் கட்டாயமானவை என்ற கிரணின் கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது.*

*டேனியல் சிட்டிலப்பிள்ளி*
*RC கலூர் — D 3201*

*சவால்களை எதிர்கொள்வோம்! என்ற முழுக் கட்டுரையும் எழுதப்பட்டிருந்த விதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த உள்ளடக்கத்தை அந்த வடிவத்தில் பதிப்பித்ததும், அந்த நிகழ்ச்சியின் தகவல்களை வாசகர் களுக்கு உண்மையாகக் கொண்டு வந்ததும் மிகுந்த நேர்மையைக் காண் பிக்கிறது. மேலிருந்து கீழ் நோக்கும் இந்த அணுகுமுறையை நாங்கள் பாராட்டுகிறோம். சங்கங்கள் இலக்குகள் மற்றும் உறுப்பினர்களைவிடச்*

### ரோட்டரி நியூஸின் மிகச் சிறந்த கட்டுரை

இந்தியாவின் பால் சாதனையாளர் வர்கீஸ் குரியனைப்பற்றி டிசம்பர் இதழில் வெளியான கட்டுரைதான் ரோட்டரி நியூஸில் நான் படித்துள்ள மிக ஆர்வமூட்டும் கட்டுரை. குரியன் மற்றும் அவருடைய சாதனைகளைப்பற்றி நான் வேறு இடங்களில் படித்திருந்தாலும், நான் அவரைப்பற்றி இதுவரை அறியாத அவருடைய இன்னொரு பக்கத்தை உங்கள் கட்டுரை வெளிக் கொண்டு வந்தது. அவருடைய விரைவான அறிவு, பொதுப் பணத்தின் மீது அக்கறை, அதிகாரத் துவத்தினர் மீது கடுமை மற்றும் விவசாயிகள்மீது பச்சாத்தாபம் ஆகியவை, நம் நாட்டின் மிக உயர்ந்த கூட்டுறவு நிறுவனங்களில் ஒன்றைப் பாதுகாக்க அவருக்கு உதவின.

K ரவீந்திரகுமார்
RC கரூர் — D 3000

### தேர்தல் பிரச்சனைகள்

ஜனவரி இதழில் ரோட்டரி யில் தேர்தல்களைப் பற்றி RID மகேஷ் கோட்பாகி அவர்களுடைய பத்தியைப் பதிப்பித்திருக்கவே கூடாது. 1982ல் ரோட்டரி நியூஸ் அமைக்கப்படுவதில் முக்கியப் பங்காற்றிய எனக்கு அதன்மீது மிகுந்த மதிப்பு இருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக, இப்போது நான் அதை இழந்துவிட்டேன். ஏனெனில், இது போன்ற உள்ளடக்கம்

*சமூகத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினால், உறுப்பினர்கள் ரோட்டரியை மகிழ்ந்து அனுபவிக்கும் நிகழ்தகவும் குறிப்பிடக்கூடிய அளவில் கூடுதலாகும்.*

*விவேக் கண்டேல்வால்*
RC *தியோனர்* — D 3141

*ரோட்டரியினர் தங்கள் தொழில்களைப் பயன்படுத்தி வாழ்க்கைகளை மாற்றச் சேவை புரியவேண்டும் என்று கோருகிற* RI *தலைவர் மேத்தா-வின் செய்தி ஊக்கம் அளிக்கிறது. ரோட்டரியில் தேர்தல்களைப்பற்றிய* RID *மகேஷ் கோட்பாகி-யின் செய்தி நம் கண்களைத் திறக்கிறது. "வரலாறு படைப்போம்வோம்" என்ற* RID *வெங்கடேஷின் கட்டுரை குறிப்பிடவேண்டியது. இந்தியாவில்* 10 *ஆண்டுகளாக ரோட்டரியின் மிகச் சிறந்த பணியைப்பற்றிப் படித்து மகிழ்ந்தோம். கபில் தேவின் உரை, ரோட்டரியில் சவால்களைக் எதிர் கொள்வோம் என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது.*

*மஹாப்ஸ்* 21*ன் புகைப்படங்கள், விவரிப்பு மிக நன்றாக இருந்தது.* PRIP *ராஜேந்திர சாபூ அவர்களின் அவர் ரோட்டரியை இமாலய உயரங்களுக்கு உயர்த்தினார் என்ற அஞ்சலிக் கட்டுரையும் ஆர்வம் ஊட்டின.*

*ஃபிலிப் முலப்பொனெ* M T
RC *திருவனந்தபுரம்* — D 3211

ரோட்டரியன்களுடைய அறிவை அவமதிக்கிறது. இப்படி எழுதுவதற்கு மிகுந்த துணிவும் பாசாங்குத்தனமும் வேண்டும்!

சஜ்ஜன் கோயங்கா
RC பாம்பே வெஸ்ட் — D 3141

தேர்தல்களைப்பற்றிய RID கோட்பாகி அவர்களுடைய செய்தி நம்பிக்கை அளித்தது. எனக்கு இதே போன்ற எண்ணங்கள் உள்ளன, ஆனால், ரோட்டரியின் நெடுங்காலப் பண்பாடுகளால் அவற்றை வெளியில் சொல்லும் தன்னம்பிக்கை வரவில்லை. தேர்தல்கள் அமெரிக்க அதிபர் தேர்தல்களைப்போல் நடத்தப்படவேண்டும் என்று நான் உணர்கிறேன். அனைத்துப் போட்டியாளர்களும் வாக்காளர்கள் முன்னிலையில் ஒரு திறந்த விவாதத்தில் ஈடுபடவேண்டும், நிலுவைத் தொகை இல்லாத ரோட்டரியன்கள்மட்டும்தான் வாக்களிக்கவேண்டும்.

ஒரு சங்கம் செலுத்தவேண்டிய தொகைகள் செலுத்தப்படாவிட்டால், தலைவர்-செயலாளர்-பொருளாளர் குழு வாக்களிக்கத் தடை விதிக்கப் படவேண்டும். இவை தீவிரமான யோசனைகள் என்று எனக்குத் தெரியும், ஆனால், இவற்றைக் கருத்தில் கொண்டு முன்னெடுத்துச் செல்லலாம்.

ஆனந்த் K சர்மா, RC கல்கத்தா
பார்க் பாயின்ட் — D 3291

RI இயக்குநர் மகேஷ் கோட்பாகியைப் போன்ற ஒரு மூத்த தலைவர் தன்னுடைய பத்தியின் வழியாக ரோட்டரியில் தேர்தல்களைப்பற்றிய தன் கவலையை வெளிப்படுத்த வேண்டிய காரணம் என்ன என்று நாம் சிந்திக்கவேண்டும். ரோட்டரி தன்னுடைய உயர் தரநிலைகளில் இருந்து வீழ்ந்திருந்தால் அதற்குக் காரணம், சில தலைவர்கள் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியைத்தான் கவனிக்கிறார்கள், தங்களுக்குப் பிடித்த ஆட்களைச் சங்கங்களின் தலைமைப் பொறுப்புகளில் அமர்த்துகிறார்கள். இதனால், நெறிமுறைகள் இல்லாத சிலர் இந்தப் பொறுப்புகளுக்கு வந்து விடுகிறார்கள்.

மூத்த தலைவர்கள் மட்டு மின்றி, ஒவ்வொருவரும் இந்தப் பிரச்சனையைத் தீர்க்கவேண்டும், அது நம் கடமை, இல்லாவிட்டால், ரோட்டரி தன் நற்பெயரை இழந்து விடும்.

அர்விந்த் டுடாவட்
RC குவாலியர், D — 3053

கொல்கத்தாவில் செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாம் என்ற கட்டுரை தொடர்பாக நான் தெரிவிக்க விரும்புகிற ஒரு செய்தி, 1986லிருந்து மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோருக்குச் செயற்கைக் கை, கால்களைப் பொருத்திப் பலன் தந்துள்ள மகாவீர் சேவா சதனின் மூத்த உறுப்பினர்களில் நானும் ஒருவன். மனித குலத்துக்கான இந்தச் சேவைக்கு மிகப் பெரிய அளவில் பங்களிக்கும் அமைப்புகளில் ரோட்டரி சங்கங்களும் ஒன்று.

பியுஷ் தோஷி
RC பேளூர் — D 3291

### மெட்ராஸ் மிட்-டவுனின் புற்றுநோய்ப் பராமரிப்புத் திட்டம்

RC மெட்ராஸ் மிட்-டவுனின் பாராட்ட வேண்டிய இந்தக் கட்டுரையைப் பற்றி எழுதியதற்கு நன்றி. வறுமையான பின்னணி யிலிருந்து வருகிற நோயாளிகளை நிதி உதவிக்காக நான் இங்கு அனுப்பியுள்ளேன், இவர்களுடைய ஆதரவின் மிக ஈர்ப்பான பகுதி, எந்தவொரு கோரிக்கைக்கும் இவர்கள் பதில் அளிக்கும் விரைவு. மிகச் சிறந்த இந்தச் சேவை இன்னும் பல ஆண்டுகள் தொடரவேண்டும் என்று நான் அவர்களை வாழ்த்துகிறேன்.

நிகில் சிங்கி, RC சென்னை
கேலக்ஸி — D 3232

We welcome your feedback.
Write to the Editor:
**rotarynews@rosaonline.org;**
**rushbhagat@gmail.com.**
Mail your project details,
along with hi-res photos, to
**rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

# ‘ரோட்டரி சேவை நாள்’ கொண்டாடுவோம்

SERVE TO CHANGE LIVES

ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில், நான் சங்கங்களுக்கு ஒரு சவால் விட்டேன்: எதார்த்தமான மற்றும் செயல் சார்ந்த ரோட்டரி சேவை நாள் ஒன்றையாவது திட்டமிட்டு நடத்தவேண்டும். அந்த நிகழ்ச்சி, ரோட்டரியின் கவனப் பகுதிகளில் ஒன்றுடனோ பலவற்றுடனோ பொருந்துகிற, உங்கள் சமூகம் சந்திக்கிற ஒரு சவாலைக் கையாளவேண்டும், ரோட்டரிக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் தன்னார்வலர்களை ஒன்றுதிரட்டவேண்டும்.

ரோட்டரி சேவை நாட்கள், புதுமைச் சிந்தனை கொண்ட மற்றும் தாக்கம் நிறைந்த திட்டங்களைத் திட்டமிடுவதற்கு ரோட்டரி, ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கங்களை ஊக்குவிக்கலாம். அவை செயல் வீரர்களாகிய உங்கள் பணியைச் சுட்டிக்காட்டலாம், வருங்கால உறுப்பினர்களுக்கு உங்கள் சங்கத்தை அறிமுகப்படுத்தலாம்.

இந்தச் சவாலுக்கு இதுவரை நீங்கள் காண்பித்துள்ள எதிர்வினை எனக்கு ஊக்கம் அளிக்கிறது; அதில் எனக்குப் பிடித்த ஒரு திட்டத்தைப் பற்றி நான் உங்களுடன் பேச விரும்புகிறேன்.

இந்தியாவில் நீரிழிவு என்பது மரணத்துக்கான முன்னணிக் காரணங்களில் ஒன்று. இங்கு 74 மில்லியன் மக்களுக்கு நீரிழிவு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், இந்த மக்களில் சுமார் 50% பேருடைய நோய் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.


ரோட்டரியும் இந்தியாவில் நீரிழிவு ஆய்வுக்கான ஆராய்ச்சிச் சங்கமும் சேர்ந்து, நீரிழிவு கொண்ட மக்களுடைய நோயைக் கண்டறிகிற, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கிற அவசரத் தேவையை உணர்ந்துள்ளோம். நாங்கள் மற்ற அமைப்புகளுடன் இணைந்து, உலக இதய நாளாகிய 29 செப்டம்பர் அன்று ஒரு தேசிய ரத்த குளுக்கோஸ் பரிசோதனை முகாமை நடத்தினோம்.

இந்த முகாம், இந்தியாவில் 10,000க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்றது, இந்த முயற்சியில் 2,000க்கும் மேற்பட்ட ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள் பங்கேற்றன. ஒரே நாளில், 1 மில்லியனுக்கும் மேற்பட்ட ரத்தச் சர்க்கரைப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இந்தச் சாதனையை ஆசியச்சாதனைப் புத்தகம் அங்கீகரித்துள்ளது. ஆனால், சாதனை முறியடிப்பை விட முக்கியமான விஷயம், தாங்கள் நீரிழிவுடன் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடும் என்கிற உண்மையைப் பத்தாயிரக்கணக்கான மக்கள் தெரிந்துகொண்டார்கள். இப்போது, அவர்களுடைய பிரச்சனைக்குச் சிகிச்சை வழங்கலாம்; அத்துடன், கோவிட்-19 மற்றும் நீரிழிவினால் உண்டாகக்கூடிய அல்லது மோசமாகக்கூடிய வேறு பல நோய்களுக்கு எதிராகத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் கூடுதல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம், ரோட்டரியின் ஆண்டு விழா நாளாகிய பிப்ரவரி 23ஐ இன்னும் கூடுதலான சேவை நாட்களோடு கொண்டாடுவோம், நம் கவனப் பகுதிகளில் ரோட்டரியின் பணியை வெளிச்சம் போட்டுக் காண்பிப்போம். குறிப்பாக, பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதில் கவனம் செலுத்தும் திட்டங்களை நீங்கள் நிறைவேற்றவேண்டும் என்று நான் ஊக்குவிக்கிறேன்.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்து வாருங்கள் என்கிற நெறிமுறை நல்ல பலன்களை அளிப்பதை எண்ணியும் நான் மகிழ்கிறேன். எல்லாச் சங்க உறுப்பினர்களும் குறைந்தது ஒருவரை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்துவதை நாம் உறுதி செய்வோம்.

நாம் எதைச் செய்தாலும் சரி, வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை புரியவேண்டுமென்றால், மேலும் வளர்வதற்கும் மேலும் செய்வதற்கும் நாம் நம்மை ஊக்குவித்துக்கொள்ளவேண்டும் என்பதை நினைவில் வையுங்கள்.



Shekhar Mehta

**சேகர் மேத்தா**
**RI தலைவர்**



# குடிநீர் திட்டங்களை முடுக்கி விடுங்கள்!

இந்த இதழில் ஜெய்ஸ்ரீயின் கட்டுரை (பக். 20) விளக்குவது போல, மும்பையில் உள்ள சில ரோட்டரி மற்றும் இன்னர்வீல் சங்கங்கள் மகாராஷ்டிரம் மற்றும் குஜராத்தின் சில கிராமங்களில் உள்ள ஏழைப் பெண்களுக்கு வழங்கி வரும் "வாட்டர் வீல்" போன்ற எளிய சாதனங்கள் வரப்பிரசாதமாக உள்ளன. கிராமத்தில் உள்ள கிணறு அல்லது சமுதாயக் குழாய்கள் மூலம் தங்களது வீடுகளுக்கு குடிநீர் எடுத்துச் செல்வதற்கான சாதனம்தான் வாட்டர் வீல். உருளையான, அதிக அடர்த்தி கொண்ட பிளாஸ்டிக் டிரம். இதில் 50 லிட்டர் தண்ணீரைத் தேக்கிவைக்க முடியும். இந்த வலுவான கன்டெய்னரில் ஒரு உலோக கைப்பிடி பொருத்தப்பட்டுள்ளது. இது எந்த கடினமான பாதையிலும் டிராலிபோல உருண்டு செல்லக்கூடியது. இது தலையில் அல்லது இடுப்பில் தண்ணீர் குடங்களை சுமந்து செல்வதிலிருந்து விடுதலை அளிக்கிறது.

இந்தியாவில் ஊரகப்பகுதிகளில் மட்டுமின்றி டவுன் மற்றும் நகர்ப்பகுதிகளிலும் லட்சக்கணக்கான பெண்கள் தலையில் தண்ணீர் குடங்களை சுமந்து செல்வதை நாம் பார்த்திருக்கிறோம். ஏனெனில் சமூகத்தில் வீட்டு வேலைகளுக்கு தண்ணீர் எடுப்பது பெண்களின் வேலை யாகவே கருதப்படுகிறது. மகாராஷ்டிரம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களில் வறட்சியான பகுதிகளில் ஆயிரக்கணக்கான பெண்கள் 2 கி.மீ. தொலைவு வரை நடந்து சென்று தலையில் தண்ணீர் குடங்களைச் சுமந்து வருகிறார்கள். நாட்கணக்கில், மாதக் கணக்கில், வருடக்கணக்கில் இப்படி தண்ணீர் சுமந்து வரும் பெண்களின் முழங்கால், முதுகு மற்றும் தோள்களில் ஏற்படும் வலியை நாம் கற்பனை செய்துதான் பார்க்க முடியும்.

ஆனால், இந்த புதிய சாதனம், பெண்கள் தலையில் தண்ணீர் குடங்களை சுமந்து வருவதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. அது மட்டுமல்ல, இந்த புதிய முறை வீட்டிலுள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் தாங்களாக முன்வந்து வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் தண்ணீர் எடுத்து வரத்தூண்டுகிறது. இதன் மூலம் பெண்கள் உடல் ரீதியாக பாதிக்காத வகையில் வீட்டு வேலைகளைச் செய்ய முடிகிறது.

இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற வளரும் நாடுகளில் சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காகச் செயல்படும் அமெரிக்காவின் சமூக நிறுவனமான Wello-வின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாகியுமான சிந்தியா கோனிக் என்ற பெண்மணியின் முன்முயற்சியால் வாட்டர் வீல் இயந்திரம் உருவாக்கப் பட்டது. இதற்காக அவருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அவர் முதல் முதலாக 2010ம் ஆண்டு ஆய்வுப் பயணமாக ராஜஸ்தான் வந்தார். கிராம மக்களிடம் தண்ணீரை சுமந்து செல்வதற்கு பதிலாக இழுவை இயந்திரம் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்வது குறித்து விவாதித்தார். எதிர்பார்த்தபடியே கிராமப்புற பெண்களுக்கு அவர் சொன்ன யோசனை பிடித்திருந்தது. இந்த வாட்டர் வீல் இயந்திரம் கிராம மக்களை, குறிப்பாக ஆண்களை வெகுவாக கவர்ந்தது.

இந்தியாவில் வர்த்தக ரீதியாக பிளாஸ்டிக் பொருள்களைத் தயாரித்து வரும் நீல்கமல் நிறுவனம் Wello என்ற பிராண்ட் பெயரில் வாட்டர் வீல் இயந்திரங்களைத் தயாரித்து வருகிறது. ரோட்டரி இந்த இயந்திரங்களை ரூ.2,100 என்னும் சலுகை விலையில் வாங்கி பெண்களுக்கு ரூ.100 விலையில் விநியோகித்து வருகிறது. RID 3141க்கு உட்பட்ட பாம்பே ஹாங்கிங் கார்டன் ரோட்டரி சங்க உறுப்பினர் அம்ரிஷ் டாஃப்தரி, இதுபற்றி ரோட்டரி செய்தியிடம் கூறுகையில், 2016ம் ஆண்டு முதல், தனது குழு குஜராத் மற்றும் மகாராஷ்டிரத்தில் இதுவரை 4,000 வாட்டர் வீல்களை பல்வேறு கிராம மக்களுக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா, சங்கங்கள் மிகப்பெரிய, துணிச்சலான திட்டங்களைச் செயல்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இதையடுத்து இளம் ரோட்டரி சங்கமான தில்லி அனந்தா ரோட்டரி சங்கம் ரூ.8.5 கோடியில் ஒரு மெகா திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. (இது பற்றிய விவரங்களும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளது). ஏழை மற்றும் கிராமப்புற பெண்களுக்கு வாட்டர் வீல் சாதனங்களை வழங்கும் திட்டத்துக்கு இந்தியாவில் உள்ள 4,000த்துக்கும் மேலான ரோட்டரி சங்கங்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Pradhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.




# பெண்களின் ஆற்றலை மேம்படுத்துவோம்

பெண்களுக்கு ஆற்றல் அளிப்பது அவர்களின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதற்கு முக்கியமாகும். பொருளாதார முன்னேற்றத்தை, சமூக மாற்றத்தை, பொதுவான முன்னேற்றத்தை விரைவாக்கவேண்டுமென்றால், பெண்கள் ஆற்றல் பெறவேண்டும். பெண்கள் இன்னும் வலுவானால், குழந்தைகள், குடும்பங்களும் இன்னும் வலுவாவார்கள். சமமான வாய்ப்புகளைக் கொண்ட நியாயமான, சமமான சந்தை ஒன்றை அமைப்பதன் மூலம் நாம் அவர்களை ஆதரிப்பது மிகவும் முக்கியம்.

ரோட்டரி சங்கங்களுடன், பல NGOக்கள், அரசுத் திட்டங்களும் பெண்களுக்கு ஆதரவளிக்கின்றன, அவர்கள் தங்களுடைய திறன்களை வளர்த்துக்கொள்ளவும், அவற்றைத் தொழில்முறையில் பயன்படுத்தவும், அதன்மூலம் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் சொந்தக் காலில் முன்னேறச் செய்கிற ஒரு வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ளவும் உதவுகின்றன.

பெண்கள் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளும் மன்றங்களை உருவாக்குவதற்கு நாம் முக்கியத்தும் தரவேண்டும், நீதிச் செயல்முறையை விரைவாக்குவதற்கு நீதி மற்றும் அறிவுறுத்தல் தொழில் வல்லுனர்களுடைய குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

பெண்களுடைய எழுத்தறிவு மற்றும் கல்வித் திட்டங்களுடன், பள்ளிகளில் தற்காப்பைக் கற்றுத்தருவது பெண்களுடைய நம்பிக்கை, சுய மதிப்பை மேம்படுத்தலாம், அதன்மூலம், தேவைப்படும்போது சரியான தீர்மானங்களை எடுக்க அவர்களுக்கு உதவலாம்.

வலுவற்ற மனங்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைவான உடல்களை நோய்கள் தாக்குகின்றன என்பதால், தூய்மை மற்றும் முறையான ஊட்டச்சத்தை நாம் வலியுறுத்தவேண்டும். மாதச் சுழற்சித் தூய்மையைச் சுட்டிக்காண்பிக்கவேண்டும், சானிட்டரி நாப்கின்களை அகற்றுவதற்குப் போதுமான வசதிகள் இல்லாமல் இருத்தல், வீடுகளில் மூட நம்பிக்கை எண்ணங்கள் ஆகியவற்றால், மாதச் சுழற்சியின் போது பெண்கள் பள்ளிகளுக்கு வராமல் இருப்பது மிகுதியாகிறது என்று தரவுகள் காண்பிக்கின்றன. மாதச் சுழற்சித் தூய்மை மேலாண்மையை வலியுறுத்தவேண்டும், தூய்மையான, சுகாதாரமான அகற்றல் வசதிகள் வழங்கப்படவேண்டும். அத்துடன், நோய்த் தொற்றுகள் பரவுவதைக் கட்டுப் படுத்துவதற்காக, பயன்படுத்தப்பட்ட தயாரிப்புகளை அகற்றுவதுபற்றிய பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

கனவுகளைக் கொண்ட சிறுமிகள் தொலைநோக்குப் பார்வை கொண்ட பெண்களாக ஆகிறார்கள்” என்பார்கள். நாம் வலுவான பெண்களை வரவேற்போம்! அவர்களை அறிவோம், அவர்களுடன் இருப்போம், அவர்களை வளர்ப்போம்...





**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# ரோட்டரி விளம்பர தூதராக மாறுங்கள்!



பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை என்பது பழங்கால பழமொழி. மேலும் கலாசார ரீதியாக நம்மில் பெரும்பாலானோர் வலது கை கொடுப்பதை இடது கை அறியக்கூடாது என்ற நம்பிக்கையுடன் வளர்ந்துவிட்டோம். இத்தகைய நம்பிக்கையின் விளைவாக, நாம் பாரம்பரியமாகவே நமது சேவைத் திட்டங்களை விளம்பரப்படுத்தாமல் இருந்துவிட்டோம். உறுப்பினர்களின் வளர்ச்சி நமது முதன்மையான உள்முன்னுரிமையாகத் தொடரும். அதே வேளையில் அதற்கு இரண்டு விதமான அணுகுமுறைகள் இருக்கலாம். ஒன்று ரோட்டரியை சமூகத்துக்குள் புகுத்துவது. இதன் மூலம் சிலரை உறுப்பினர்களாகச் சேர்க்க முடியும். மற்றொன்று சமூகத்திற்கு நாம் செய்யும் சேவைகளை சரியான முறையில் விளம்பரப்படுத்தி, அதன் மூலம் ரோட்டரியில் இடம்பெறுவதை லட்சிய நோக்காக உள்ளவர்களை ரோட்டரிக்கு இழுப்பது. ரோட்டரிக்கு மக்களை இழுக்கும் இந்த உத்தியானது நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும்.

கடந்த காலங்களில் தீவிர உறுப்பினர் சேர்க்கைக்கு யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அதில் ஓரளவு நாம் வெற்றிபெற்றிருந்தாலும், ஒருவர் கனவு காணும் நிலையான வளர்ச்சியை எட்டமுடியவில்லை. நாம் இதையே தொடர்ந்து செய்தால், அதே பலன்களைத்தான் தொடர்ந்து பெறுவோம். நாம் இனி வேறு வகையான உத்தியைப் பின்பற்றி வேலை செய்வோம். அதன் தொடக்கப் புள்ளியாக நமது அமைப்பு பற்றி பொதுமக்களிடம் உள்ள எண்ணத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். நீண்டகாலமாக ரோட்டரி செய்துள்ள சேவைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தாமல், ரோட்டேரியன்களை மேம்படுத்துவதில் தான் கவனம் சென்றது. நாம் சொல்லும் கதைகள் சேவைகள், பயனாளிகள் பற்றியதாக இருக்கட்டும். சமூகத்திற்கு நாம் செய்த சேவைகளை விளம்பரப்படுத்துவோம்.

நமது பிராந்தியத்தில் ரோட்டரி சங்கங்கள் பல்வேறு பயனுள்ள சேவைத் திட்டங்களை நிறை வேற்றியுள்ளன. இவற்றை நாம் முறையாக விளம்பரப்படுத்தினால் தான் பலரையும் ரோட்டரிக்குள் இழுக்க முடியும். நமக்கு உறுப்பினர்கள் தேவை என்பதுடன், சரியான காரணங்களுடன் சரியான நபர்கள் உறுப்பினர்களாகச் சேரவேண்டும் என்பதுதான் முக்கியமானது. நாம் ஒவ்வொருவரும் மனசாட்சியுடன் ரோட்டரியின் விளம்பர தூதராக மாறவேண்டும். பல்வேறு முன்முயற்சி களை மேற்கொண்டால் உறுப்பினர்கள் சேர்க்கை இலக்கு கனவாகவே தொடராமல் நனவாகிவிடும்.

ரோட்டரி பற்றி பேசுவோம்! அதற்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


## Board of Trustees

Shekhar Mehta RID 3291
**RI President**

Dr Mahesh Kotbagi RID 3131
**RI Director &**
**Chairman, Rotary News Trust**

AS Venkatesh RID 3232
**RI Director**

Gulam A Vahanvaty RID 3141
**TRF Trustee**

Rajendra K Saboo RID 3080
Kalyan Banerjee RID 3060
Panduranga Setty RID 3190
Ashok Mahajan RID 3141
P T Prabhakar RID 3232
Dr Manoj D Desai RID 3060
C Basker RID 3000
Dr Bharat Pandya RID 3141
Kamal Sanghvi RID 3250

### Executive Committee Members (2021–22)

Gaurish Dhond RID 3170
**Chairman**
**Governors Council**

Anup Mittal RID 3011
**Secretary**
**Governors Council**

Ramesh Meher RID 3030
**Secretary**
**Executive Committee**

V Thirupathi Naidu RID 3160
**Treasurer**
**Executive Committee**

Jacintha Dharma RID 3212
**Member**
**Advisory Committee**




**Editor**
Rasheeda Bhagat

**Deputy Editor**
Jaishree Padmanabhan

**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Now share articles from
*rotarynewsonline.org*
on WhatsApp.

# உலக அமைதிக்கான ரோட்டரியின் சேவை



ரோட்டரியின் ஆண்டு விழா மாதமாகிய பிப்ரவரி மாதம் அமைதியைக் கட்டமைத்தல் மற்றும் முரண்களைத் தடுத்தல் மாதமும்கூட. நம்முடைய பன்னாட்டு மற்றும் மாவட்ட நல்கைகளின் வழியாக, ரோட்டரி அறக்கட்டளை அமைதிக்கான ஒரு படையாகச் செயல்படுகிறது, இந்த நிதிகளைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தும் நீங்களும் தான். எழுத்தறிவை முன்னிறுத்தும் ஒரு நல்கை அந்தச் சமூகத்திலும் அதைத் தாண்டியும் மேம்பட்ட புரிந்துகொள்ளல் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்புக்கு வழிவகுக்கலாம். இது அமைதிக்கான அடித்தளத்தை அமைக்கிறது.

ரோட்டரியின் தொடக்க நாட்களிலிருந்தே, அமைதியை, புரிந்துகொள்ளலைச் சுறுசுறுப்பாகக் கட்டமைக்கும் பணி ரோட்டரியின் ஒரு தனிச்சிறப்பாக இருந்து வந்துள்ளது. ஆனால், 1999ல் ரோட்டரி அமைதி மையங்கள் உருவாக்கப் பட்ட பிறகு, இந்த ஆண்டு, அமைதித் தோழர்களுடைய தொடக்க வகுப்பின் 20வது ஆண்டு விழா ஆகும். புதுமைச் சிந்தனை கொண்ட இந்தத் திட்டம் முரணின் வேர்களை வலுவாக, கல்வி அடிப்படையில் புரிந்துகொள்வதையும், உண்மையான உலகப் பிரச்சனைகளைத் தீர்க்கிற எதார்த்தமான உத்திகளையும் தொடர்ந்து இணைத்துவருகிறது.

கோவிட்-19 நோய்ப்பரவலின் தாக்கங்களையும் தாண்டி, ரோட்டரி அமைதி மையங்களால் தங்களைத் தகவமைத்துக் கொள்ள இயன்றது. இப்போது, நம்முடைய ஏழு மையங்களில் மாணவர்கள் தங்களுடைய இயல்பான செயல்பாடுகளை மீண்டும் தொடங்குகிறார்கள். உகாண்டாவில் உள்ள கம்பாலாவில் இருக்கும் மகெரெரெ பல்கலைக்கழகத்தில் உள்ள நம்முடைய மிகப் புதிய மையத்தில் உள்ள இளம் அமைதிக் கட்டமைப்பாளர்களும் தங்கள் செயல்பாடுகளைத் தொடங்கிவிட்டார்கள். அமைதித் தீர்வுகள் தேவைப்படும் ஒரு பகுதியில் தங்களுடைய புதிய அறிவு மற்றும் திறன்களைச் செயல்படுத்த அவர்கள் தயாராகிறார்கள்.

2024ல் நாம் தொடங்கத் திட்டமிட்டுள்ள நம்முடைய எட்டாவது மையத்தை அமைப்பதற்காக மத்திய கிழக்கு அல்லது வட ஆப்பிரிக்காவில் சாத்தியமுள்ள இடங்களை நம் குழு ஆராய்ந்து வருகிறது. உலக அமைதிக் கல்விக்கான ரோட்டரியின் முயற்சிகளில் இது ஒரு குறிப்பிடக்கூடிய படிநிலையாகும். நம்முடைய அடுத்த இலக்கு, 2030க்குள் லத்தீன் அமெரிக்காவில் ரோட்டரி அமைதி மையம் ஒன்றைத் திறப்பது. கடந்த 117 ஆண்டுகளில், ரோட்டரி நன்மைக்கான ஓர் உலக விசையாக வளர்ந்துள்ளது, நம் முயற்சிகள் அனைத்திலும் அமைதி மற்றும் புரிந்துகொள்ளலை முன்னிறுத்தியுள்ளது.

**ஜான் F ஜெர்ம்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்



# உங்கள் இலக்குகளை மறு ஆய்வு செய்யுங்கள்



ரோட்டரி உலகில், ஜனவரி என்பது ரோட்டரி ஆண்டின் இரண்டாம் பாதியின் தொடக்கத்தைக் குறிக்கிறது. சூழ்நிலை மெல்ல இயல் பாகிறது என்று நாம் நினைத்த நேரத்தில், கோவிடின் புதிய வடிவம் மீண்டும் இயல்பு வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு விட்டது. நம்மில் பலர் வீட்டிலிருந்து வேலை செய்யப் பழகிக்கொண்டு விட்டோம். ஆனால், பயணம் மற்றும் விருந்தோம்பல் தொழில்துறையில் பணியாற்றுவோருடைய நிலைமையை எண்ணிப் பாருங்கள், அவர்களில் பலருக்கு வேலை போய் விட்டது, இன்றுவரை இன்னொரு வேலை கிடைக்க வில்லை. பள்ளிகள் கிட்டத்தட்ட இரண்டாண்டுகளாக மூடியிருக்கின்றன. பள்ளிக் குழந்தைகளின் முழுத் தலைமுறை ஒன்று இந்த நோய்ப் பரவலுக்கு மிக மோசமான விலையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் பல திட்டங்களை ரோட்டரி அறக்கட்டளை நடத்து கிறது. இந்த வாய்ப்புகளைப்பற்றிச் சங்கங்கள் மாவட்டத் தலைமையுடன் உரையாடலாம். முன்பு, நான் அரையாண்டு ஆராய்ச்சிக்கான தேவையைப் பற்றிப் பேசினேன். அறக்கட்டளையைப் பொறுத்தவரை, இந்த ஆய்வு, பகுதி நிலையில் செய்யப்படுகிற ஒரு முக்கியமான செயல்பாடாகும். நான்கு மண்டலங்களும் இதற்காகத் தனித்தனிக் கூட்டங்களை நடத்துகின்றன, ஒவ்வொரு DGயும் அந்த மாவட்டத்தின் இப்போதைய TRF நிலை, வருங்காலத் திட்டங்களைப்பற்றிப் பேசுகிறார்கள். அந்தந்தப் பகுதிகளின் RRFC, EMGA, EPNC, ARRFCகள், RISAOன் TRF ஊழியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட RI இயக்குநர் இக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார், இதற்கு TRF அறங்காவலரான நான் தலைமை தாங்குகிறேன். இங்கு குழுப்பணி வலியுறுத்தப்படுகிறது.

ஆண்டுக்கு நடுவில் நடைபெறும் இந்த ஆய்வை ஒவ்வொரு DGயும் சங்கத் தலைவரும் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன், இதில் TRF பங்களிப்புகளை மட்டும் பேசினால் போதாது, உறுப்பினர் எண்ணிக்கை இலக்குகள், சேவைத் திட்டங்கள், உள்ளூர்ச் சமூகத்தைத் தடுமாறச் செய்துள்ள நோய்ப்பரவல் தொடர்பான பிரச்சனை களையும் பேசவேண்டும்.



**குலாம் வாஹன்வதி**
TRF அறங்காவலர்

# 11 ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு விலையேற்றம்

*அன்புள்ள வாசகர்களுக்கு*

*ரோட்டரி நியூஸ் இதழ் 2011லிருந்து விலை ஏறாமல் வெளியாகிவருகிறது. உண்மையில், 2014ல் ஆண்டுச் சந்தா ரூ.480லிருந்து ரூ.420 ஆகக் குறைக்கப் பட்டது.*


*தாளின் விலை, பிற உள்ளீட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் தொடர்ந்து உயர்ந்து வருவதால், RNT வாரியம் சந்தா விலையை மாதத்துக்கு வெறும் ரூ.5 மட்டும் உயர்த்தத் தீர்மானித்துள்ளது. அதாவது, ரூ.35லிருந்து ரூ.40.*

*இதனால், வரும்* **ஜூலை 2022***லிருந்து ரோட்டரி நியூஸ் (ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தமிழ்) ஆண்டுச் சந்தாத் தொகை ஒவ்வோர் உறுப்பினருக்கும் ரூ.420 இலிருந்து (பல ரோட்டரியன்களுக்குப் பிடிக்காத தொகை இது!)* **ரூ.480** *ஆக உயரும்.*

*மின் பதிப்புக்கான ஆண்டுச் சந்தா* **ஜூலை 2022** *முதல் ரூ.360லிருந்து* **ரூ.420***க்கு உயரும்.*

*உங்கள் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை நாங்கள் நாடுகிறோம்.*

*ஆசிரியர்*




*சந்தாத் தொகையை இணையத்தில் செலுத்தலாம்:*

Scan here to pay

**பெயர்:** Rotary News Trust

**வங்கி:** HDFC *வங்கி, மொண்டீய்த் ரோட், எழும்பூர், சென்னை*

SB **கணக்கு எண்:** 50100213133460

IFSC: HDFC0003820

*தொகையை அனுப்பிய பிறகு, UTR எண், சங்கத்துடைய பெயர், தலைவர்/ செயலாளருடைய பெயர், தொகை மற்றும் பரிமாற்ற நாளை மின்னஞ்சல் அல்லது வாட்ஸாப்மூலம் தயவுசெய்து பகிர்ந்து கொள்ளுங்கள்.*

*எங்கள் மின்னஞ்சல் முகவரி:* rotarynews@rosaonline.org
*வாட்ஸாப்:* 9840078074

சந்தாப் படிவத்தை இங்கிருந்து தரவிறக்கம் செய்யலாம். *https://rotarynewsonline.org/wp-content/uploads/2022/01/Subscription-Form-22–23.pdf*

# கை கொடுக்கும் ரூர்கேலா ரோட்டேரியன்ஸ்!

ரஷீதா பகத்

இந்த ஆண்டு ராக்கி பண்டிகைக்கு சற்று முன்பு, ரூர்கேலா ராயல் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் அஜய் அகர்வால், தனக்கு வந்த வாட்ஸ்ஆப் செய்திகளை பார்த்துக் கொண்டிருந்தபோது அவற்றில் ஒன்று அவரது மனதைத் தொட்டது. கேட்பரி நிறுவனத்தின் வீடியோ விளம்பரம் அது. அதில் ஒரு சிறுமி, தனது சகோதரரின் மணிக்கட்டில் ராக்கி கட்டுகிறார்.

இந்த குறிப்பிட்ட காட்சியில் உள்ள ஒரே வித்தியாசம் என்னவென்றால், அன்பு இழையோட சகோதரி, தனது மணிக்கட்டில் ராக்கி கட்டும் சிலிர்ப்பை முதன்முறையாக உணர்கிறான். அவனுக்கு செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டதால் அவனது சகோதரியால் ராக்கி கட்ட முடிந்தது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், அந்த செயற்கை கைகளில் உணர்கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன, இதன் மூலம் ராக்கியின் மென்மையான நூலின் ஸ்பரிசத்தை உணர முடிந்தது.

சமூகத்தில் பின்தங்கிய ஏழைகளுக்கு உதவி சாதனங்கள் மற்றும் மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்காக பணியாற்றி வரும், ஒருவர் ஸ்பரிசத்தை (தொடுதல் உணர்வு) உணரும் தனித்துவமான சென்சார் அடிப்படையிலான செயற்கை கைகளை தயாரிக்கும் ஒரு நிறுவனத் துடன் கேட்பரி கூட்டுசேர்ந்துள்ளது.

கையில் எலும்பு முறிவு, உறைந்து போன தோள்பட்டை அல்லது தாங்கமுடியாத வலி ஏற்பட்டால் நாம் விரக்தி அடைகிறோம், எரிச்சல் ஏற்படுகிறது. நமது துரதிருஷ்டத்தை சபிக்கத் தொடங்கிவிடுகிறோம் என்கிறார் அகர்வால்.

கைகளை முழுவதுமாக இழந்தவர்களுக்காக நாங்கள் அனுதாபப்படுகிறோம். இவர்கள் தங்கள் அன்றாடப் பணிகளை மேற்கொள்வது எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. இந்த இயலாமை அவர்களை பிறரை சார்ந்து இருக்கச் செயகிறது. மேலும் முழு குடும்பத்தையும் பாதிக்கிறது.

பாதிக்கப்பட்ட நபர் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப உதவும் செயற்கைக் கைகள் பற்றி ஆராய்ந்தபோது, குறைந்த விலை, இலகுவான, நீடித்து உழைக்கும், எளிதில் பொருத்துவதற்கும், அகற்றுவதற்கும் ஏதுவான LN4 செயற்கை கைகள் இருப்பதை அகர்வால் அறிந்தார். மைக்கேல் மென்டோன்கா மற்றும் விருதுபெற்ற மெக்கானிக்கல் என்ஜினீயர் மாரிஸ் லீபிளாங் ஆகியோருடன் இணைந்து எர்னி மெடோவ்ஸ், தொழில்நுட்ப உதவியுடன் கடுமையாக உழைத்து அதிகம் செலவில்லாத செயற்கைக் கைகளை தரமாக உருவாக்கியது தெரியவந்தது.

எர்னியின் மகள் எல்லென் தனது 18 வயதில் வாகன விபத்தில் இறந்ததால் அதற்கு LN4 என பெயர் பெற்றது.

எர்னி பின்னர் LN4 ஹாண்ட் பிராஜக்டை ஏற்படுத்தினார். சமூகப்



*ஜாம்நகர் ரோட்டரி சங்கத்தை சார்ந்த உறுப்பினர் ஷரத் ஷேத் முகாமில் செயற்கை கை பொருத்தப் பட்ட ஒரு நபருக்கு எழுத கற்றுக் கொடுக்கிறார்.*

பொருளாதார நிலை அல்லது கொடுக்கும் திறன் இருக்கிறதா என்று பார்க்காமல் ஒவ்வொருவருக்கும் செயற்கைக் கைகளை வழங்கும் நோக்கில் இத்திட்டம் உருவானது. நாங்கள் மின்னணு பாகங்கள் இல்லாத நீடித்து உழைக்கும் செயற்கைக் கைகளைத் தயாரித்து அதை எங்கள் கூட்டாளர்கள் மூலம் உலகம் முழுவதும் விநியோகிக்கிறோம். செயற்கை கைகள் கிடைப்பதற்கு அரிதான வளரும் நாடுகளில் ஏதாவது ஒரு அமைப்பு அல்லது தனியாருடன் கூட்டுச் சேர்ந்து இதை செயல்படுத்தி வருகிறோம். என்று அவர்களின் வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



எல்லன் மெடௌஸ் செயற்கைக் கை அறக்கட்டளை (EMPHF-Ellen Meadows Prosthetic Hand Foundation) 2005ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் செயற்கைக் கைகளை பொருத்தி வருகிறது. ரூ.25,000 மதிப்புள்ள செயற்கைக் கைகள் முற்றிலும் ரோட்டரி சங்கங்களுக்கு இலவசமாக வழங்கபட்டு தேவைப்படும் நபர்களுக்கு பொருத்தப்படுகின்றன. உலகம் முழுவதும் 65,000த்துக்கும் மேலான செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் 24,000 செயற்கைக் கைகள் இந்தியாவுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

பெங்களூர் ரோட்டரி சங்க உறுப்பினர் (RID 3190) மோகன் குமார் என்பவரை அவர் விரைவில் அடையாளம் கண்டார். இவர் தான் தமது அறக்கட்டளை மூலம் அமெரிக்காவிலிருந்து LN4 செயற்கைக் கைகளை இலவசமாக பெறுவதற்கான முக்கிய புள்ளியாவார். 2008–2009 இல் சோலாப்பூர், புனே, ஜெயப்பூர் மற்றும் ஜாம்நகர் ரோட்டரி சங்கங்கள் LN4 செயற்கைக் கைகள் தயாரிக்கும் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்தின. அவர்களின் பெரு முயற்சி மற்றும் கடின உழைப்பு காரணமாக LN4 செயற்கைக் கைகள் தயாரிக்கும் திட்டம் இந்தியாவின் பல்வேறு பகுதியில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன என்கிறார் அகர்வால்.

எனவே அவரது சங்கம், ரூர்கேலா குயீன்ஸ் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து (இரண்டும் RI 3261 மாவட்டத்துக்கு உட்பட்டது.) ரூர்கேலா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள சுமார் 200 பேருக்கு LN4 ரக செயற்கைக் கைகள் பொருத்தும் முகாமுக்கு ஏற்பாடு செய்தன. இந்த முகாமுக்கு ஜாம்நகர் ரோட்டரி சங்கமும் (RID 3060) ஆதரவளித்தது. அதாவது செயற்கை கைகள் தயாரித்து பொருத்தும் இரு நிபுணர்களை ரூர்கேலாவில் நடைபெற்ற அந்த முகாமுக்கு அனுப்பி வைத்தது. இந்த முகாமில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்தப்பட்டது கேட்பரி விளம்பரத்தில் வந்தது போல சென்சார்கள் பொருத்தப்பட்ட செயற்கை கைகள் அல்ல. அவை சாதாரணமாக தயாரிக்கப்பட்டவை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

தேதி, அதாவது நவம்பர் 28 என்று நிர்ணிக்கப்பட்டு விட்டது, முதல் பணி பயனாளிகளைக் கண்டறிவது. உடனடியாக முகாம் பற்றி தகவல்கள் சுற்றறிக்கையாக விடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ஜுயல் ஓரம், ரூர்கேலா MLA சாரதா பிரசாத் நாயக், ரூர்கேலா தொழில் வர்த்தக சபை தலைவர் பிரவீண் கர்க், RID 3261 DG சுனீல் பாடக் மற்றும் முன்னாள் DGக்கள் பலரும் மக்களிடம் சென்று சேர உதவினார்கள். ஊடகங்களும், பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டன. போஸ்டர்கள், துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப் பட்டன. உள்ளூர் நிர்வாகம் மற்றும் பிராந்திய ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு மையத்தின் உதவியும் கோரப்பட்டது. அவர்களிடமிருந்து கைகளை இழந்தவர்கள் பட்டியல் கேட்டுப் பெறப்பட்டது. ஒடிசா மாநிலத்தில் முதல் முறையாக நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பலரும் பயனடைய வேண்டும் என்று நினைத்தோம் என்றார் ரூர்கேலா குயீன்ஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ராஷ்மி அகர்வால்.

ஒரு திட்டக்குழு அமைக்கப் பட்டு. ரோட்டேரியன்கள் பயனாளிகளைத் தேடிச்சென்றனர். உதவி தேவைப்படுபவர்களில்



பெரும்பாலானவர்கள் ஒடிஸாவின் கிராமப்புற மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியாக இருந்தது மகிழ்ச்சி அளித்தது. செயற்கைக் கைகள் இலவசமாக வழங்கப்பட்ட நிலையில் முகாம் நடத்துவதற்கு ரூ.4.5 லட்சம் நிதி திரட்ட வேண்டியிருந்தது. இதில் ஜாம்நகரிலிருந்து ரோட்டேரியன் ஷரத் சேத் தலைமையில் வரும் ரோட்டேரியன்களுக்கான செலவு, தொலைதூரத்திலிருந்து வரும் பயனாளிகளுக்கான காலை உணவு, மதிய உணவு, மற்றும் சிற்றுண்டிக்கான செலவுகளும் அடங்கும்.

இந்த செயற்கை கைகளை பயனாளிகளுக்குப் பொருத்த வேண்டுமெனில் அவர்களுக்கு முழங்கைக்கு கீழ 14 செ.மீ. அளவுக்கு மூட்டுகள் இருக்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில் விரல்கள், மணிக் கட்டுகள் இருக்கக்கூடாது. அப்போது தான் அவைகளை வலுவாக பொருத்த முடியும். முழங்கை நீட்டிப்பு என்று அழைக்கப்படும், இந்த புதுமையான work-around என்ற அளவுகோலை பூர்த்தி செய்யாதவர்கள்கூட LN4 செயற்கை கைகளை பொருத்திக் கொள்ள முடியும். இந்த புதிய கண்டுபிடிப்பு மூலம் மேல் மூட்டு ஊனமுற்றவர்களும் இந்த செயற்கை சாதனத்தை பொருத்த முடியும் என்றார் அவர்.

நாளின் முடிவில் ஏற்பாட்டாளர்கள் சுமார் 200 பேருக்கு சேவை செய்ய காத்திருந்தாலும், 110 பேருக்கு மட்டுமே LN4 செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டன. முதன் முறையாக ஒடிசாவில் இரண்டு சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த திட்டத்தை நிறைவேற்றியுள்ளது. ஊடகங்கள் இதுபற்றி வெளிவந்த செய்திகள் மூலம் ரோட்டரியின் மீது மக்களுக்கு உள்ள நன்மதிப்பு மேலும் உயரக்கூடும் என்று பெருமையுடன் அவர் குறிப்பிட்டார்.

நவம்பர் மாதம் ரம்மியமான குளிர்காலத்தில் நாங்கள் அனைவரும் உதவிக்கரம் திட்டத்துக்கு தயாராகிவிட்டோம். ஷரத் சேத் தலைமையிலான ஜாம்நகர் குழுவினர் பச்சை நிற ரோட்டரி டீ ஷர்ட்டுகளுடன் தயாராக இருந்தனர். பயனாளிகள் பட்டியல் சரிபார்க்கப்பட்டு, அவர்களுக்கு முகக்கவசம், சானிட்டைசர்கள் வழங்கப் பட்டன. தகவல்கள் சேகரிப்பு முடிந்ததும் அவர்கள் செயற்கைக் கைகள் பொருத்தும் மேஜைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். செயற்கை கைகள் பொருத்தும் பணியில் வல்லவர்களான ஜாம்நகர் குழுவினர், ரூர்கேலா குழுவினருக்கு செயற்கைக் கைகள் பொருத்துவது எப்படி என்று சொல்லிக் கொடுத்தனர். பின்னர் அவர்களும் அப்பணியில் ஈடுபட்டனர்.

இவை தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்துக்களாக இருக்கலாம், மின்சாரம் தாக்கியும் கைகளை இழந்திருக்கலாம். சிலருக்கு பிறவியிலேயே இப்படி இருந்திருக்கலாம். ஒரு சிலருக்கு இரண்டு கைகளுமே இல்லை. ஆனால், அனைவருமே வீட்டில் முடங்கியிருந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

உள்ளூரில் சிறந்த மருத்துவ மனையான ஜேபி மருத்துவமனை செவலியர்கள், ஜாம்நகர் குழு மற்றும் உள்ளூர் ரோட்டேரியன்கள் முகாமில் பயனாளிகளுடன் அதிக நேரம் செலவிட்டனர். காய்கறிகள் தோல் சீவுவது, நறுக்குவது, ரொட்டி தயாரிப்பது உள்ளிட்ட அன்றாட பணிகள் குறித்து பயிற்சி அளித்தனர். அதை அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டனர். பலர் தங்களது புதிய செயற்கைக் கைகளுடன் எழுதிக் காட்டினர். ஏன் சில பயனாளிகள் தங்களது செயற்கை கைகளை உபயோகித்து சிற்றுண்டி மற்றும் மதிய உணவு சாப்பிட்டதையும் காண முடிந்தது என்று அவர் மேலும் கூறினார்.

கீதா என்பவர், தனது துணையுடன் செயற்கைக் கை பொருத்திக் கொள்ள வந்திருந்தார். அவருடைய



குழந்தையை உடன் வந்தவரே கவனித்துக் கொண்டிருந்தார். இலவச செயற்கைக் கை பொருத்திக் கொண்டபின் முதன் முறையாக தனது குழந்தையை தானே தாலாட்டினார். இந்தக் காட்சி அவர் மனதைத் தொட்டது மட்டுமல்ல, அங்கிருந்தவர்களையும் உணர்ச்சி வசப் பட்ட வைத்தது என்றார் RC ரூர்கேலா ராயல் தலைவர் நிகாம் அகர்வால்.

ஒரு ஹாக்கி வீரரை பார்த்தபோது அபரிமிதமான திருப்தி ஏற்பட்டது. அவர் ஒரு கையால் மட்டுமே ஹாக்கி விளையாடுவதில் ஆர்வமாக இருந்தார். அவருக்கு செயற்கை கை பொருத்தப்பட்டதும், அங்கிருந்த துடைப்பானை எடுத்து இரு கைகளாலும் ஹாக்கி விளையாடுவது போல் உற்சாகம் காட்டினார்.


ஆனால், செயற்கைக் கைகள் பொருத்துவதோடு பணி நின்று விடுவதில்லை. அவர்களின் செயல் பாட்டை பின்தொடர வேண்டும். அதாவது செயற்கை கைகளை அவர் எப்படிப் பயன்படுத்துகின்றார் என்று பார்க்க வேண்டும். இன்னும் 6 மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்கு பிறகு இதே போல மற்றொரு முகாம் நடத்தப்படலாம். இதை ஒரு நிரந்திர திட்டமாக செயல்படுத்த உத்தேசித் துள்ளோம் என்றார் ராஷ்மி. செயற்கைக் கைகள் பொருத்து வது மட்டுமல்லாமல், அவர்களுக்கு முறையான பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்குவதும் இதில் அடங்கும். அவர்களின் வாழ்க்கையில் என்ன விதமான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் கவனிப்போம் என்றார்.

தொடக்க அமர்விற்கு பிரமுகர்கள் வந்த நிலையில் சில பயனாளிகள் புதிதாக பொருத்தப்பட்ட செயற்கை கை



களுடன் காத்திருந்தனர். மாவட்ட ஆட்சியர் நிகில் பவன் கல்யாண், ADM ரூர்கேலா, RMC ஆணையர் திவ்ய ஜோதி பரிதா மற்றும் ரூர்கேலா SP முகேஷ் குமார் பர்னூ உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்று சமூகத்துக்கு ஆற்றிய சேவையை பாராட்டினர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் போன்ற பக்கத்து மாநிலங்களிலிருந்தும் பயனாளிகள் வந்திருந்ததுதான்.

முகாம் நிறைவுக் கூட்டத்தில் ரூர்கேலா MLA நாயக் மற்றும் DGN மன்ஜித் சிங் அரோரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




இந்த ஆண்டு ரோட்டரியின் குறிக்கோளான வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்த சேவை செய்வோம் என்பதன் அர்த்தத்தை, உண்மை நோக்கத்தை ரோட்டேரியன்கள் புரிந்துகொண்டனர். இதுவரை எங்கள் சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் நாங்கள் ஒரு பகுதி யாகவே இருந்தோம். ஆனால், இதைப் போல் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதை உணர்கிறோம். இந்த திட்டம் பயனாளிகள் வாழ்க்கையில் நீங்காத நினைவுகளாக இருக்கும் என்று நம்புகிறோம். அதுதான் இந்த முகாமின் சிறப்பு அம்சமாகும் என்றார் அகர்வால்.■

# டார்ஜிலிங் கிராமத்தில் RC கல்கத்தா கட்டிய பள்ளிக்கூடம்

ரஷீதா பகத்

2019-ல் தன் நூற்றாண்டு நிறைவு மற்றும் ரோட்டரி தொண்டு நிறுவனம் இந்தியாவில் நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் முடிந்ததை கொண்டாடும் விதமாக RC கல்கத்தா, RID 3291 தான் கருத்தரித்த முதன்மை திட்டமான ரோட்டரி க்ளப் ஆப் கல்கத்தா நூற்றாண்டு சின்தான் அகாடமியை டார்ஜீலிங்கில் உள்ள (RI மாவட்டம் 3240) பரமங்குவாவில் உள்ள தக்லிங் கிராமத்தில் அமைத்து நவம்பர் 25-ம் தேதி துவக்கி வைத்தனர்.

இந்த திட்டத்தை ரூபாய் ஐம்பது லட்சம் (சுமார் எழுவதாயிரம் டாலர்) மதிப்பில் அமைத்துள்ளோம். இதற்கான நிதி சங்க உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் ஜெர்மனியின் ரோட்டரி சங்கங்கள் மூலம் திரட்டப்பட்டுள்ளது என RC கல்கத்தா சங்கத்தலைவர் சுஜாதா பைன் கூறியுள்ளார்.

சங்கம் இத்திட்டத்தை செயல் படுத்துவதற்கு முன்னர், நாற்பதிற்கும் மேலான மாணவர்கள் படித்துக் கொண்டிருந்த அந்த ஆரம்ப பள்ளி பாழடைந்து அறைகள், சுவர்கள் மற்றும் எல்லைகள் ஏதுமின்றி குழந்தைகளுக்கு அபாயமான நிலையில் ஒரு மலைப்பகுதியில் அமைந்திருந்தது. இந்தியாவின் தொலைகொடியில் உள்ள பகுதிகளின் வழக்கமான நிலை போன்று இங்கும் மாணவர்கள் சுமார் பத்து கிலோ மீட்டர் மலையில் ஏறி இறங்கி பள்ளிக்கு செல்ல வேண்டியிருந்தது. இதில் பல மாணவர்கள் தங்கள் விவசாய, ஓட்டுனர் மற்றும் மெக்கானிக் குடும்பத்தில் இருந்து முதன்முதலாக பள்ளிக்கு வருபவர்கள் என அவர் கூறினார்.

டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள லெப்ச்சா, கூர்கா இன குழந்தைகளுக்கு உதவுவது என் கனவு. மோசமான வானிலையில் பள்ளிக்கூடம் வந்து அடைய மிகவும்



**இடதிலிருந்து:** RC *கல்கத்தா செயலாளர் ஸ்ரீரஞ்சனி ஜோஷி,* D 3291 AG *பூர்நேந்து ராய் சௌத்ரி,* RC *கல்கத்தா சங்கத்தலைவர் சுஜாதா பைன்,* RID 3240 DG *மோகன் ஷ்யாம் கொன்வர், லயங்சாங் தம்சாங் லெப்ச்சா, தலைவர், மேற்கு வங்க லெப்ச்சா கழகம், ஆகியோர் பள்ளி திறப்பு விழாவில்.*



சிரமமாக இருப்பதாலும், பொதிய கட்டைமைப்பு வசதிகள் இல்லாததாலும் அவர்கள் பள்ளிக்கு செல் வதை தவிர்க்கின்றனர் என RC கல்கத்தாவின் நூற்றாண்டு சங்கத்தலைவர் பூர்நேந்து ராய் சௌத்ரி கூறினார்.

மூங்கில் கம்புகள், கூரை மற்றும் தகரத்தால் கட்டபட்டிருந்த அந்த பள்ளியால் மாணவர்கள் இயற்கை சீற்றத்தால் பெரும் சிரமத்தில் இருந்தனர். ஆனால் தற்போது 2,100 சதுர அடியில் கான்கீரிட்டால் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக்கூடத்தில் மாணவர் களுக்கு தனி வகுப்பறைகள் அமைக்கப்பட்டு அதில் சீரான வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் வருவது போல் வடிவமைக்க பட்டுள்ளது. இப்போது மாணவர்கள் மேஜை நாற்காலியில் அமர்ந்து கல்வி கற்கின்றனர்.



கோலாகலமான துவக்க விழாவில் இரண்டு மாவட்ட ஆளுநர்கள், RID 3291 DG ப்ரபீர் சாட்டர்ஜி, RID 3240 DG மோகன் ஷ்யாம் கொன்வர் இருவரும் கலந்துக் கொண்டனர். சங்கத் தலைவர் சுஜாதா, செயலாளர் ஸ்ரீரஞ்சனி ஜோஷி, அறங்காவலர் தேப்னானி கோஷ், முன்னால் தலைவர் பூர்நேந்து ராய் சௌத்ரி மற்றும் பல சங்க உறுப்பினர்கள் விழாவில் கலந்துகொண்டனர். மேற்கு வங்காள லெப்ச்சா கழக தலைவர் லயங்சாங் தம்சாங் லெப்ச்சா மற்றும் அதன் செயலாளர் ரீனா டார்கேன் ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.

இங்கு கல்வித்தரத்தை உயர்த்த ஐந்து கணினிகளை கொடுத்து உதவியுள்ளனர் ரோட்டரி உறுப்பினர்கள். மேலும் ரோட்டரி வருடம் 2021–22ல் தொழில் சார்ந்த பயற்சி கூடம் ஒன்றை இங்கு நிறுவத் திட்டம் உள்ளது. மேலும் பள்ளிக்கான அசிரியர்கள், இதர ஊழியர்கள், மற்றும் புத்தகங்கள் ஆகியவை இலவசமாக கிடைக்க பெறுமாறு செய்வதாக லெப்ச்சா கழக தலைவர் உறுதி அளித்துள்ளார். மேலும் லெப்ச்சா கழகத்தின் கீழ் உள்ள 249 பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தேவைக்கேற்ப படிக்க கண்ணாடி வழங்குவதாக DG சாட்டார்ஜி உறுதி அளித்துள்ளார் என RC கல்கத்தா சங்கத்தலைவர் கூறியுள்ளார்.

அன்று சாயங்காலம் மூன்று சங்களின் ஒருங்கிணைந்த வரலாற்று சிறப்பு மிக்க கூட்டம் நடந்தேறியது. அதில் இரண்டு மாவட்ட ஆளுநர்கள், பூர்நேந்து ராய் சௌத்ரி மற்றும் பல உறுப்பினர்கள் வலைதள நேர்காணல் மூலம் கலந்துக் கொண்டனர். தொப்புள்கொடி உறவு என்ற தலைப்பில் அமைந்த கூட்டத்தில் RC கல்க த்தா, RC கல்கத்தா வால்

ஆதரவளிக்கப்பட்ட RC டார்ஜிலிங், மற்றும் RC டார்ஜிலிங் ஆதரவளித்த RC ஹிமாலயாஸ் ஆகியோர் கலந்துக் கொண்டனர். சங்கங்களும் மாவட்டங் களும் இணைந்து செயல்படுவதின் முக்கியத் துவத்தை இரண்டு ஆளுநர் களும் வலியுறுத்தினர். இவ்வாறு நடந்தேறினால் ரோட்டரி நிறுவனம் உலகை ஒன்றிணைக்கலாம் அதன் சான்றாக டார்ஜிலிங்கில் உள்ள டாக்லிங்க் கிராமத்திற்கு ஜெர்மானிய சங்கங்கள் மூலம் நிதி திரட்டப்பட்டு கூர்கா மற்றும் லெப்ச்சா இன குழந்தைகளுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலம் அமைக்கப்பட்டுள்ளது என கூறினர்.

மேலும் ரோட்டரி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் கல்வி அதை உணர்ந்து RID 3291 கடந்து உள்ள மக்கள் மற்றும் சமூகங்களுக்கு உதவிப்புரிந்த RC கல்கத்தாவின் தலைமைக்கும் மற்றும் ராய் சௌத்ரி அவர்களின் முன்னோக்கு பார்வைக்கும் பாராட்டு தெரிவித்தனர். என சுஜாதா கூறினார். ஒரே இடத்தில் இல்லாமல் தேவை எங்கோ அங்கே தான் நாங்கள் எங்கள் பொது நலன் திட்டங்களை செயல்படுத்து வோம். தற்போது நாங்கள் காஷ்மீர் வாழ் ஆதரவற்ற குழந்தைகளை தத்தெடுக்க காஷ்மீரில் உள்ள இரண்டு சங்கங் களின் உதவியுடன் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அவர்கள் தங்கள் குடும்பத்துடன் தங்கி பயில்வதற்கான கல்விக் கட்டணம் மற்றும் வாழ்வதற்கான ஊக்கத் தொகை ஆகியவை உலகில் இருக்கும் பல்வேறு ரோட்டரி உறுப்பினர்கள் மூலம் பெறப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும். இதனை எங்கள் சங்கம் கண்காணிக்கும் என ரோட்டரி செய்திதுறையிடம் ராய் சௌத்ரி கூறியுள்ளார்.

அந்த இளம் மாணவர்களின் சந்தோஷத்தையும், புது நம்பிக்கையும் கண்டது எங்கள் மனதளவில் ஆத்மதிருப்தி அளித்தது. அவர் களுடன் நடந்த உரையாடல் மூலம் அவர்களின் அதித ஆற்றலை காண முடிந்தது. இது மேமேலும் பல சமுதாய திட்டங்களை நிறைவேற்ற எங்களுக்கு உக்கமளிக்கிறது என சங்கத்தலைவர் சுஜாதா கூறினார்.■

# கார்பன் கால் தடக் கணக்கீட்டுக் கருவியை மேலும் பயன்படுத்தவேண்டும்

ரோட்டரி செய்திக் குழு



*RI தலைவர் சேகர் மேத்தாவுடன் ஜெய்தீப் மாளவியா. உடன் தெற்காசியா ESRAG தலைவர் மீனாஷி வெங்கட்ராமன் (வலது) உள்ளார்.*

சுற்றுச்சூழல் பற்றி RC பாம்பே பியர், RID 3141 நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் பேசிய RI தலைவர் சேகர் மேத்தா, ரோட்டரி தெற்கு ஆசியாவின் முதல், சங்கங்களுக்கான கார்பன் கால் தடக் கணக்கீட்டுக் கருவி உருவாக்கத்தைப் பாராட்டினார், எல்லா ரோட்டரியன்களும் இதைப் பரவலாகப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். காலநிலை மாற்றம் ஒரு பெரிய பிரச்சனை; சுற்றுச்சூழலை ஆதரிப்பது என்ற புதிய கவனப் பகுதியை ரோட்டரி அறிமுகப்படுத்தியிருப்பதால், இது போன்ற செயல்பாடுகள் உமிழ்வுகளை உண்டாக்கும் மனிதச் செயல்பாடு களைக் கட்டுப்படுத்த நமக்கு உதவும்.

கார்பன் கால் தடக் கணக்கீட்டுக் கருவி, RID 3131ன் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் மற்றும் காலநிலை மாற்றத் தலைவர் ஜெய்தீப் மாளவியாவின் முன்னெடுப்பாகும். அவர் RC புணே கேம்ப்-பின் முன்னாள் தலைவர் ஆவார். இந்தக் கருவி, வண்டிகளின் எண்ணிக்கை, பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு, வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் என ஒரு வழக்கமான சங்கக் கூட்டம் அல்லது திட்டத்தின் பல செயல்பாடுகளின் விளைவாக ஏற்படும் பசுமைக்குடில் வாயு உமிழ்வு அளவைக் கணக்கிடுகிறது என்றார்.

இந்தக் கருவியை இங்கு அணுகலாம்: https://cfc-environment 2122rid3131.vercel.app கோரப்படுகிற தேவையான தரவுகளை நிரப்பியபிறகு, அந்தக் குறிப்பிட்ட ரோட்டரி செயல் பாட்டுக்காக வெளிப்பட்ட கார்பன் உமிழ்வுகளை இந்தச் செயலி காண்பிக்கிறது என்கிறார் மாளவியா.■

# மீண்டும் ஒரு குழந்தையை காப்பாற்றியது ரோட்டரி சங்கம்

ரோட்டரி செய்திக் குழு

ஆகஸ்ட் 21ம் தேதி, 10 மாத குழந்தை ஹாதியாவின் பெற்றோர்கள் ஜைனாப் மற்றும் ஹுஃபேஸா, ரோட்டரி சங்கம் மும்பை பர்லெஷ்வார், RID 3141, கதவைத் தட்டி CHD நோயால் தவித்துக்கொண்டிருக்கும் தங்கள் பாசத்திற்குரிய குழந்தைக்கு சிகிச்சை பெற உதவுமாறு கேட்க சங்கத்தலைவர் உன்மேஷ் மற்றும் செயலாளர் மோனிகா டான்டன் விரைந்து செயல்பட்டதால் அக்குழந்தை கோகிலாபென் அம்பானி மருத்துவமனையில் இரண்டு தினங்களில் அனுமதிக்கப்பட்டு அதற்கு தேவையான அறுவை சிகிச்சை ஆகஸ்ட் 26ஆம் தேதி வெற்றிகரமாக நடைபெற்றது. ரோட்டரி சங்கத்தின் உதவியால் இன்று குழந்தை ஹாதியா புத்துயிருடன் காணப்பட அவளின் பெற்றோர் அளவில்லா மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஹாதியா பிறக்கும்போதே அவள் இதயத்தின் வென்ட்ரிகுலர் அறையில் ஒரு துளை இருந்துள்ளது. அவள் இதயத்தின் நிலையை சரி செய்ய ஒரு அவசர அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் அறிவுறுத்தினர். ஆனால் அதற்கு இடையூறாக இருந்தது 2.35 லட்சம் ரூபாய் மருத்துவ கட்டணம். அது சாண்டா குருஸ்ஸில் கொலிபர் சந்தையில் பிளாஸ்டிக் சாமான் விற்கும் கடை வைத்திருந்த அந்த பெற்றோர்களுக்கு யோசித்துப் பார்க்க முடியாத தொகை.

உதவிக்காக விசாரித்துக் கொண்டிருந்த அவர்களுக்கு நம் சங்கத்தின் நிர்வாக இயக்குனர் சுனிதாவை அடைய அவர்களை மோனிகாவிடம் அனுப்பினார். அங்கிருந்து DG ராஜேந்திர அகர்வாலின் வழிகாட்டுதலால் நாங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அக்குழந்தையை காப்பாற்ற உதவினோம் என சங்க உறுப்பினர் PDG சுபாஷ் குல்கர்னி கூறினார். சங்கம் மருத்துவ கட்டணத்தில் 50 சதவீதத்தை ஏற்றுக்கொள்ள மீதி தொகையை சங்க உறுப்பினர்கள் சேர்ந்து ஏற்றனர்.

அக்குழந்தை செப்டம்பர் 3 அன்று மருத்துவ மனையிலிருந்து விடுவிக்கபடும் வரை குடும்பத்திடம் தொடர்பில் இருந்தார் மோனிகா என குல்கர்னி கூறினார்.

தாங்கள் அனைவரும் சேர்ந்து செய்த உதவியால் என் குழந்தையை காப்பாற்றபட்டது மட்டுமில்லாமல் இவ்வுலகில் நாங்கள் தனியாக இல்லை என உணர எங்களுக்கு நம்பிக்கையும் அளித்தது. ஹாதியா சிரிக்க, விளையாட அல்லது அடம்பிடிக்கும் பொழுது ரோட்டரியின் உதவியை நன்றியுணர்வுடன் நினைவுகூறுவோம் ஏனெனில் ரோட்டரி எங்களுக்கு எங்கள் குழந்தையை திருப்பி வழங்கியுள்ளது என ஹாதியாவின் தாய் ஜைனாப் மனம் நெகிழ்ந்து கூறினார்.■

*ஜைனாப் குழந்தை ஹாதியாவுடன். RC மும்பை பார்லெஷ்வார் செயலாளர் மோனிகா டான்டன் (வலது) மற்றும் Rtn சுனிதா (இடது) ஆகியோரும் உள்ளனர்.*





Rotary PEOPLE OF ACTION

# மகாராஷ்டிரா, குஜராத் கிராமப்புற பெண்களுக்கு உதவும் நீர்ச்சக்கரங்கள்

ஜெய்ஸ்ரீ

புதுமையாக வடிவமைக்கபட்ட நீர்ச்சக்கரங்கள் மகாராஷ்டிரா, குஜராத்தின் வறட்சிப் பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான பெண்களின் தலை மேல் இருந்து பாரங்களை இறக்கிக்கொண்டிருக்கிறது. அப்படியான ஒரு திட்டத்தின் மூலம் RID 3141, மும்பையை சேர்ந்த 6 ரோட்டரி சங்கங்கள் மற்றும் 3 இன்னர் வீல் சங்கங்கள் இணைந்து 315 நீர்ச்சக்கரங்களை வழங்கியுள்ளது. இது கிராமப்புறங்களில் வெகுதூரம் தண்ணீர் சுமந்து செல்லும் பெண்களுக்கு ஒரு உன்னதமான தீர்வு.

இந்தியாவின் கிராமபுற பெண்கள் தங்கள் வீட்டின் தேவைக்கேற்ப 1 முதல் 3 பானைகளை தங்கள் தலையில் சுமந்து ஒவ்வொரு நாளும் வெயிலிலும் மழையிலும் 2 முதல் 5 கிலோமீட்டர் வரை 2–3 முறை பயணம் செய்கின்றனர். அதிக எடையை சுமந்து செல்வதால் முதுகெலும்பு மற்றும் முதுகுப் பிரச்சனைகளுக்கு அவர்கள் ஆளாகின்றனர் என்று RID 3141ன் ரோட்டரி தண்ணீர் திட்ட அவென்யூ தலைவர் அம்ரிஷ் டஃப்டாரி கூறுகிறார்.

அருகில் உள்ள குடிநீர் ஆதாரத்திலிருந்து தண்ணீர் எடுப்பதை நீர்ச்சக்கரம் மிகவும் எளிதாக்குகிறது. இது ஒரு உருளை வடிவில், அதிக அடர்த்தி கொண்ட பிளாஸ்டிக் மூலம் உருவாக்கப்பட்டதாம். இது 45 லிட்டர் தண்ணீரைத் தாங்கக்கூடியது மற்றும் உலோகக் கைப்பிடி பொருத்தப் பட்டது. இதனை பயன்படுத்துவோர் எடையைத் தூக்காமல், தள்ளுவண்டி போல சாலையில் உருட்ட முடியும். இது தலை, தோள்கள் மற்றும் இடுப்பில் பானைகளை சுமக்கும் உடல் அழுத்தத்தை நீக்குகிறது, மேலும் இது 45 லிட்டர் கொள்ளளவு கொண்டதால் மேற்கொள்ள வேண்டிய பயணங்களின் எண்ணிக்கையையும் கணிசமாகக் குறைகிறது.''

"2016ம் ஆண்டில் அமெரிக்காவை சேர்ந்த சிந்தியா கோனிக் என்பவரால் உருவாக்கப் பட்ட இந்த தனித்துவ மான தயாரிப்பை முதலில் நான் கண்டேன். நீர்ச்சக்கரங்களின் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தி யாளர்களான நில்கமல் பிளாஸ்டிக்ஸ் நிறுவனத்திடமிருந்து இதனை பெற எனக்கு அவர் உதவினார்.'' என இந்த திட்டத்தில் தனது பயணத்தை நினைவு கூறுகிறார் டஃப்டாரி. ஆப்ரிக்காவிலும் இந்த நீர்ச்சக்கரங்கள் பிரபலமானது, அங்கு இது 'ஹிப்போ வீல்' என்று அழைக்கப்படுகிறது, மேலும் அது 100 லிட்டர் கொள்ளளவு கொண்டது.

1988ம் ஆண்டு முதல் ரோட்டரி சங்க உறுப்பினராகவும் மற்றும் RC பாம்பே ஹேங்கிங் கார்டனின் உறுப்பினரான அவர், மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் உள்ள திக்ராஸ், கர்ஜத், பால்கர் மற்றும் அகோலா தாலுகாக்களில் உள்ள வீடுகளுக்கு நீர்ச்சக்கரங்களை கொள்முதல் செய்து விநியோகிப்பதில் தீவிரமாக உள்ளார். மார்ச் 2016 முதல், அவரது குழு பல்வேறு கிராமங்களில் 4,000க்கும் மேற்பட்ட நீர்ச்சக்கரங் களை விநியோகித்துள்ளது. அச்சக்கரங்களை பெறுபவர்களை அடையாளம் காண்பது முக்கியம். அருகாமையில் நீர் ஆதாரம் இல்லாத குடும்பங்கள் மற்றும் ஒவ்வொரு நாளும் தண்ணீர் எடுக்க வீட்டிலிருந்து குறைந்தது 1.5 முதல் 2 கிமீ தூரம் செல்பவர்களுக்கு மட்டுமே நீர்ச்சக்கரங்கள் வழங்கப்படுகின்றன. "உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அத்தகைய பயனாளிகளை நாங்கள் கண்டறிந்து, சங்கங்களின் உதவியுடன் நீர்ச்சக்கரங்களை வழங்குகின்றோம்.'' ஒவ்வொரு சாதனத்தின் விலையும் சுமார் ரூ.2,200 மற்றும் GST வரியுடன் கூடியது. ஆனால் ரோட்டரிக்கு 2,100 ரூபாய் சிறப்புக் கட்டணமாக வழங்கபடுகிறது. உரிமை உணர்வுக்காக ஒவ்வொரு பெறுநரிடமிருந்தும் நாங்கள் 100 ரூபாய் வசூலிக்கிறோம், யாரேனும் அந்த தொகை செலுத்த முடியா விட்டால் நாங்கள் அதை இலவசமாக வழங்குகிறோம், என்று அவர் கூறினார். சிந்தியாவால் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நியூ ஜெர்சியில் உள்ள சில சங்கங்களும் இந்த திட்டத்தில் பங்களித்தனர்.

பெண்களைப் போலல்லாமல், கிராமத்து ஆண்கள் பானைகளை பயன்படுத்த தயங்குவர். ஆனால் நீர்ச்சக்கரங்களால் ஆண்களும், குழந்தைகளும் இப்போது குடும்பத்திற்குத் தேவையான தண்ணீரை எடுப்பதில் பங்களிக்கின்றனர். அதனால் பெண்களின் தலைச்சுமை ஒரு வரலாறாக மாறியுள்ளது, என்று டஃப்டாரி புன்னகைக்கிறார்.

பால்காரைச் சேர்ந்த பயனாளியான லட்சுமிபாய் (65) புன்னகையுடன்






DG *ராஜேந்திர அகர்வால் மற்றும் ரோட்டரி தண்ணீர் திட்ட அவென்யூ தலைவர் அம்ரீஷ் டஃப்டாரி ஒரு கிராமத்தில் பெண்களுக்கு நீர்ச்சக்கரங்கள் வழங்குகின்றனர்.*

முன்பெல்லாம் என் தலையில் மூன்று பானைகளைச் சுமந்துகொண்டு, என் குடும்பத்திற்குத் தண்ணீர் எடுப்பதற்காக தினமும் பல முறை பயணித்தது மிக கடினமான செயல். கழுத்து வலி மற்றும் சோர்வுடனே இருந்தேன். பல முறை நான் கீழே விழுந்தோ அல்லது பானைகள் என் தலையில் இருந்து கீழே விழுந்தோ இருக்கிறது. இந்த சாதனம் ஒரு கடவுளின் வரம். இனி நான் தண்ணீர் எடுக்கச் செல்ல வேண்டியதில்லை. எனது மகனுக்கும், பேரனுக்கும் இடையே தண்ணீர் எடுக்க தள்ளுமுள்ளு நடை பெறுகிறது. தள்ளுவண்டிப் பொம்மையைப் போல விளையாட்டுத்தனமாக அதைக் காண்கிறார்கள். எவ்வளவு தூரமாக இருந்தாலும் அவர்கள் கவலைப்படுவதில்லை என கூறுகிறார். ■

ADVT.




Rotary

SERVE TO CHANGE LIVES

Rotary
RID 3212
Act and Activate
Care and Share
Enhance and Empower

# Best Wishes from JMJ Group of Companies



Rtn. Jacintha Dharma
District Governor
RI. Disrtict 3212



Rtn.A.I.Dharma



Rtn.Mohinth Dharma



DGS Rtn.Alexander Manuel

## JMJ SURGICALS

59A, South Car Street, Nagercoil - 629 001

## JMJ AGENCIES

G-5, Raja Tower, 75, Trivandrum Road
Palayamkottai, Tirunelveli - 627002

## JMJ DISTRIBUTORS

HIG 4G, 80 Feet Road, Madurai - 625 020

## JMJ SURGICAL ENTERPRISES

A-10, Thillai Nagar, 1-24, 20th Street
11th Cross Further West Extention
Thillai Nagar, Trichy - 620 018

### AUTHORISED DISTRIBUTOR

J. Mitra & Co. Pvt. Ltd
Johnson & Johnson Ltd
3M India Ltd
Diamond B.P. Apparatus
Anaesthatics (1) Pvt. Ltd
Romson Group of Companies
Surgiwear
Remi Sales & Engineering Limited
General Surgical Company India Pvt. Ltd
Kanam Latex Industries Pvt. Ltd
Span Diagnostics Limited

HOSPITECH INDUSTRIES
ALPHA SURGICAL EQUIPMENTS

## WENCY HOSPITAL EQUIPMENTS

AUTHORISED DEALER OF BIONET
59, (UPSTAIRS), SOUTH CAR STREET, NAGERCOIL - 629 001
Ph: OFF: 453026/ 222026/ 223329, Cell: 9443395493
E-mail: jmjsurgicals@gmail.com
Cell: 9842122026, 9443322026




# 2022–23 RI தலைமை கருப்பொருளை

# ஜெனிஃபர் ஜோன்ஸ் அறிவித்தார்

ரயன் ஹைலேண்ட்

உலகினை மாற்ற தாங்கள் செய்யக் கூடிய மாற்றத்தின் சாத்தியக்கூறுகளை ரோட்டரி உறுப்பினர்கள் கற்பனை செய்ய வேண்டும், என்று RIPE ஜெனிஃபர் ஜோன்ஸ் கூறியுள்ளார்.

கனடாவின் ஒன்டாரியோவில் உள்ள RC விண்ட்சர்-ரோஸ்லேண்ட் இன் உறுப்பினரான ஜெனிஃபர், 'இமாஜின் ரோட்டரி' என்ற தலைப்பில் 2022–23 கருப்பொருளை வெளிப் படுத்தினார். அவர் உறுப்பினர்களை பெரிதாகக் கனவு காணவும், அவர்களின் தொடர்புகளை கொண்டு அக்கனவுகளை நிஜமாக்க ரோட்டரியின் சக்தியை பயன்படுத்து மாறு வலியுறுத்தினார்.

"ஒவ்வொரு நாளும் நாம் விழிக்கும் போது, நம்மால் உலகில் நிகழும் மாற்றத்தை கற்பனை செய்து பாருங்கள்," என்று அவர் உள்வரும் மாவட்ட ஆளுநர்களிடம் கூறினார்.

ஜூலை 1 அன்று ரோட்டரியின் முதல் பெண் தலைவராவதன் மூலம் சரித்திரம் படைக்கவிருக்கும் ஜெனிஃபர், உலகெங்கிலும் உள்ள மாவட்ட ஆளுநர்களுக்கான ரோட்டரியின் வருடாந்திர பயிற்சி நிகழ்வான இன்டர்நேஷனல் அசம்பிலி முன்னதாக வலைத்தளம் மூலம் நேரடி உரையாற்றினார். கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக இன்டர்நேஷனல் அசம்பிலி பிப்ரவரி 7–14 தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டு வலைத்தளம் மூலம் நடத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்க படை ஆப்கானிஸ்தானில் இருந்து வாபஸ் பெறப்பட்டபோது, ஓர் இளம் அமைதி ஆர்வலரை அங்கிருந்து காப்பாற்ற ஒரு உறுப்பினர் தனது உதவியை நாடியதும் அதற்கு தான் எடுத்த முயற்சியை பற்றியும் அவர் உள்வரும் ஆளுநர்களிடம் கூறினார். முதலில் எப்படி உதவுவது என்று தெரியாமல் இருந்ததாகவும், ஆனால் "ரோட்டரி மூலம் ஏற்படும் மேஜிக்கை" நம்பி, சில ஆண்டுகளுக்கு முன்பு தான் சந்தித்த முன்னாள் ரோட்டரி பீஸ் உறுப்பினரை தொடர்பு கொண்டதாகவும், அடுத்த 24 மணி நேரத்திற்குள், அந்த ஆர்வலரின் பெயர் வெளியேற்றப்பட்ட பட்டியலில் சேர்க்கபட்டு, விரைவில் அவர் ஐரோப்பாவிற்குச் சென்றதாகவும் கூறினார்.

உறுப்பினர்களை சிறப்பாக ஈடுபடுத்த, ரோட்டரி "மாற்றத்திற்கு ஏற்றார் போல் தயார்படுத்திக் கொள்ள வேண்டும், அதற்கு உதாரணமாக தனது சொந்த ஊரை எடுத்துக் காட்டினார். விண்ட்சர் ஒரு காலத்தில் கனடாவின் வாகனத் தயாரிப்பின் மையமாக இருந்தது. ஆனால் அந்த ஆலைகள் மூடப்பட்டதால், ஆயிரக்கணக்கானோருக்கு வேலையில்லாமல் போனது. ஒரு வாகன ஆலை, எப்படி புதிய பாகங்கள் மற்றும் புதிய ரகத்திற்குத் தயாராகுமோ அதே வழியில், நகரத்தை தயார்ப் படுத்தினர். இப்போது, விண்ட்சர் வேளாண் வணிகம், மருத்துவம் மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது என்று ஜெனிஃபர் கூறினார்.

உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அவர்களை திட்டங்களில் ஈடுபடுத்துவது மிகவும் முக்கியமானது. ரோட்டரி மூலம் அவர்கள் என்ன பெற விரும்புகிறார்கள் என்பதை

அவர்களிடம் கேட்டு அர்த்தமுள்ள பொறுப்புகளை வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

உள்வரும் ஆளுநர்கள்கள் தங்கள் பதவிக்காலத்தில் குறைந்தது இரண்டு புதுமையான அல்லது சமுதாய நலன் கொண்ட சங்கங் களை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டார். ரோட்டரி சங்கத்தின் பொது உருவ ஒருங்கிணைப்பாளராக (RPIC) ரோட்ராக்ட் உறுப்பினர் ஒருவரை நியமிப்பதாகவும், பல குழுக்களில் ரோட்டராக்டர்களை இணைத் துள்ளதாகவும் மேலும் சில ரோட்டராக்டர்களை RI தலைவரின் பிரதிநிதிகளாக நியமிப்பதாகவும் ஜெனிஃபர் கூறினார்.

2023 ஆம் ஆண்டுக்குள் ரோட்டரி யின் உறுப்பினர்களில் 30 சதவிகிதம் பெண்களை சேர்க்க வேண்டும் என்ற RI இயக்குநர்கள் குழுவின் இலக்கை அடைய ரோட்டரிக்கு இன்னும் சிறிது காலம் தான் உள்ளது என்று RIPE ஜெனிஃபர் குறிப்பிட்டுள்ளார். இந்த இலக்கை ரோட்டரி 110க்கும் மேற்பட்ட நாடுகளில் சாதித்துள்ளது, ஆனால் மேலும் பல நாடுகளில் அதை அடைய நாம் உழைக்க வேண்டும். ஏற்கனவே 50 சதவீத பெண் உறுப்பினர்களை ரோட்ராக்ட் சங்கங்கள் எட்டியுள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரோட்டரியின் கௌரவத்தை உயர்த்த, அவர் உலகளாவிய சுற்றுப் பயணத்தை நடத்த திட்டமிட்டுள்ளார், அதில் உலகின் மிக முக்கியமான சவால்களை எதிர்கொள்ள ஒன்றிணைந்து செயல்படுவது பற்றி தலைவர்களுடன் பேசுவதும் அடங்கும். ரோட்டரி இந்த கதவுகளைத் திறக்க, நாம் நம்முடைய இணைப்புகளைப் பயன்படுத்தி மேலும் இந்த உறவுகளை ஆழப்படுத்தி புதிய கூட்டாண்மைகளை உருவாக்க வேண்டும், இதில் சிறந்த பகுதி என்னவென்றால், இது தலைமையின் ஒவ்வொரு மட்டத்திலும் நிகழலாம்.'' என்று அவர் கூறினார்.

நம் அனைவருக்கும் பல கனவுகள் இருந்தாலும், அதை நடத்தி முடிப்பது என்பது நாம் செய்யும் ஒரு தேர்வு. ரோட்டரி போன்ற அமைப்பு போலியோவை ஒழிப்பது, அமைதியை உருவாக்குவது போன்ற பெரிய கனவுகளை காணும்போது, அவற்றை நிறைவேற்றுவது நமது பொறுப்பாகும். “நீங்கள் நேற்றை பற்றி கற்பனை செய்யமுடியாது நாளையை பற்றி கற்பனை செய்யலாம், என்று கூறி ஜெனிஃபர் தனது உரையை முடித்தார்.

*Source: Rotary International*

2022 ஹூஸ்டன் மாநாடு

# ஹூஸ்டன் சுவைகள்

மியோகி வாக்கர்



ஹூஸ்டன் உணவுகளைப்பற்றிச் சொல்வதென்றால், ஏகப்பட்ட உணவகங்கள், நேரமோ குறைவு. 4 ஜூன் முதல் 8 ஜூன் வரை இங்கு நடைபெறும் 2022, RI சந்திப்புக்காக நீங்கள் இங்கு வரும் போது, பல வகை உணவுகளை ருசித்துப் பார்க்கலாம். அதற்கான இடங்கள் அனைத்தும் டவுன்டவுனிலிருந்து வாடகைக் காரில் செல்லக்கூடிய தொலைவில் உள்ளன.

Navigationல் உள்ள The Original Ninfa மிகச்சிறந்த டெக்ஸ்-மெக்ஸ் (தென் அமெரிக்க, மெக்சிக உட் பொருட்களின் கலவை) உணவை வழங்குகிறது. மாமா நின்ஃபா லௌரென்ஜா என்பவரால் 1973ல் நிறுவப்பட்ட இந்த உணவகம் தேசிய அளவில் ஃபாஜிடாஸுக்குப் புகழ் பெற்றுத் தந்தது.

ஹூஸ்டனின் Brennan's உண்மை யான க்ரெயோலெ உணவையும் தெற்கு விருந்தோம்பலையும் வழங்கும் தனித்துவமான உணவகம். இவர்களுடைய அடையாளமான ஆமை சூப், உள்ளூரில் பெறப் பட்ட மடகொர்டா பே சிப்பியை அனுபவியுங்கள். New Orleansல் உள்ள புகழ் பெற்ற Commander's Palaceன் இணை உணவகமாகிய இங்கு, வார இறுதிகளில் ஜாஸ் ப்ரஞ்சும் கிடைக்கும், அதில் பீய்க்னெட்ஸ் அல்லது இறால் மற்றும் கிரிட்ஸ் நன்றாக இருக்கும்.

Nobie's உணவகம் புது அமெரிக்க உணவை வழங்குகிறது. சிறப்பான, ஆனால், சிக்கந்ஃப்ரைட் க்வெயில், மேலே டெவில்ட்-முட்டைக் கிரீம் சேர்த்த ஸ்டீக் டார்டாரே போன்ற புதுமை உணவுகளை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

தரமான, அதே நேரம் இயல்பான Rosie Cannonball ஐரோப்பிய உணவை இத்தாலியச் சுவையுடன் வழங்குகிறது. முதலில், ஃபொகாச்சியா டி ரெக்கோ அல்லது ப்ளூ கிராப் கார்பனரா உண்ணுங்கள், பிறகு, பிஸ்ஸா, சார்ர்ட் ஆக்டோபஸ் அல்லது விறகு அடுப்பு மற்றும் கிரில்லிலிருந்து மற்ற உணவுகளைச் சாப்பிடுங்கள்.

**மேலும் தெரிந்துகொள்க,**
**பதிவு செய்க:** *convention.rotary.org.*

*Source: Rotary*

ஒரு சங்கத்தின் மீதான மதிப்பு, அதன் செயல்பாடு மற்றும் நிறைவேற்றும் சேவைத் திட்டங்கள் மற்றும் சமூகத்தின் மீது அதற்குள்ள அக்கறை ஆகியவற்றை உள்ளடக்கியது. நாங்கள் சார்ந்துள்ள RID 3060-க்கு உட்பட்ட பாரூச் ரோட்டரி சங்கம், சுற்றுச்சூழல் மற்றும் வழக்கமான உடற்பயிற்சிகள் மூலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர்களாக அறியப்பட விரும்புகிறோம் என்கிறார் சங்கத்தின் செயலர் ராச்சனா பொத்தார்.

உள்ளூர் சமூகத்தின்மீது சங்கம் பற்றிய நல்லெண்ணம் ஏற்படவும், வாழ்க்கையில் உடற்பயிற்சி மற்றும் உடல் ஆரோக்கியம் இரண்டு முக்கிய அம்சங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், RID 3060க்கு உட்பட்ட 145 உறுப்பினர்கள் கொண்ட, 78 ஆண்டுகள் பழமைவாய்ந்த, மிகப்பெரிய பாரூச் ரோட்டரி சங்கம், 10 கி.மீ. சைக்கிள் பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. தற்போதைய சூழலில் கரியமிலவாயு வெளிப்படுதலை குறைக்க வேண்டும் என்கிறார் சங்கத்தின் தலைவர் டாக்டர் விக்ரம் பிரேம்குமார். மருத்துவர் என்ற முறையில் தமது பதவிக்காலத்தில் சங்கத்தின் திட்டங்களில் சுகாதார விழிப்புணர்வுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற 30 கி.மீ. சைக்கிள் பேரணியில் சங்க உறுப்பினர்கள் தவிர, பாரூச் சங்கத்துடன் தொடர்புடைய ரோட்ராக்டர்கள், இன்டராக்டர்கள் என 300க்கும் மேலானவர்கள் பங்கேற்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மக்களை பீதிக்கு உள்ளாக்கி வரும் கோவிட் வைரஸ் தொற்று காரணமாக பொது மக்களிடையே நோய்த்தடுப்பு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது என்கிறார் சங்கத் தலைவர். சுகாதார ஏற்றத்தாழ்வுகள் பெரும்பாலான மக்களை பாதித்துவிட்டது. உடலை ஆரோக்கியமாகவும் கட்டுக்கோப்பாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற மனப்பாங்கு இப்போது பலரிடம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர்கள் உடல்நலனில் அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர். இதையடுத்து அவர்களில் பலர்




# “சைக்ளிங்”




# சொல்லும் சேதி

ரஷீதா பகத்

உலகில் சைக்கிள் ஓட்டுபவர்களின் அங்கமாகிவிட்டனர். சைக்கிள் பயணத்தை அவர்கள் ஒரு பொழுது போக்காக மாற்றி விட்டனர். சைக்கிள் ஓட்டுவது வேடிக்கை யானது மட்டுமல்லாமல், வயது வித்தியாசம் இல்லாமல் அதை தங்களின் வழக்கமான பணிகளில் ஒன்றாக கருதத் தொடங்கிவிட்டனர்.

இந்த சைக்கிள் பேரணிக்காக, பாரூச்சில் உள்ள GJ 16 பெடலர்ஸ் மற்றும் பாரூச் சைக்கிள் ஓட்டிகள் சங்கம் (GJ 16 Pedallers மற்றும் Bharuch Cyclists Association) ஆகியவற்றை சங்கம் ஒருங்கிணைத்தது. பேரணிக்கு ‘Ride your way to good health’ (உடல் நலம் பேணுவதற்கான சைக்கிள் பயணம்) என்று பெயரிடப்பட்டது. எதிர்பார்த்தபடியே இந்த சைக்கிள் பேரணியில் பலரும் ஆர்வமாக கலந்துகொண்டனர். 35 ரோட்ராக்டர்கள், 35 இன்டராக்ட் உறுப்பினர்கள் ரோட்டரி சமூகப் படையினர் இதில் பங்கேற்றனர்.

### பாரம்பரியமான கோல்டன் பாலம்

நர்மதை நதிக்கரையில் உள்ள பாரூச் மற்றும் அங்கலேஷ்வர் (போர்படா) ஆகிய இரு நகரங்களை இணைக்கும் பாரம்பரியமான கோல்டன் பாலத்தின் வழியாக சைக்கிள ஓட்டிகள் பேரணியாகச் சென்றனர். பிரிட்டிஷார் ஆட்சியில் 1881ம் ஆண்டு இந்த பாலம் கட்டப்பட்டது. மும்பையிலிருந்து குஜராத்துக்கு வரும் அதிகாரிகளுக்கு வர்த்தகம் மற்றும் நிர்வாக ரீதியில் அணுகுவதற்காக நர்மதை நதியின் குறுக்கே அவர்களுக்கு பாலம் தேவைப்பட்டது. இதை நர்மதை பாலம் என்றும் அழைக்கின்றனர். ஆனால், கடந்த காலங்களில் போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்காக அதற்கு இணையாக புதிய பாலம் ஒன்றும் கட்டப்பட்டது. தற்போது பழைய பாலம் வழியாக (கோல்டன் பாலம்) இரண்டு சக்கர வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன என்பதால் சைக்கிள் பேரணி அந்த வழியாகச் சென்றது. அது ஒரு சிறந்து புகைப்பட வாய்ப்பையும் உருவாக்கியது என்றார் ராச்சனா.

போர்படா அருகே பாலத்தை கடந்த நிலையில் சைக்கிள் பேரணி சென்றவர்கள், சுற்றுச்சூழலை பாது காக்கும் விதத்தில் அந்த இடத்தை சுத்தம் செய்தனர். மக்கள் பொறுப் பில்லாமல் வீசி விட்டுச் சென்ற பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் இதர குப்பைகளை அகற்றும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர். இது தொடர்பான செய்தி பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் வெளியானது. 'சைக்ளோத்தான்' நிகழ்ச்சி மூலம் மக்களிடம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் உடல் ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் எங்களின் முயற்சிக்கு வெற்றி கிடைத்தது. இதன் மூலம் சங்கத்தின் மீதான நன்மதிப்பும் உயர்ந்தது என்று அவர் மேலும் கூறினார்.



*ரோட்டராக்டர்கள் தனுஷ் மற்றும் ஹேமந்த் பெங்களூரிலிருந்து* 25,000 km *மிதிவண்டியில் பயணம் செய்யும் வழியில் பரூச்சில் ரோட்டரியினருடன்.*

இதில் முக்கியமானது சைக்கிள் ஓட்டிகளில் பலர், குறிப்பாக ரோட்ராக்டர்கள் மற்றும் இதர இளைஞர்கள் வாரத்தில் ஒருநாளாவது தங்களின் போக்குவரத்துக்கு சைக் கிளைப் பயன்படுத்துவது என உறுதி யேற்றனர். நகரில் மாசுபடிதலை குறைப்பதில் ரோட்டரியின் பங்குகளில் இதுவும் ஒன்று. நம்மால் முடிந்தவரை சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்று டாக்டர் பிரேம்குமார் கூறினார்.



வாரத்தில் ஒருநாளாவது காருக்கு பதிலாக சைக்கிளைப் பயன்படுத்து வதன் மூலம் ஆண்டுக்கு ஒவ்வொரு வரும் 0.5 டன் அளவு கரியமிலவாயு வெளியாவதைத் தடுக்க முடியும். இதை பலரும் பின்பற்றினால், பலன் பெரியதாக இருக்கும் என்றார் ராச்சனா.

சிஷு மந்திர் ரோட்ராக்ட் சங்கத்தைச் சேர்ந்த தனுஷ் மற்றும் ஹேமந்த் இருவரும், RID 3190க்கு உட்பட்ட பெங்களூர் ஒயிட்பீல்டு ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன், கின்னஸ் சாதனைக்காக 25,000 கி.மீ. சைக்கிள் பயணத்தை (சைக்ளோத்தான்-ஒரே நாட்டில்) மேற்கொண்டுள்ளனர். அவர்களின் சாதனைப் பயணத்தை கடந்த ஜூலை மாதம் 11 ஆம் தேதி, RID 3190ன் மாவட்ட ஆளுநர் ஃபஸல் மெஹ்மூத் பெங்களூரில் கொடியசைத்து தொடங்கிவைத்தார். நாங்கள் ஒரு நாள் மாலை அவர்களை வரவேற்று விருந்தளித்தோம். அதன் பிறகு அவர்கள் சூரத்திற்கு புறப்பட்டனர் என்றார் ராச்சனா. ■

# District Wise TRF Contributions as on December 2021

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus | Endowment Fund | Other Funds | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 90,803 | 1,044 | 15,000 | 183,814 | 290,662 | 139 | 2.6 |
| 2982 | 29,258 | 5,633 | 0 | 3,449 | 38,340 | 140 | 4.3 |
| 3000 | 3,890 | 611 | 0 | 31,104 | 35,604 | 9 | 0.2 |
| 3011 | 8,949 | 5,272 | 0 | 120,445 | 134,666 | 20 | 0.5 |
| 3012 | 19,993 | 3,811 | 25,041 | 247,096 | 295,941 | 17 | 0.5 |
| 3020 | 57,605 | 8,388 | 30,596 | 4,620 | 101,208 | 159 | 3.8 |
| 3030 | 24,125 | 444 | 41,360 | 15,704 | 81,633 | 63 | 1.3 |
| 3040 | 29,079 | 270 | 0 | 21,361 | 50,711 | 6 | 0.2 |
| 3053 | 3,150 | 1,811 | 27 | 0 | 4,988 | 5 | 0.2 |
| 3054 | 2,955 | 1,016 | 0 | 200,756 | 204,727 | 13 | 0.2 |
| 3060 | 46,744 | 1,442 | 0 | 83,520 | 131,706 | 771 | 16.0 |
| 3070 | 10,483 | 27 | 0 | 27,601 | 38,111 | 44 | 1.4 |
| 3080 | 9,524 | 4,389 | 1,000 | 6,281 | 21,193 | 62 | 2.0 |
| 3090 | 17,192 | 0 | 29,000 | 0 | 46,192 | 72 | 3.5 |
| 3100 | 19,843 | 0 | 0 | 2,537 | 22,380 | 67 | 3.0 |
| 3110 | 9,708 | 355 | 0 | 0 | 10,063 | 64 | 1.8 |
| 3120 | 54,712 | 1,000 | 0 | 0 | 55,712 | 87 | 2.6 |
| 3131 | 312,289 | 30,884 | 26,000 | 362,601 | 731,774 | 1,536 | 32.8 |
| 3132 | 22,954 | 1,326 | 5,000 | 9,619 | 38,899 | 42 | 1.3 |
| 3141 | 243,851 | 4,200 | 89,865 | 384,327 | 722,242 | 414 | 7.0 |
| 3142 | 241,471 | 2,229 | 8,145 | 24 | 251,869 | 568 | 16.8 |
| 3150 | 39,495 | 8,925 | 91,000 | 43,120 | 182,540 | 471 | 11.9 |
| 3160 | 56,840 | 3,387 | 17,264 | 0 | 77,491 | 31 | 1.3 |
| 3170 | 43,249 | 10,078 | 1,710 | 31,217 | 86,254 | 222 | 3.8 |
| 3181 | 16,529 | 4,447 | 203 | 0 | 21,179 | 98 | 3.0 |
| 3182 | 17,520 | 8,469 | 0 | 15,274 | 41,263 | 60 | 1.9 |
| 3190 | 121,753 | 15,664 | 30,411 | 36,518 | 204,346 | 426 | 6.9 |
| 3201 | 53,431 | 54,738 | 0 | 212,532 | 320,700 | 258 | 4.5 |
| 3203 | 26,220 | 16,273 | 7,086 | 183,841 | 233,420 | 156 | 3.8 |
| 3204 | 19,091 | 4,522 | 0 | 1,036 | 24,649 | 22 | 1.1 |
| 3211 | 21,404 | 380 | 0 | 18,263 | 40,047 | 32 | 0.7 |
| 3212 | 20,479 | 1,625 | 1,036 | 4,561 | 27,701 | 52 | 1.0 |
| 3231 | 10,478 | 7,913 | 0 | 2,851 | 21,242 | 125 | 3.6 |
| 3232 | 42,818 | 55,108 | 32,601 | 400,505 | 531,032 | 95 | 1.3 |
| 3240 | 73,255 | 11,913 | 0 | 69,381 | 154,549 | 280 | 8.6 |
| 3250 | 12,157 | 2,763 | 1,036 | 17,151 | 33,108 | 181 | 5.0 |
| 3261 | 4,435 | 304 | 300 | 114,587 | 119,627 | 9 | 0.3 |
| 3262 | 5,412 | 457 | 0 | 0 | 5,869 | 21 | 0.6 |
| 3291 | 76,977 | 1,901 | 11,171 | 13,554 | 103,603 | 192 | 5.1 |
| **India Total** | **1,920,123** | **283,017** | **464,850** | **2,869,250** | **5,537,241** | **7,029** | **4.5** |
| 3220 **Sri Lanka** | 37,908 | 6,661 | 1,510 | 1,000 | 47,079 | 108 | 4.7 |
| 3271 **Pakistan** | 5,240 | 622 | 0 | 17,343 | 23,204 | 8 | 0.4 |
| 3272 **Pakistan** | 16,832 | 10,633 | 0 | 2,117 | 29,582 | 15 | 0.8 |
| 3281 **Bangladesh** | 37,558 | 5,125 | 16,000 | 163,012 | 221,695 | 110 | 1.4 |
| 3282 **Bangladesh** | 25,608 | 7,199 | 1,000 | 27,193 | 61,000 | 61 | 1.6 |
| 3292 **Nepal** | 59,279 | 6,063 | 0 | 86,597 | 151,938 | 492 | 8.4 |
| **South Asia Total** | **2,102,548** | **319,319** | **483,360** | **3,166,512** | **6,071,739** | **7,823** | **4.3** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# இளைஞர்களுக்கு வாழ்க்கை கல்வி பயிற்சி

ரஷீதா பகத்

கல்வி கற்ற இளைஞர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறவேண்டு மென்றால், பாடப் புத்தகங்களைத் தாண்டிய சிலவற்றைப் பெறவேண்டும், தன்னம்பிக்கையும் ஆளுமை முன்னேற்றமும் அதற்கு முக்கியப் பண்புகளாக இருக்கும். ஆனால், இன்றைக்குக் கல்வி கற்ற பல இளைஞர்களிடம் இந்தப் பண்புகள் இருப்பதில்லை. அதனால், RILMன் TEACH திட்டம் வழங்கிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அந்தத் திட்டத்தின் பயிற்சி அம்சத்தில் கவனம் செலுத்தியுள்ள புத்தூர் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் (RID 3181) தெற்குக் கர்நாடகத்தில் உள்ள புத்தூரைச் சேர்ந்த, பெரும்பாலும் கிராமப் புறக் கல்லூரிகளில் பயிற்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.

“அறிவு” என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டம் இளைஞர்களுக்குப் போதுமான பயிற்சி, வாழ்க்கைத் திறன்களை அளித்து, தன்னம்பிக்கை, நல்ல தகவல் தொடர்புத் திறன் ஆகியவற்றை வழங்கி அவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற உதவும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. இப்போதைய தேவை, நம் இளைஞர்கள் தகவல் அறிவு மற்றும் சிந்தனை அறிவு ஆகிய இரண்டையும் பெறுவதற்கு உதவும் வாழ்க்கைத் திறன்களைப்பற்றிய பொதுவான புரிந்துகொள்ளல்தான்.

இந்தப் பயிற்சியின் உண்மை நோக்கம், இதில் பயிற்சி பெறும் இளைஞர்களைப் பொறுப்புள்ள குடிமக்களாக ஆக்குதல். இத்துடன் நெறிமுறைகளின் மதிப்பு, பூமியின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் தீவிர ஆர்வம், ஒருவருடைய மதிப்பீடுகள் மற்றும் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிற தன்னம்பிக்கை ஆகியவற்றைச் சேர்த்தால், இந்தப் பயிற்சி வகுப்பை நிறைவு செய்யும் மாணவர்கள் மேற்கல்விக்குச் செல்வதற்குத் தேவையான சரியான மனநிலை மற்றும் தாங்கள் தேர்ந்தெடுக்கும் வேலைக்கான திறன்களைக் கொண்டிருப்பார்கள் என்று அவர் தொடர்ந்து கூறினார்.

இந்தத் திட்டத்தின் தொடக்கத்தை விளக்கிய அதன் ஒருங்கிணைப்பாளர் மற்றும் சங்கத்தின் பதிவுச் செயலாளர் சனத் ராய், கொரோனா நோய்ப்பரவலின்போது கர்நாடக மாணவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முக்கியமான கல்வியை இழந்ததில் தான் இதன் வேர்கள் அமைந் திருந்தன என்கிறார். இவர்கள் எல்லாரும் 8ம் வகுப்பு மற்றும் 9ம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 10ம் வகுப்புக்குச் சென்றார்கள். ஆனால், வகுப்புகள் இணையத்தில் மட்டும் நடத்தப்பட்டதாலும், முக்கியமான ஆசிரியர்-மாணவர் உரையாடல்கள் இல்லாததாலும், இவர்களுடைய அடித்தளம் போதாமல் இருந்தது. அடுத்த ஆண்டு பொதுத் தேர்வைச் சந்திக்கப்போகும் குழந்தைகள் 8ம் வகுப்பு மற்றும் 9ம் வகுப்பில் பெறும் கல்வி முக்கியமானது என்பது நம் எல்லாருக்கும் தெரியும். அதனால், அப்படிப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதற்காக வித்யா சேது-வித்யாபியானா



புத்தூர் கவுன்சலர் ஜகனிவாசராவ் ‘அறிவு’ திட்டத்தை சங்க செயலாளர் ராஜேஷ் பெஜங்கலா, TEACH தலைவர் பாரதி சனத் ராய், கல்லூரி ஆசிரியர் தர்னப்பா கௌடா, சங்கத் தலைவர் நவீன்சந்திர நாயக், கல் லூரி தலைவர் சுரேஷ் குமார் மற்றும் Rtn ஆஸ்கர் ஆனந்த் ஆகியோர் முன்னி லையில் துவக்கி வைக்கி றார்.




என்ற திட்டத்தைக் கர்நாடக மாநில ரோட்டரி சங்கங்கள் தொடங்கின. திக்விஜயா செய்திகள் மற்றும் விஜயவாணி கன்னடா நாளிதழ், விளம்பர ஆதரவாளர்கள் மற்றும் மாநிலம்முழுவதும் உள்ள தாராள மனமுள்ள ரோட்டரியன்கள் இதற்கு உதவினார்கள்.

இந்தத் திட்டத்தின்படி, கன்னட மொழியில் இரண்டு புத்தகங்கள் அரசுப் பள்ளிகளில் கன்னட மொழி வழியில் பயிலும் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இந்தப் புத்தகங்களில் 8ம் வகுப்பு மற்றும் 9ம் வகுப்பில் கற்றுத்தரப்பட்ட ஆங்கில, கணக்கு மற்றும் அறிவியல் பாடத் திட்ட உள்ளடக்கங்களின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்கள் உள்ளன. இந்தப் புத்தகங்களை அனுபவம் மிக்க ஆசிரியர்கள் அங்கீகரித்துள்ளார்கள்’’ என்று தொடர்ந்து கூறுகிறார் இவர். ரூ.250 மதிப்புள்ள இந்தப் புத்தகங்கள் ரோட்டரி சங்கங்களுக்கு ரூ.100 மானிய விலையில் வழங்கப்பட்டன, கர்நாடக மாநிலம்முழுவதும் சுமார் ஐந்து லட்சம் புத்தகங்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த மாநிலத்தின் பிற ரோட்டரி சங்கங்களுடன் சேர்ந்து RC புத்தூர் சென்ட்ரல் உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளில் இந்த வழிகாட்டல் பாடப் புத்தகங்களை வழங்கத் தொடங்கியபோது, பல பெற்றோரும் ஆசிரியர்களும் எங்களிடம் சொன்ன விஷயம், நோய்ப்பரவலாலும் வழக்கமான வகுப்புகள் தடைப்பட்டதாலும் அவர்களுடைய குழந்தைகளுக்குத் தேவையான அறிவு, படிக்கும் ஒழுக்கம், கவனம் செலுத்தும் திறன் குறைந்துவிட்டது. இந்த மாணவர்கள் என்னவகைக் கல்வியைப் பின்பற்றவேண்டும் என்பதுபற்றிய தக வல்களை, அறிவை அல்லது வழிகாட் டுதலை இவர்களுக்கு வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்க எங்களிடம் கேட்டுக் கொண்டார்கள்.

அதனால், இந்தச் சங்கம் அறிவு-திட்டத்தைச் சிந்தித்தது, தங்களுடைய சங்கத்தின் உறுப்பினர்களில் கல்வி, நிதி, பொது நிர்வாகம், சட்டம் போன்ற பல துறைகளில் திறன் மிக்க தொழில் வல்லுனர்களை அடையாளம் கண்டது.

அறிவு திட்டத்தின்கீழ், புத்தூர் அரசுக் கல்லூரிகளில் ஓர் ஒரு மணி நேர நிகழ்ச்சி நடத்தப்படுகிறது, இதில் 45 நிமிடங்கள் பல தலைப்பு களில் பயிற்சி அளிக்கப்படுகிறது, 15 நிமிடங்கள் மாணவர்களுடன் உரையாடல் நடத்தப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக, இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தின் போது, புத்தூரைச் சேர்ந்த சுமார் 17 கல்லூரிகளில் இருந்து சுமார் 4,700 மாணவர்கள் பலன் பெறுவார்கள். டிசம்பர் நிறைவு வரை 28 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கன்னடம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும் இந்தப் பயிற்சி வகுப்புகளின்போது அறிவு ஆசிரியர்கள் கவனம் செலுத்தும் இரண்டு தலைப்புகளை அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்: வளர் இளம் பருவத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள், இந்தியப் பாதுகாப்புச் சேவைகளில் கிடைக்கும் தொழில் வாய்ப்புகள்.

இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து, TEACH குழு இந்தத் திட்டத்தை மற்ற கல்லூரி மாணவர்களுக்கும் நீட்டிக்கத் திட்டமிட்டுள்ளது என்றார் இந்தச் சங்கத்தின் TEACH தலைவர் பாரதி S ராய். ‘அறிவு’ பயிற்சியின் கீழ் கற்றுத்தரப்படும் தலைப்புகளைச் சங்கத்தின் பயிற்சியாளர்கள் வடிவமைத்துள்ளார்கள். அவற்றில் சில: வெற்றியைக் காட்சிப்படுத்துதல் மற்றும் இலக்குகளை அமைத்தல், பணி வாழ்க்கை நோக்கு நிலை, வளர் இளம் பருவப் பிரச்சனைகள், போட்டித் தேர்வுகள், சமூகப் பொறுப்புகள் மற்றும் பாதுகாப்புச் சேவைகளில் தொழில் வாய்ப்புகள். தேவைப்படும்போது, மற்ற தலைப்புகளையும் சேர்க்கலாம், கல்வி நிறுவனங்கள் தங்களுக்கு ஆர்வம் உள்ள தலைப்புகளைச் சுதந்தரமாகத் தேர்ந்தெடுக்கலாம்’’ என்றார் நாயக். ■

# ஒமிக்ரான் பரவல் ஒரு கண்ணோட்டம்!

ரஷீதா பகத்



*தொற்றுநோய் சிகிச்சை நிபுணர் Dr V ராமசுப்ரமணியன்*

கொரோனா வைரஸ், உருமாறிய கொரோனா என்ற வரிசையில் இப்போது ஒமிக்ரான் வைரஸ் மூன்றாவது அலையாக உருவெடுத்துள்ளது. நாம் வாழும் கடினமான காலங்களில் எனக்கு வந்த ஒரு வாட்ஸ் ஆப் செய்தி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் சாப்பிட்ட உணவு பற்றிய வரைபடத்தை பார்த்தபோது பேல் பூரி 10 சதவீதம், சேவ் பூரி 15 சதவீதம், தோசை 20 சதவீதம், தயிர்சாதம் 30 சதவீதம் டோலோ 650, 85 சதவீதம் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாக தொற்றுநோய் சிகிச்சைக்கான நிபுணர் டாக்டர் வி.ராமசுப்பிரமணியன் RID 3232 சார்பில் நடைபெற்ற மெட்ராஸ் ரோட்டரி சங்க கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கொரோனா தொற்று பற்றிய ஒரு கண்ணோட்டத்தை அவர் வழங்கினார். கடந்த இரண்டு ஆண்டுகளில் 300 மில்லியன் மக்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் சமீபத்தில் கிடைத்த தகவல்கள் கொரோனாவுக்கு 6 மில்லியன் பேர் பலியானதாகத் தெரிவிக்கின்றன. இந்த கொரோனா தொற்று அவ்வப்போது உருமாறி இப்போது ஒமிக்ரான் என்ற பெயரில் பரவி வருகிறது.

மருத்துவச் சுகாதாரத் துறையில் இப்போது நமக்குள்ள கவலை எல்லாம் இந்த உருமாறிய கரோனா, அதாவது ஒமிக்ரான் மற்றவற்றை விட எளிதில் பரவுவதாக கூறப்படுகிறது. தடுப்பூசியால் ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தியை தவிர்க்கும் திறன் கொண்டது. இது வீரியம் மிக்கது, மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அஞ்சப்பட்டது. ஆனால், அதிர்ஷ்டவசமாக அவ்வாறு நடக்கவில்லை. என்ன நடந்தது என்றால் சில சிகிச்சை முறைகளை தவிர்க்கும் திறன்பெற்றிருந்தது.

ஒமிக்ரான் வைரஸ் வேகமாக பரவுகிறது. அதை எளிதில் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவும் தட்டம்மை நோய்க்கு ஒப்பிட்டு பேசினோம் என்று கேப்ஸ்டோன் மல்டி ஸ்பெஷாலிடி மருத்துவமனையின் மருத்துவ இயக்குநரான அவர் தெரிவித்தார்.

## நோய் அறிகுறிகள்

ஜலதோஷம், தும்மல், தொண்டை கரகரப்பு, உடல் வலி மற்றும்ல லேசான காய்ச்சல் ஆகியவைதான் இதற்கான அறிகுறிகள் என்கிறார் டாக்டர் ராமசுப்பிரமணியன். ஆனால், இதற்கு முன்பு நாட்டை கரோனா வைரஸ் உலுக்கியபோது வயிற்றுப்போக்கு, சுவையில்லாமை மற்றும் வாசனை அறியாமை இருந்தது. பொதுவான புகார் என்னவெனில் ஜலதோஷம் மற்றும் தொண்டை கரகரப்பு. சிலர் தொண்டை வலி பற்றி புகார் தெரிவித்தனர். அவர்களுக்கு பாரா சிட்டமாலுக்கு மேலான மாத்திரைகள் தேவைப்படும்.

மற்றொரு வித்தியாசம் என்னவெனில் முன்பு வந்த கொரோனா வைரஸ் குழந்தைகளைத் தாக்கவில்லை. இப்போது சிறுவர் களுக்கும் 101 டிகிரி அல்லது 102 டிகிரி காய்ச்சல் வருகிறது. அதிர்ஷ்டவசமாக ஒன்றிரண்டு நாள்களுக்குப் பின் சரியாகிவிடுகிறது. ஒரு நல்ல செய்தி என்னெவனில் 4 அல்லது 5 நாட்களில் நீங்கள் குணமடைந்ததுபோல் உணர்ந்தால் அது ஒமிக்ரானாகத்தான் இருக்கும். நீங்கள், உங்களை ஒரு நான்கு அல்லது ஐந்து நாட்கள் தனிமைப்படுத்திக் கொண்டால் போதுமானது.

சிகிச்சையின்போது சில சமயங்களில் மோனோகுளோனால் ஆன்டிபாடி காக்டெய்ல் (இதை டிரம்பஸ் மெடிசின் என்றும் கூறுவார்கள்) மருந்து கொடுப்பார்கள். ஆனால், ஒமிக்ரான் வைரஸாக இருந்தால் அதற்கு வேலை இல்லை. பல்வேறு இணைநோய்கள் உள்ள நிமோனியா வைரஸ் உருவாகும் நிலையில் 95 சதவீதத்துக்கும் குறைவான ஆக்சிஜன் செறிவூட்டலைக் கொண்ட முதியவர்களுக்கு இது கொடுக்கப் படுகிறது. பின்னர் ஸ்டெராய்டுகள் கொடுக்கப்பட்டு அவை வேலை செய்கின்றன.

## தடுப்பூசிகளின் பங்கு

தடுப்பூசியால் தூண்டப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி மூன்று மாதங்களுக்குப் பிறகு மெதுவாகக் குறைவதையும் நாம் பார்க்கிறோம். நோய் எதிர்ப்பு சக்தியின் பாதுகாப்பு நிலை என்ன என்பதுகூட நமக்குத் தெரியாது. அப்படி அது

## ஒமிக்ரான் பற்றிய சுவாரஸ்மான தகவல்கள்

- ஒமிக்ரானுக்குப் பிறகு பூஸ்டர் தடுப்பூசி போட்டுக்கொள்ள குறைந்தபட்சம் 2 அல்லது 3 மாதங்கள் காத்திருங்கள். தொற்றே ஒரு வகையில் தடுப்பூசி போன்றதுதான். மூன்று மாதங்களுக்குப் பிறகு நோய் எதிர்ப்பு சக்தி குறையும் நிலையில் பூஸ்டர் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.
- உங்களுக்கு காய்ச்சல் இருக்கும்போது தடுப்பூசி போட்டுக் கொள்ளாதீர்கள். ஒன்று அல்லது இரண்டு நாள் காத்திருங்கள். கோவிட் இல்லாத நிலையில் சாதாரண ஜலதோஷம் இருக்கும்போது தடுப்பூசி போட்டுக் கொள்வதில் தவறு இல்லை.
- டெல்டா கொரோனா அல்லது ஒமிக்ரான் என்று மாறுபடுத்திப் பார்ப்பது கடினம். ஏனெனில் RT-PCR பரிசோதனை அதனை குறிப்பிட்டுச் சொல்லாது. மரபணுவை வரிசைப்படுத்துதல் வர்த்தக ரீதியில் செய்யப்படுவதில்லை. ஆனால், குழந்தைகளுக்கு அதிக காய்ச்சல் போன்ற அறிகுறி இருந்தால் ஒமிக்ரான் வைரஸால் இருக்கலாம். 5 அல்லது 6 நாட்களுக்குப் பிறகும் காய்ச்சல் நீடித்து, நாக்கில் சுவை தெரியவில்லை எனில் டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்டிருக்கலாம். இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் எதையும் திட்டவட்டமாக வேறுபடுத்தி பார்க்க முடியாது என்பதுதான்.
- ஒமிக்ரான் லேசான நோய் என்பதால் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்பது, நோய்த் தாக்கப்பட்ட குழந்தைகளும், தட்டம்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும் ஒரே அறையில் தங்கியிருப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் தட்டம்மை என்பது லேசான தொற்றுதான் என்றாலும் சில சமயங்களில் இணைநோய்கள் இருப்பது ஒமிக்ரான் தீவிர பாதிப்பை ஏற்படுத்திவிடும்.
- 60 வயதுக்கு மேலான இணைநோய் உள்ளவர்கள், சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சை செய்து கொண்டதன் மூலம் நோய் எதிர்ப்பு மண்டலம் பாதிக்கப்பட்டவர்கள், நோய் எதிர்ப்பு மண்டல நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்-டெல்டா வைரஸ் (உருமாறிய கொரோனா) தாக்குதல் இருக்கிறது என்று மருத்துவர்களால் கண்டறியப் பட்டவர்களுக்கு மோனோகுளோனால் காக்டெய்ல் மருந்தை முன்னதாகவே கொடுக்கலாம். இதுபோன்ற நோயாளிகளுக்கு 3 நாள் ரெம்டெசி விர் மருந்தும் பரிந்துரைக்கப்படுகிறது.
- ஒரு பயனுள்ள மந்திரம்: கொரோனா வைரஸ் தாக்குதல் என பரிசோதனை மூலம் தெரியவந்தால், தனிமைப்படுத்தலில் இருங்கள், ஊட்டச்சத்தான உணவை சாப்பிடுங் கள். நேர்மறையான எண்ணங்கள் வலுவான நோய் எதிர்ப்புசக்தியை உருவாக்கும் மற்றும் நோயிலிருந்து நீங்கள் விடுபட உதவும்.
- தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத வர்களுக்கு ஆபத்துக்கள் அதிகம். தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுடன் ஒப்பிடும் போது தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு தொண்டையில் வைரஸ் தாக்குதல் குறைவாகவே இருக்கும். எனவே தொற்று பரவுவதற்கான வாய்ப்பும் மிக குறைவாகவே இருக்கும்.
- ஒருவர் நீண்டதூர விமானப் பயணம் மேற்கொள்ளும்போது சில சமயங்களில் விமானத்தில் ஏறுவதற்கு முன் அவருக்கு வைரஸ் தாக்குதல் இல்லாமல் இருக்கலாம். ஆனால், தரையிறங்கியவுடன் அவருக்கு மருத்துவ ரீதியில் தொற்று இருப்பதாக காட்டலாம். இதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதில் ஏமாற்றுவேலை ஏதும் இல்லை. மேலும் விமானப் பயணிக்கு ஏற்கெனவே வைரஸ் நோய் தாக்குதல் இருந்திருக்கலாம். முதல் பரிசோதனையின் போது நோய் அவரது உடலில் அடை காத்திருக்கலாம். அவர் பயணம் முடிந்து தரை இறங்கியதும் அவை வெளிப்பட்டிருக்கலாம். இப்படி சில சம்பவங்களும் உண்டு.
- எந்த சோதனையும் 100 சதவீதம் உணர்திறன் கொண்டதோ அல்லது குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதோ அல்ல. ஒரே குடும்பத்தில் மனைவிக்கு அறிகுறிகள் இல்லாமல், அதே நேரத்தில் பரிசோதனையில் வைரஸ் தாக்குதல் என்றும், கணவருக்கு நோய் அறிகுறிகள் இருந்து, பரிசோதனையில் நோய்த் தொற்று இல்லை என்றும் தெரியவந்துள்ளதை மருத்துவர்கள் அறிவார்கள். RT-PCR பரிசோதனை 99 சதவீதம் சரியாக இருக்கும். எனவே நோய்த் தொற்று இருக்கிறது என்றால் இருக்கிறது என்றுதான் அர்த்தம். ஆனால் சில சமயங்களில் வைரஸ் தாக்குதல் இல்லை என்ற தவறான முடிவுகளும் வெளிப்படுவது உண்டு.
- மரபணுவை வரிசைப்படுத்துதல் இன்னும் வர்த்தகமாக்கப்படவில்லை. "டாடா டயக்னோஸ்டிக்ஸ்" விரைவில் புதிய பரிசோதனை முறையை அறிமுகப்படுத்த உள்ளது. இதற்கு Omnisure என பெயரிடப் பட்டுள்ளது. ஒருவருக்கு டெல்டா வைரஸ் தாக்குதல் இருக்கிறதா அல்லது ஒமிக்ரான் வைரஸ் இருக்கிறதா என்பதை ஒரு சில மணி நேரங்களில் பரிசோதித்து சொல்லி விட முடியும். சுவாரஸ்ய மான தகவலாக இருக்கிறது.

குறையும் நிலையில் பூஸ்டர் தடுப்பூசி தேவையோ என நாம் நினைக்கிறோம். நீங்கள் 60 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், உங்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருந்தால் மூன்றாவது தடுப்பூசி உங்களுக்கு பயனளிக்கும்.

ஒமிக்ரான் தொற்று உள்ளவர்களை ஐந்து நாள் தனிமைப்படுத்திக் கொண்டால் போதுமானது. உலக சுகாதார நிறுவனம் 14 நாட்கள் தனிமை தேவை என்கிறது. இந்திய அரசு 7 நாட்கள் தனிமைப்படுத்தல் வேண்டும் என்று சொல்கிறது. ஒமிக்ரான் இப்போது சமூகப் பரவலாக மாறியுள்ளது.

### அறிகுறிகள் இருந்தால் செய்யவேண்டியது என்ன?

ஒருவருக்கு உடலில் வலி, தொண்டை கரகரப்பு, காய்ச்சல் மற்றும் ஜலதோஷத் தினால் மூக்கு ஒழுகுதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் முதலில் தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள். பீதி அடைய வேண்டாம். நீங்கள்

இளம் வயதுடையவராகவும், தடுப்பூசி செலுத்திக் கொண்டவராகவும் இருந்தால் 7 நாட்கள் தனிமையில் இருங்கள், அதன் பிறகு வெளியில் செல்லுங்கள். ஆனால், உங்கள் உடம்புக்கு என்ன என்று உறுதிப் படுத்திக் கொள்ள விரும்பினால் RT-PCR பரிசோதனை மேற் கொள்ளுங்கள், அதன் பிறகு ஐந்து நாள் தனிமைப்படுத்தலில் இருங்கள். ஒருவேளை உங்களுக்கு வைரஸ் இருப்பது தெரியவந்தால் பீதி அடைய வேண்டாம் என்கிறார் அவர். பாராசிட்டமால் மாத்திரை மற்றும் இருமலை கட்டுப்படுத்த "சிரப்" எடுத்துக் கொள்ளுங்கள். வைட்டமின் மாத்திரைகள்கூட தேவைப்படாது. இருந்தாலும் நோயாளிகள் நன்றாக இருப்பதை உணர வைட்டமின் மாத்திரைகளும் தருவோம். அதிர்ஷ்டவசமாக ஒமிக்ரான் இருந்தால் 4 அல்லது 5 நாள்களில் உடல்நிலை சரியாகிவிடும். ஆனாலும் தொடர்ந்து உங்களுக்கு காய்ச்சலும் இருமலும் இருந்தால் மீண்டும் மருத்துவரைச் சென்று பாருங்கள்.

கோவிட் தொற்று இருப்பதாக கண்டறியப்பட்ட ஒருவர் 11 அல்லது 12 நாட்கள் கழித்து மீண்டும் பரிசோதித்துக் கொள்ள வேண்டுமா? இல்லையெனில் அவரது பெயர் நோய்த் தொற்றாளர் பட்டியலில் தொடருமா என்ற கேள்விக்கு டாக்டர் ராமசுப்பிரமணியன் பதிலளித்தார். நீங்கள் மீண்டும் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியதில்லை. பத்து நாட்களுக்குப் பிறகும் ராபிட் ஆன்டிஜென் பரிசோதனை, ஆன்டிஜெனை கண்டறிந்துவிடும். அது இறந்துபோன வைரஸாக இருக்கலாம். அதை RT-PCR பரிசோதனை தெரிவித்துவிடும். சில சமயங்களில் 12 வாரங்கள் வரைகூட நோய்த் தொற்று நீடிக்கலாம். எனவே மீண்டும் பரிசோதனை தேவையில்லை.

15 அல்லது 20 நாட்கள் விடுமுறைக்குப் பிறகு அமெரிக்கா அல்லது இங்கிலாந்துக்கு திரும்ப விரும்புபவர்களுக்கு நோய்த் தொற்று இருப்பது தெரியவந்தால், மருத்துவர்கள் அந்த நபர், தேவையான காலம் தனிமையில் இருந்துள்ளார், அவர் இப்போது பாதுகாப்பாக உள்ளார். எனவே விமானப் பயணத்தை அனுமதிக்கலாம் என்று சான்றிதழ் அளிக்கும்பட்சத்தில் அவர்கள் விமானப் பயணம் மேற்கொள்ளலாம்.

### மருத்துவரின் தடுமாற்றம்

இந்த தொற்றுக்காலத்தில் உங்களைப் போன்ற மருத்துவர்களுக்கு உள்ள மிகப்பெரிய சவால்கள் என்ன என்று கேட்டபோது, தகவல்களின் சுமைதான் என்று அவர் பதிலளித்தார். மருத்துவர்களை விட அதிக தகவல்களை அவர்கள் தெரிந்துவைத்திருக்கிறார்கள். கடந்த வாரம் நோயாளியை கவனித்துக் கொள்ளும் நபர் ஒருவர் என்னிடம் மருந்து, மாத்திரைகள் நிறைந்த பெட்டியைக் காட்டி, இதை நான் கொடுக்க வேண்டுமா? அல்லது பத்து நிமிடங்கள் கழித்து இதை நீங்களே தருவீர்களா? என்று கேட்டார். பல்வேறு தகவல்கள் மூலம் அவர்களே ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். அவர்களே மருத்துவர்கள்போல செயல்படுவது சரியானது அல்ல. எனவே உங்கள் முடிவைப் பற்றி முழு நம்பிக்கையுடன் இல்லாவிட்டால், இந்த தகவல் சுமை கையாள்வதற்கு கடினமானது.■

Rotary PEOPLE OF ACTION

# சேலத்தில் நடந்த ரோட்டரியின் வேலைவாய்ப்பு முகாம்

ரோட்டரி செய்திக் குழு



*வேலைவாய்ப்பு முகாமை பார்வையிடும் DG K சுந்தரலிங்கம்.*

RI தலைவர் சேகர் மேத்தா அவர்களின் குறிக்கோள்களில் முக்கியமான ஒன்று பெண்களுக்கு அதிகார மளித்தல். அவரின் வழிகாட்டுதலுக்கு இணங்குமாறு, RC சேலம், RID 2982, ஸ்கில் சோனிக் HR குழுமத்துடன் இணைந்து பெண்களுக்கு மட்டும் பிரத்யகேமான வேலைவாய்ப்பு முகாமை சேலம் நகரில் உள்ள ரோட்டரி கூடத்தில் நடத்தினர். 18 முதல் 21 வயது பெண்கள் சுமார் 500-க்கும் மேற்பட்டோர் இந்த நேர்காணலில் கலந்துகொண்டனர் என சங்கத்தலைவர் J செந்தில்குமார் கூறினார்.

அவர்களில் இருந்த 130 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான பயிர்சிகள் அளிக்கப் பட்டு அவர்கள் தகுதிக்கு ஏற்றவாறு வேலைகளை ஹோசூரில் திறக்கப் பட்டுள்ள Dr அலையில் வழங்கப் படும். என கூறினார். பங்கேற்றவர்கள் அனைவரும் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்கள் அல்லது தொழில்துறை கல்வியில் டிப்ளமோ பட்டம் பெற்றவர்கள் ஆவர். அவர்களின் செயல்திறனை பொறுத்து அவர்களின் வருமானம் ₹18,000 முதல் ₹23,000 வரை நிர்ணயிக்கப்படும்.■

# பெருந்தன்மையைக் கொண்டாடுவோம்!

V முத்துக்குமரன் மற்றும் கிரண் ஜெஹ்ரா

சமூக சேவை அல்லது ரோட்டரி அறக்கட்டளைக்கு நீங்கள் ஏதேனும் பங்களிக்க விரும்பினால் முதலில் உங்கள் மனைவியை நம்புங்கள். மும்பை குயீன்ஸ் நெக்லேஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த நிகுஞ்ச் ஜாவேரி, மும்பை ஏர்போர்ட் ரோட்டரி சங்கத்தின் நிதின் மேத்தா (RID 3141) இருவரும் தங்கள் மனைவிமார்கள் மீது மறைமுகமாக நம்பிக்கை வைத்திருந்தனர். சென்னையில் நடைபெற்ற மஹாப்ஸ் மண்டல மாநாட்டின்போது AKS உறுப்பினர்களாக அறிமுகமான போது இவர்கள் வெளிச்சத்துக்கு வந்தனர்.

மும்பை குயீன்ஸ் ரோட்டரி சங்கத்தின் முதல் AKS உறுப்பினர் ஜாவேரி. மேத்தா, அவரது மாவட்ட சங்கத்தின் தலைவராக இருந்து (20–21) கடந்த ஆண்டு AKS உறுப்பினராக உறுதிமொழி கொடுத்தவர். இருவரும் IPDG சுனீல் மெஹ்ராவின் பதவிக் காலத்தில் TRF எலைட் கிளப்பில் இணைய முடிவு செய்தனர்.

சமூக சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுக்காக ஜாவேரி, 2015ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். தனது எண்ணங்களுக்கு ஏற்ற மக்களுடன் சேர்ந்து அவர்களின் அறிவு மற்றும் நிபுணத்துவம் மூலம் அறக்கட்டளைக்கு தாராளமாக நிதி திரட்ட முடியும் என நினைத்தார்.

மும்பையில் உள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களின் நிர்வாகக் குழுவில் அவர் இடம் பெற்றிருந்ததால் தாம் பெற்றதை சமூகத்துக்குத் திருப்பிச் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். ரோட்டரியின் சர்வதேச திட்டம் அவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது. நாம் கொடுக்கும் நன்கொடை முறையான வழியில் உலகம் முழுவதும் தேவைப்படும் மக்களைச் சென்றடைகிறது. எனவே TRFன் வெற்றிக்கு திறவுகோலாக இருக்கும் வருடாந்திர நிதிக்கு 2,50,000 டாலர் செலுத்தி AKS உறுப்பினர் ஆனேன் என்கிறார் அவர்.

ஜாவேரி TRF அறக்கட்டளைக்கு அதிக நன்கொடை அளிக்க தூண்டு கோலாக இருந்தவர் மறைந்த ஜோதீந்திர வக்கீல். ஆசியாவின் முதல் AKS உறுப்பினரும், முன்னாள் மாவட்ட ஆளுநருமாக இருந்தவர்.



V முத்துகுமரன்

இடமிருந்து: *கனன், நிக்குஞ்ச் ஜவேரி, PDG சுனீல் மெஹ்ரா, நிதின் மற்றும் ஹர்ஷா மேத்தா.*




ஸ்ரீதர் பாரதி

*RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் TRF அறங்காவலர் அஜீஸ் மேமன் RID 3212 DGE V R முத்து மற்றும் அவர் மனைவி மலர்விழி அவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினர். அறங்காவலர் குலாம் வஹன்வதி (இடது) அவர்களும் உடன் உள்ளார்.*

ஜாவேரியின் மாமனாரும்கூட. மனைவி கனன், எனக்கு தூண்டு கோலாக இருந்ததால் 2020ம் ஆண்டு நவம்பரில் நான் முதல் பங்களிப்பைச் செய்ய முடிந்தது. அந்த சமயத்தில் மும்பை பங்குச் சந்தையில் சென் செக்ஸ் உச்சத்தைத் தொட்டது. பங்குச் சந்தையில் எதிர்பாராமல் எனக்கு கிடைத்த லாபத்தில் ஒருபகுதியை அறக்கட்டளைக்கு வழங்கினேன் என்றார்.

சிஸ்டம்ஸ் பிளஸ் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் சொந்தக்காரர். இந்த நிறுவனத்துக்கு மும்பை, புனே மற்றும் வேறு இடங்களில் கிளைகள் உள்ளன. அவருக்கு இரண்டு மகன்கள் மற்றும் தாராள மனதுடைய மனைவி இருக்கிறார். வரும் ஆண்டுகளிலும் நான் அறக்கட்டளைக்கு தொடர்ந்து பங்களிப்பேன் என்று புன்னகையுடன் தெரிவித்தார் ஜாவேரி.

### ஒரே RTGS பரிவர்த்தனை மூலம் 2,50,000 டாலர் நிதி

ரோட்டரியில் 25 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து வரும் பங்குத்தரகரான நிதின் மேத்தா, இதுவரை 1,525 டாலர் நிதியை மட்டுமே TRF நிதிப் பங்களிப்பாக கொடுத்துள்ளார். ஆனால், 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் காதலர் தினத்துக்கு மறுநாள் அவரது மனைவி ஹர்ஷா, AKS உறுப்பினருக்கான உறுதிமொழியை அளிக்குமாறு அறிவுறுத்தினார். ஒரே நாளில் RTGS பரிவர்த்தனை மூலம் 2,50,000 டாலர் நிதியை TRF-க்கு செலுத்தினார் நிதின் மேத்தா. நான் இப்போது முன்னாள் தலைவர் என்றாலும், சர்வதேச நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்தவும் சமூக சேவைத் திட்டங்களை நிறைவேற்றவும் எங்கள் சங்கத்துக்கு வழிகாட்டி வருகிறேன் என்கிறார் நிதின். சங்கத்தலைவர் என்ற முறையில் சர்வதேச மானிய உதவி திட்டத்தின் கீழ் நவி மும்பை மற்றும் பல்வல் (ஹரியாணா) ஆகிய இடங்களில் ஆக்சிஜன் உற்பத்தி தொழற்சாலைகளை நிறுவி வருகிறார். அவை இப்போது பூர்த்தி அடையும் நிலையில் உள்ளது. சங்கத் தலைவர் என்ற முறையில் அவர் சில சாதனைகளை செய்துள்ளார். தனது பதவிக்காலத்தில் (20–21) TRF நிதியாக 435,000 (அவரது RID 3141 மாவட்டத் தில்) டாலர் பங்களிப்புச் செய்துள்ளார். இது ஆசியாவில் இரண்டாவதாகும். அதேபோல 433,000 டாலர் மதிப்புக்கு சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்.

தமது மருமகள்களில் ஒருவர் பெங்களூரில் உள்ள கடில்ஸ் அறக் கட்டளைத் தலைவராக இருப்பதாகவும், புற்றுநோய் பாதித்த குழந்தைகளின் நல்வாழ்வுக்காக சேவை செய்து வருகிறார் என்றும் ஹர்ஷா குறிப்பிட்டார்.

TRF விருந்தில் RI தலைவர் மேத்தாவால் கௌரவிக்கப்பட்ட மகிழ்ச்சியில் IPDG சுனீல் மெஹ்ரா, சமூகங்களுக்கு கொடுப்பதும், ஆதரிப்பதும் ரோட்டரியின் DNA. இது லட்சக்கணக்கான மக்களின் மனதை வென்றுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

RID 3141ல் 36 AKS உறுப்பினர்கள் உள்ளனர். ரோட்டரி மாவட்ட உலகில் இது உயர்ந்ததாகும். மும்பை ரோட்டரி சங்கத்தில் மட்டும் 11 AKS உறுப்பினர்கள் உள்ளனர். நான் ரோட்டரி ஆளுநராக இருந்த காலத்தில் புதிதாக 8 பேரை AKS உறுப்பினர்களாக்கி, AKS மாவட்டம் 3040 இன் முந்தைய சாதனையான 7 AKS உறுப்பினர்கள் என்பதை முறியடித்தேன் என்று புன்னகையுடன் தெரிவித்தார் மெஹ்ரா.

### எண்டோவ்மென்ட் ஃபண்டுகளில் முதலீடு செய்வது புத்திசாலித்தனமாது

நான் முதன் முறையாக அறக் கட்டளைக்கு நன்கொடை வழங்கிய போது BMW கார் அல்லது பங்களாவோ வைத்திருக்கவில்லை. நீங்கள் திறந்த மனதுடன் ஒருவருக்கு கொடுத்தால், அதைவீட அதிகமாகப் பெறுவீர்கள் என்கிறார் முன்னாள் PDG (RID 3131) விநய் குல்கர்னி. 1994ம் ஆண்டு கார் விபத்தில் உயிர் பிழைத்த நான், உலகில் நல்லது செய்யவும், தேவையானவர்களுக்கு உதவி செய்யவும் கடவுள் எனக்கு மறுபிறவி கொடுத்திருப்பதாகவே நினைக்கிறேன் என்கிறார் அவர்.

ரோட்டரி என்டோவ்மென்ட் ஃபண்டுகளில் முதலீடு செய்வது புத்திசாலித்தனமானது என்கிறார் குல்கர்னி. இது ஒரு நிரந்தரமான நிலைத்தன்மையுடன நிதி ஆதார மாகும். முதலீட்டு வருமானங்கள், நிரந்தர வருவாய் ஆதாரங்களாக அறக்கட்டளை திட்டங்களுக்கு ஆதரவாக இருக்கின்றன. எதிர்கால தலைமுறையினருக்கு ஆண்டுதோறும் நிலையான திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதற்கான கூடுதல் ஆதாரங்களையும் வழங்குகிறது. மேலும் உங்கள் முதலீட்டின் மூலம் இன்னும் பலவற்றைச் செய்ய முடியும்.

ஐந்து லட்சம் டாலர் நன்கொடை யாக வழங்கியதன் மூலம் விநய் மற்றும் IPDG ராஷ்மி குல்கர்னி இருவரும் AKS அறங்காவலர் தலைவர் வட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். ரோட்டரி எங்களுக்கு ஒரு பணியோ அல்லது பதவியோ அல்ல. அது எங்களது வாழ்க்கையில் இணைந்துவிட்ட ஒன்று என்றார் அவர். மேலும் 17,000 டாலர் நன்கொடையாக வழங்கியதன் மூலம் அந்த தம்பதிகள் இந்தியாவில் 10,000 கண்புரை அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

### அவரது கவனம் போலியோ ஒழிப்பில்

ரோட்டரி அறக்கட்டளைக்கு 3,00,000 டாலர் நன்கொடை வழங்கிய DGE (RID 3212) V R முத்து கூறுகிறார்: எனது தாயார் V R ஜெகதாம்பாள் மூலம் நான் ஈர்க்கப்பட்டேன். அவர் கடந்த வருடம் 30,000 டாலர் நேரடி நன்கொடை நிதியாக வழங்கினார். RID 3212ன் முதல் AKS உறுப்பினர் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். எனது செயல்பாடுகள், மாவட்டத்தில் உள்ள இதர ரோட்டேரியன்களை ஊக்குவிப்பதாக அமையும். 2020ம் ஆண்டு TRF நிதி சேர்ப்புக்கு நான் பொறுப்பாளராக இருந்தபோது பத்து நாட்களில் நாங்கள் ரூ.1 கோடி நிதி திரட்டி TRF பங்களிப்புச் செய்துள்ளோம் என்று பெருமையுடன் அவர் நினைகூர்ந்தார்.

பின்னர் தனது இதயத்துக்கு விருப்பமான போலியோ ஒழிப்பு திட்டத்துக்கு நன்கொடை வழங்க தனது குடும்பத்தினரை சமாதானப் படுத்தினார். போலியோ பாதிப்பிலிருந்து ஒவ்வொரு குழந்தையும் விடுபட்டு பாதுகாப்பான வாழ்க்கையை வாழவைக்கும் பொறுப்பு நமக்கு உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். அவர் வருடாந்திர நிதி வழங்குவதிலும் ஆர்வமாக உள்ளார். அடிக்கடி அதே நேரத்தில் நம்மால் முடிந்ததை கொடுக்கலாம். இந்த எளிமையான, பாதுகாப்பான வழி மூலம் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார் அவர்.

குடும்பத் தொழில் மூலம் ஆண்டுக்கு ரூ.1,800 கோடி விற்று முதல் உள்ள நிறுவனத்தின் தலைவர் என்ற முறையில் அவரால் எளிதாக நிதி அளிக்க முடியும். ஆனால், மற்றவர்களையும் கொடுக்க வைப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. பலரிடம் பணம் உள்ளது. ஆனால், அதை மற்றவர்களுக்கு கொடுப்பதற்கான மனம்தான் வேண்டும். AKS தாராள மனது கொண்டவர்களுக்கானது. RYLA முன்முயற்சிகளில் அவர் இப்போது ஆர்வம் காட்டி வருகிறார். அவரின் விருதுநகர் ரோட்டரி சங்கம் மாதத்தில் மூன்று நாட்கள் RYLA திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதில் தமிழகம் முழுவதிலிருந்து பலரும் கலந்து கொள்கின்றனர். தொழில் முனைவோராகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் வெற்றியாளர்கள் இருவர், சிங்கப்பூரில் நடை பெறும் நான்கு நாள் பயிற்சி முகாமுக்கு முழு நிதியுதவியுடன் அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.■

ஸ்ரீதர் பாரதி




RID 3131 PDG *வினய் குல்கர்னி மற்றும் ராஷ்மி.*



*சங்கத்தலைவர் அமிதான்சு சத்பதி மற்றும் அவர் மனைவி சூர்யசிகா.*

# தில்லி அனந்தா ரோட்டரி சங்கத்தின் மருத்துவமனை திட்டம்

ரஷீதா பகத்

தொடங்கப்பட்டு 21 மாதமே ஆன ஒரு சங்கம் எவ்வளவு சிறப்பான சேவையை வழங்க முடியும் என்பதற்கு உதாரணம் தில்லி அனந்தா ரோட்டரி சங்கம் (RID 3012). இந்த சங்கம் ரூ.8.5 கோடி செலவில் மெகா மருத்துவமனையை நிறுவி, மேலும் பயிற்சி மற்றும் திறன் வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. கிரேட்டர் நொய்டாவில் நிலம் வாங்கி நான்கு மாடிகளுடன் வசதியான மருத்துவமனை விரைவாக நிறுவப்பட்டுள்ளது. ஏழைகளுக்கு சிகிச்சை அளிப்பதையே நோக்கமாகக் கொண்ட இந்த ரோட்டரி அனந்தா அறக்கட்டளை மருத்துவ மனையை அண்மையில் DG அசோக் அகர்வால் திறந்துவைத்தார்.

50 உறுப்பினர்கள் கொண்ட சங்கம் இதுபோன்ற ஒரு மெகா திட்டத்தை கருத்தில் கொண்டு செயல்படுத்திய தற்காக அவர் பாராட்டுத் தெரிவித்தார். தொற்றுநோயை நாம் எதிர்கொள்ளும் நேரத்தில் சங்கத்தின் உறுப்பினர்கள் மிகுந்த கவனத்துடனும், அர்ப்பணிப் புடனும் NCR பகுதியில் ஏழை மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இப்படி ஒரு பிரம்மாண்டமான மருத்துவமனையை நிறுவியுள்ளது. என்றார் அவர்.

சங்கத்தின் தலைவர் அமிதான்ஸு சத்பதி கூறுகையில், சங்கம் தொடங்கப்பட்ட உடன், ரத்ததானம் அல்லது தடுப்பூசி முகாம் போன்ற வழக்கமான திட்டங்களைவிட மறக்கமுடியாத ஒன்றைச் செய்ய விரும்பினோம். ஒன்று அல்லது இரண்டு தலைவர்களின் பதவிக்காலத்தையும் தாண்டி ஆண்டுதோறும் தொடரும் ஒரு நிரந்திர திட்டத்தை செயல்படுத்த விரும்பினோம்.

மருத்துவம் மற்றும் கல்வியில் பயிற்சி அளிக்கும் சிறந்த மையத்தை உருவாக்கவும் இரண்டாவதாக தீர்மானித்தோம். குறைந்த செலவில் நோய்கள் கண்டறிதல் வசதிகள்

இல்லாத ஒரு பகுதியில், மக்கள் தங்கள் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான திறனுள்ள பகுதியில் 1,000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தை அடையாளம் கண்டோம். சுமார் ரூ.1.7 கோடியில் நிலம் வாங்கப்பட்டது.

நான்கு மாடிகள் கொண்ட ஒரு கட்டடம் நிறுவ முடிவு செய்யப் பட்டது. அவற்றில் ஒரு தளம் இளம் மாணவர்களுக்கு கணினி பயிற்சி அளிப்பது, பெண்களுக்கு நர்சிங், டெய்லரிங், எம்பிராய்டரி போன்ற திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதற்கும் ஒதுக்கப்பட்டது. பெண்கள் திறன் வளர்ப்பு பயிற்சி பெற்று அதன் மூலம் வருமானத்தை தேடிக் கொள்ள செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

ரூ.8 கோடிக்கும் மேலான இந்த லட்சியத் திட்டத்துக்காக நிதி எப்படி திரப்பட்டது என்பதை சத்பதி விவரித்தார். மொத்தம் ரூ.8.5 கோடி செலவாகும் என திட்டமிடப்பட்டது. இதில் ரூ.4.82 கோடி உறுப்பினர்கள் மூலம் திரட்டப்பட்டது. நான் ரூ.22 லட்சம் நன்கொடையாக அளித்தேன். மற்றவர்கள் தங்களது தகுதிக்கு ஏற்ப ரூ.10, 20, 33 மற்றும் 50 லட்சம் நன்கொடையாக வழங்கினார்கள். பல உறுப்பினர்கள் ரூ.11 லட்சம் கொடுத்தனர். ஏனெனில் ரூ.11 லட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடை வழங்குபவர்கள் நிரந்த அறங்காவலர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்திருந்ததுதான். மீதமுள்ள தொகையை பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதியிலிருந்து (CSR-fund) பெற முயற்சித்து வருகிறோம் என்றார்.

ஏன் நீங்கள் சர்வதேச மானிய உதவியை நாடவில்லை என்று கேட்டால், அதற்கு அவர் அளித்த பதில், அந்த வழியையும் பயன்படுத்திக் கொண்டோம். சமீபத்தில் ரூ.1 கோடி செலவில் கண் மருத்துவமனை கட்டுவதற்கு சர்வதேச மானிய உதவி கிடைத்தது என்றார். எனினும் சர்வதேச மானிய உதவி பெறுவது தொடர்பாக சங்கத்தினரிடம் இருந்த விரக்தியையும் அவர் வெளிப்படுத்தினார். சர்வதேச மானிய உதவி பெறுவதற்கான நடைமுறை



DG அசோக் அகர்வாலின் மனைவி அருணா மற்றும் சங்கத்தினர் மருத்துவமனையில் புறநோயாளியுடன் பேசிக் கொண்டுள்ளனர்.

கடினமாக இருந்தது. பல்வேறு கேள்விகளை எழுப்பினர். மருத்து வமனை கட்டுவதற்காக மானிய உதவி பெற 2 ஆண்டுகள் நாங்கள் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. அதனால்தான் நாங்கள் (உறுப்பினர்கள்) சொந்த முயற்சியில் ரூ.4.82 கோடி திரட்டினோம் என்றார்.

புத்தாண்டு தினத்தன்று, DG அகர்வால் மருத்துவமனையில் ரூ.20 லட்சம் செலவில் நிறுவப்பட்ட எக்ஸ்ரே பிரிவை (ஊடுகதிர் பிரிவு) தொடங்கிவைத்தார். இதற்கான செலவு தொகையை சங்கத்தின் உறுப்பினர் சுரீந்தர் அரோரா, தனது விர்கோ பிளை-லாமினேட் தயாரிப்பு நிறுவனத்திலிருந்து நன்கொடையாக வழங்கினார்.

இரண்டாவது தளம் முழுவதும் டிஜிட்டல் கல்வி அறிவு இல்லாததால், ஆன்லைன் வகுப்புகளில் கலந்துகொள்ள முடியாத ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களின் கணினி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இங்கு இளைஞர்களுக்கு கணினி மற்றும் மடிக்கணினி பயன்பாடு தொடர்பான பயிற்சி அளிக்கப்படும் என்று சங்கத்தின் முதல் தலைவர் ராகேஷ் ஜெயின் விளக்கினார்.

இந்த கணினி வசதியைத் தவிர, NCR பகுதியை ஒட்டியுள்ள UP கிராமங்களில் உள்ள 12 முதல் 15 பள்ளிகளில் ஒவ்வொன்றும் ரூ.8 லட்சம் மதிப்பில் கணினி மையங்கள் ஏற்படுத்தப்படும். இதற்காக கூடுதலாக ரூ.1 கோடி செலவிட சங்கம் திட்ட மிட்டுள்ளது என்றும் சத்பதி மேலும் கூறினார்.

நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதை விட இந்த அறக்கட்டளை மருத்துவமனை வெளிநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும், அவர்களுக்கு இலவசமாக மருந்து, மாத்திரைகள் வழங்குவதில்தான் கவனம் செலுத்தி

வருகிறது. மேலும் நோய் கண்டறியும் வசதிகள், அதாவது CT ஸ்கேன் மற்றும் இதர அதிக செலவுபிடிக்கும் மருத்துவப் பரிசோதனை களுக்கு ஏழைகளால் அதிகம் செலவழிக்க முடியாது. அதனால், ஏழைகளுக்கு உதவும் வகையில் இத்தகைய பரிசோதனைகளை C T ஸ்கேனுக்கு ரூ.100. எக்ஸ்ரே வுக்கு ரூ.50 என்று குறைந்த கட்டணமே வசூலிக்கிறோம். விரைவில் டயாலிஸிஸ் வசதி ஏற்படுத்தவும் திட்டம் உள்ளது என்று முன்னாள் தலைவர் மனோஜ் அகர்வால் தெளிவுபடுத்தினார்.

MRI ஸ்கேன் போன்ற அதிக செலவு பிடிக்கும் மருத்துவ பரிசோதனை வசதியையும் ஏற்படுத்த நாங்கள் விரும்புகிறோம். தொடக்க நாளிலேயே புறநோயாளிகள் 100 பேர் வந்து சிகிச்சை பெற்றனர். அவர்களில்






*DG அசோக் அகர்வால், சங்கத்தலைவர் சத்பதி (வலது) முன்னிலையில், புதிய மருத்துவமனையை துவக்கி வைக்கிறார்.*

சிலருக்கு இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சத்பதி மேலும் கூறுகையில், இந்த நிரந்தர மெகா திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேருக்கு சேவை செய்ய நினைக்கிறோம். தினமும் 300 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் இது சாத்தியமானது என்றார்.

RI தலைவர் சேகர் மேத்தா, காஜியாபாத் வந்திருந்த போது, மிகப்பெரிய நன்கொடை யாளர் என்ற முறையில் அவரை கௌரவித்தார். மெகா மருத்துவமனைத் திட்டத்தையும் அதன் நிரந்தரத்தன்மையையும் கேட்டு பாராட்டினார். ரோட்டரி உலகில் இது போன்ற திட்டங்கள் செயல் படுத்தப்படுவதைத் தான் தாம் காண விரும்பியதாகவும் மேத்தா குறிப்பிட்டார்.■




## Membership Summary

As on January 1, 2022


| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 134 | 6,152 | 7.39 | 46 | 52 | 238 |
| 2982 | 76 | 3,563 | 7.10 | 47 | 98 | 73 |
| 3000 | 137 | 5,455 | 9.21 | 93 | 262 | 214 |
| 3011 | 125 | 4,654 | 26.97 | 73 | 118 | 36 |
| 3012 | 148 | 4,135 | 25.04 | 65 | 77 | 61 |
| 3020 | 78 | 4,772 | 7.17 | 30 | 166 | 350 |
| 3030 | 97 | 5,162 | 15.34 | 119 | 251 | 360 |
| 3040 | 102 | 2,604 | 13.90 | 55 | 81 | 196 |
| 3053 | 71 | 2,831 | 18.13 | 34 | 49 | 118 |
| 3054 | 184 | 7,469 | 20.16 | 104 | 177 | 563 |
| 3060 | 110 | 5,165 | 14.99 | 63 | 71 | 146 |
| 3070 | 124 | 3,305 | 14.97 | 47 | 37 | 59 |
| 3080 | 98 | 4,161 | 13.38 | 137 | 159 | 115 |
| 3090 | 90 | 2,313 | 5.64 | 41 | 73 | 123 |
| 3100 | 106 | 2,395 | 10.14 | 11 | 21 | 146 |
| 3110 | 142 | 3,739 | 11.84 | 14 | 17 | 106 |
| 3120 | 90 | 3,671 | 16.07 | 62 | 32 | 55 |
| 3131 | 139 | 5,566 | 23.86 | 110 | 234 | 138 |
| 3132 | 90 | 3,618 | 10.86 | 32 | 125 | 166 |
| 3141 | 117 | 6,463 | 27.01 | 138 | 185 | 102 |
| 3142 | 101 | 3,798 | 21.16 | 79 | 145 | 80 |
| 3150 | 115 | 4,311 | 13.33 | 78 | 142 | 118 |
| 3160 | 78 | 2,640 | 8.63 | 29 | 20 | 82 |
| 3170 | 139 | 6,335 | 14.92 | 83 | 243 | 169 |
| 3181 | 87 | 3,510 | 8.72 | 33 | 194 | 115 |
| 3182 | 85 | 3,500 | 9.57 | 42 | 126 | 104 |
| 3190 | 162 | 6,752 | 18.39 | 162 | 207 | 70 |
| 3201 | 153 | 6,022 | 9.51 | 112 | 95 | 70 |
| 3203 | 93 | 4,796 | 7.91 | 74 | 233 | 36 |
| 3204 | 62 | 2,071 | 6.61 | 21 | 24 | 13 |
| 3211 | 148 | 4,870 | 7.57 | 7 | 24 | 133 |
| 3212 | 143 | 5,284 | 12.64 | 75 | 204 | 153 |
| 3231 | 99 | 3,760 | 8.54 | 29 | 81 | 419 |
| 3232 | 162 | 7,562 | 18.30 | 118 | 213 | 99 |
| 3240 | 102 | 3,576 | 15.78 | 62 | 405 | 216 |
| 3250 | 108 | 4,017 | 20.10 | 63 | 73 | 185 |
| 3261 | 92 | 3,237 | 17.59 | 15 | 24 | 44 |
| 3262 | 125 | 4,137 | 14.47 | 69 | 79 | 105 |
| 3291 | 169 | 4,272 | 23.20 | 133 | 96 | 651 |
| **India Total** | **4,481** | **171,643** | | **2,605** | **4,913** | **6,227** |
| 3220 | 76 | 2,391 | 15.38 | 88 | 132 | 75 |
| 3271 | 132 | 2,253 | 17.39 | 97 | 185 | 25 |
| 3272 | 161 | 1,961 | 17.23 | 70 | 22 | 47 |
| 3281 | 326 | 8,413 | 17.86 | 265 | 149 | 208 |
| 3282 | 186 | 3,991 | 11.27 | 199 | 47 | 47 |
| 3292 | 154 | 6,062 | 17.20 | 170 | 130 | 128 |
| **S Asia Total** | **5,516** | **196,714** | | **3,494** | **5,578** | **6,757** |

*Source: RI South Asia Office*


## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotary clubs | : | 37,092 |
| Rotaract clubs | : | 10,859 |
| Interact clubs | : | 16,971 |
| RCCs | : | 11,994 |
| Rotary members | : | 1,189,608 |
| Rotaract members | : | 237,990 |
| Interact members | : | 390,333 |

*As on January 19, 2022*



**Rtn Shekhar Mehta**
RI President



**Rtn Ramesh Meher**
District Governor

# GLIMPSES OF




Rotary Club of Chandrapur imparted self-defence lessons to 30 girls at the Jubilee High School. The program is in District 3030's agenda DG Ramesh Meher is of the view that girls should be able to protect themselves, take care of themselves and do excellent work in the society to create a better and healthier society and to fulfil their dream, our club should also have a share, said club president Shrikant Reshimwale. The training was provided by the Martial Arts and School Games Association. All the girls were adorned with 'Yellow Belt' and a certificate by DG Meher on November 12, 2021. Project Director of the event was Uttam Dakre and Suraj Wagh. Club Secretary Avinash Uttarwar delivered the vote of thanks.

## Rotary Chandrapur imparted self-defence lessons for girls



## Rotary Nagpur Ishanya brings Muskaan on the faces of children

For Rotary Nagpur Ishanya, muskaan has a deeper meaning than just a smile. The club's flagship project — Muskaan — is an attempt to uplift and inspire the under privilegedchildren of the society. This was the 10th edition of 'Muskaan'.

And, it was different this time. For the first time the club hosted 227 children for two days. For the 227 children from the Baba Amte's Hemalkasa Anand Ashram, it was a unique, novel experience in many aspects. It was their first ever outing outside the Ashram, first ever bus journey, first ride on the Metro and their interaction with the outside world.

The participation this year was bigger with

- 107 children from Katol road Vidhyalaya
- 10 children from Bal Sadan Anath Ashram
- 227 tribal children from Baba Amte's Hemalkasa
- 59 children from Nutan Bharat
- 150 children from Pandit Nehru Hajaripahad

The children had a fun-filled day at Divya Nirmal Dham Ashram (Sudhanshu Maharaj Ashram), Suraburdi where they played many games organised by the entire team of Muskaan. The dance session was full on Masti for them and our members too. The kids were amused by the aero-modelling show.

It was heartening to note how they asked for serving food in small quantities; in the process, spreading a message to avoid food wastage. All the children were excited to receive their goodie bags when they were dropped off at their respective homes. .

All Covid protocols such as wearing masks and frequent use of hand sanitiser were followed by the students, caretakers, accompanying staff and the club members. Club members, led by president Pritesh Chandak, worked tirelessly towards the success of the project.





ADVT.

# DISTRICT 3030

जीवन RID 3030 RY 2021-22
LIVE LIFE.... GIVE LIFE

SERVE TO CHANGE LIVES

## Rotary Club Nasik & Magnum Heart Institute help save lives of 14 children: courtesy TRF's Global Grant






Congenital anomalies in heart occurs at birth. It can lead to stunted growth, poor health of the child and can lead to premature death. However if diagnosed and treated in time, this is fully curable and children can then lead a healthy life.

These anomalies in medical terms are called PDA, VSD, ASD, RSOV and MAPCA.In layman's terms, they mean some problems in the chambers of the heart. The effect is lack of supply of oxygenated blood to different parts of body which manifests as stunted growth. Even though curable through surgery, the medical equipment needed for treatment are expensive, and so the cost of surgeries become unaffordable for the underprivileged. costs in corers. End result

RC Nasik decided to establish such facilities in Nashik through GG to enable cost-free treatment to children of marginalised families. TRF was most helpful and approved the Magnum Cath Lab Project under GG1642528. ".

Despite the Covid pandemic, work continued diligently and orders were placed with a Japanese manufacturer. The equipment arrived in Mumbai and was finally installed at the Magnum Heart Institute in Nashik. DG Meher inaugurated the facility on 27 August '21.

Now the task was to identify children with congenital heart disorder. From the initial health check up to ECG and more tests, children have to undergo various screening. Then starts the counselling process of their parents. Experts explain them the issues at hand, possible treatment and prospects of healthy life for their children. All this process was going on simultaneously in the many adivasi padas around Nashik while the equipment was getting installed. A batch of 14 children aged between 2 to 17 years was selected for this bloodless surgical procedure with the help of the newly commissioned machine.

A team led by renowned cardiac surgeon of Nashik, Dr Manoj Chopda, carried out the pinhole surgeries on these 14 selected children on Oct 5 and 6. Within a week, all the children were discharged and post operative visit confirmed that these children are now leading a very healthy and happy life!

Twenty-five such free surgeries will be carried out every year, bringing not only smiles on the faces of parents but helping these children become healthy and happy citizens of India.

# TRF மானியம்: வரமா சாபமா

ரஷீதா பகத்

மஹாப்ஸ் 21 மண்டல மாநாட்டில் RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி தலைமையில் நடைபெற்ற அமர்வில் TRF மானியம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார்.

TRF அமர்வுகளில் சர்வதேச மானிய உதவிக்கு ஒப்புதல் வழங்கும் முன்பு RI ஊழியர்களால் பல்வேறு கேள்விகள் கேட்கப்படும் என்று உள்வரும் TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா தெரிவித்தார். நீங்கள் வங்கிக்குச் சென்று கடனுதவி கேட்டு விண்ணப்பித்தால் அவர்கள் உங்களிடம் 50 கேள்விகளைக் கேட்பார்கள். கடன் உத்தரவாதம், ஆவணங்கள், உங்கள் வீட்டின் அடமானம் உள்பட பல கேள்விகளை எழுப்புவார்கள். ஆனால், இங்கு அறக்கட்டளை, உங்களிடம் தேவையான ஒரு சில கேள்விகளை மட்டும் கேட்டுவிட்டு உங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது. மேலும் TRF கொடுக்கும் நிதிக்கு வட்டி ஏதும் வசூலிப்பதில்லை. மேலும் அவர் கூறுகையில், இது கடனுதவி கிடையாது. ரோட்டேரியன் என்ற அடையாளத்துக்காக உங்களுக்கு வழங்கப்படும் பணம்.

RI தலைவர் சேகர் மேத்தாவிடம் கோட்பாகி ஒரு கேள்வியை எழுப்பினார். மானியங்கள் குறித்து பல கேள்விகள் உள்ளன. அறக்கட்டளை மூலம் பல்வேறு வகையான மானியங்கள் வழங்குவதில் குழப்பங்கள் உருவாகின்றன. நீங்கள் உறுப்பினராக உள்ள கொல்கத்தா மஹாநகர் ரோட்டரி சங்கம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் 10 சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. ஒரு சங்கம் ஒரே நேரத்தில் செய்யக்கூடிய திட்டங்களின் உச்சம் என இதை நான் கருதுகிறேன். எனவே ஒரே சங்கம் எப்படி இத்தனை மானியங்களைப் பெறமுடியும். உங்கள் உறுப்பினர்கள் எப்படி அதைச் செய்கிறார்கள்?

இதற்கு பதிலளித்த மேத்தா, நான் சில மாவட்டங்களுக்குச் சென்று பார்த்தபோது, கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு மாவட்டம் முழுவதும் நான்கு திட்டங்களை மட்டுமே செயல்படுத்தியுள்ளனர். ஒரே சங்கமான எங்கள் சங்கம் 10 மானியத் திட்டங்களைச் செயல் படுத்தும் போது மாவட்டம் முழுவதும் உள்ள சங்கங்கள் ஏன் அதிக அளவில் செய்ய முடியாது.

சமூகசேவைத் திட்டங்களைச் செயல்படுத்த விரும்பும் எந்த ஒரு சங்கத்திலும், அதன் தலைவரும், நிர்வாகிகளும் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் நிதிதான் என்று மேத்தா கூறினார். நிதியைப் பெறுவதற்கான எளிமையான வழி TRF மானியம். இரண்டு விஷயங்களில் சங்கங்கள் சரிவர செயல்படத் தவறி விடுகின்றன. ஒன்று செயல்படுத்தப்போகும் திட்டத்தை தெளிவாக எடுத்துரைப்பது. இரண்டாவது நிதி திரட்டுவதற்கான முயற்சிகள் என்ன என்பது. 90 சதவீத நேரங்களில் உங்களின் நிதி திரட்டும் திட்டங்கள் சரிவர வேலை செய்யாது. ஆனால், TRF மானிய உதவி இருந்தால் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும்.

15-க்கும் குறைவான சர்வதேச மானிய உதவித் திட்டங்களைச் செயல்படுத்தும் மாவட்டங்களில் அந்த பிராந்தியத்தில் உள்ள TRF அறங்காவலர் சர்வதேச மானிய உதவிகள் பெறுவது குறித்து பயிற்சி பட்டறைகள் நடத்தலாம். நான் மிகவும் அதிர்ஷ்டக்காரன். நான் மாவட்ட ஆளுநராக வருவதற்கு முன்பே எங்கள் மாவட்டத்தில் எனக்கு முன்னால் இருந்தவர்கள் சர்வேதச மானிய உதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்கள். அதனால், எனக்கு அதிக பலன் கிடைத்தது. நாங்கள் ஓராண்டில் 10 சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்தினோம். இதற்கெல்லாம் காரணம், நாங்கள் அதற்கான முயற்சி களை மேற்கொள்ளத் தயாராக இருந்ததுதான்.

மேத்தா மேலும் கூறுகையில், அரங்கத்தில் இருக்கும் RI அதிகாரிகள் அனைவரும் ஏதோ ஒரு வகையில்



நிதித்துறையுடன் தொடர்பு உடைய வர்கள். மானிய உதவி தொடர்பான ஆவணங்கள் எப்படி முடித்து வைக்கப்படுகின்றன என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும். அவற்றை கொண்டு செல்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஆனால், சர்வதேச மானியத்திட்டங்களைச் செயல்படுத்து வது எளிதானது. இந்த மானிய உதவி மூலம் நீங்கள் உங்கள் சமூகத்திற்கு மட்டும் சேவை செய்யவில்லை, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு வாய்ப்பு அளிக்கிறீர்கள். உலகில் நம்மைப் போல் சமூக சேவை செய்யும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைப்பது இல்லை என்றார்.

மாவட்டங்கள் சர்வதேச மானிய உதவித் திட்டங்களை நிறைவேற்ற என்ன உதவி தேவைப்படும், நிபுணத்துவம் தேவைப்படும் என்பது குறித்து விளக்க முடியுமா? என்று அடுத்த கேள்வியை கோட்பாகி, பாண்ட்யாவிடம் எழுப்பினார். உலகளாவிய மானியங்களை கண்காணிப்பதில் ரோட்டரி பணியாளர்கள் (Technical Cadres) முக்கிய பங்காற்ற முடியும். கண்காணிப்பது மட்டுமல்ல, பயிற்சி அளிப்பதும் இதில் அடங்கும். எங்கள் மண்டலங்களில் 129 பணியாளர்கள் உள்ளனர். அவர்கள் கண்காணிப்பதிலும், மானிய உதவி தொடர்பான வழிகாட்டுதலிலும் வல்லவர்கள். பணியாளர்களின் நிபுணத்துவத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் பாண்ட்யா.




அவர் RISAOண் TRF தலைவர் சஞ்சய் பார்மரிடம் பணியாளர்கள் விவரங்களை நடப்பு மற்றும் உள்வரும் மாவட்டத் தலைவர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். மானியங்களின் முன் திட்டமிடலில் கூட இவர்களின் திறமைகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

குழுவில் இடம்பெற்றிருந்த TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி கூறுகையில், ஒவ்வொரு மாவட்டத்தின் பணியாளர்கள் பற்றிய விவரங்களை நாங்கள் ஏற்கெனவே அனுப்பிவைத்துள்ளோம். அவர்களின் பெயர் மற்றும் தொடர்பு எண்களை மாவட்ட டைரக்டரியில் பதியுமாறு DG-க்களை கேட்டுக்கொண்டுள்ளோம் என்றார்.

மானியங்களின் முன் திட்டமிடலில் இந்த பணியாளர்கள் பயனுள்ள ஆதாரங்களாக இருக்க முடியும் என்பதால் இதை உறுதிசெய்யுமாறு பாண்ட்யா DGE-க்களை கேட்டுக் கொண்டார். அவர்களின் சேவைகள் குறிப்பிட்ட ரோட்டரி மாவட்டங் களுக்கு மட்டும் கட்டுப்படுத்தாமல் அவர்கள் பற்றிய தகவல்களை rotaryindia.org இணையதளத்தில் கிடைக்கச் செய்யலாம் என்றார் தலைவர் சேகர் மேத்தா. ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர், யாரைவேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் தயார்படுத்தலாம்.

கோட்பாகி அடுத்ததாக வாஹன்வதியிடம் மானியங்கள் மற்றும் சர்வதேச கூட்டாளர்களைப் பெறுவதில் சிரமங்களைச் சந்திப்பதாக மாவட்டங்கள் மற்றும் சிறிய சங்கங்கள் புகார் தெரிவிக்கினறனவே என்றார். மண்டலத்தில் உள்ள அறங்காவலர் முக்கியப் பங்கெடுத்து சிறிய சங்கங் களை ஒருங்கிணைக்க வேண்டும்.

**இடதிலிருந்து:** RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி,* TRF *அறங் காவலர் குலாம் வாஹன்வதி,* RI *தலைவர் சேகர் மேத்தா மற்றும் அறங்காவலர்-தேர்வு பரத் பாண்ட்யா.*

இப்படிச் செய்வதன் மூலம் TRF-க்கு அவர்களின் பங்களிப்பை கருத்தில் கொள்ளாமல் சர்வதேச மானிய உதவியைப் பெற முடியும் என்றார்.

இதற்கு பதிலளித்த வாஹன்வதி, மிகக் குறைவான DDF உள்ள மாவட்டங்கள், அதிக DDF உள்ள மாவட்டங்களால் ஆதரிக்கப்படுவதை உறுதி செய்ய ஒருங்கிணைந்த முயற்சி வேண்டும். சர்வதேச மானிய உதவி என்பது சமூகத்தில் ஏழை மக்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கான திட்டத்திற்கானது. அதனால் மக்கள் சிறிய மாவட்டங்களுக்கு ஆதரவளிக்க முன்வருகிறார்கள்.

உங்களுக்கு எந்த பின்னணியும் இல்லாத சூழலில் நாங்கள் மிகப் பெரிய சவாலை எதிர்கொள்ள வேண்டி யுள்ளது. உதாரணமாக தலைவர் சேகர் மேத்தா உறுப்பினராக உள்ள கொல்கத்தா மஹாநகர் ரோட்டரி சங்கத்தை எடுத்துக் கொள்வோம். அது ஒரு போதும் சிரமத்தை எதிர்கொள்ளாது. ஏனெனில் ஆண்டுக்கு 10 சர்வதேச மானிய உதவித் திட்டங்களை அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இத்தனை ஆண்டுகளில் அவர்கள் ஒருபோதும் சிக்கல்களை சந்தித்ததில்லை. அதிகப்படியான சர்வதேச சங்கங்கள் நாங்கள் உங்களுடன் கூட்டாளராக இருக்க விரும்புகிறோம் என்று கூறுவார்கள். ஆனால், எந்த பின்னணியும் இல்லாத நிலையில் சங்கங்கள் அல்லது மாவட்டத்துக்கு உதவி தேவைப்படும்போது நானே சர்வ தேச கூட்டாளர்கள் கிடைக்க உதவி யுள்ளேன். உலகம் முழுவதும் நமக்கு நண்பர்கள் உள்ளனர். நாங்கள் உதவ முடியும் என்றார்.

உள்ளூர் சமூகத்தின் தேவை களை நிவர்த்தி செய்யும் அல்லது பூர்த்தி செய்யும் திட்டம் உங்களிடம் இருந்தால், உங்களுக்கு நிதி ஒரு தடையாக இருக்காது என்று சொல்லு மாறு நிறுவனப் பங்கேற்பாளர்களுக்கு அவர் உறுதியளித்தார்.

தலைவர் மேத்தா கூறுகையில், தாம் உறுப்பினராக உள்ள சங்கத்தை போலுள்ள அனைத்து சங்கங்களும் சிறிய சங்கங்களை அணுகிப் பேச வேண்டும். DG ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட வேண்டும். சிறிய சங்கங்கள்,

பெரிய சங்கங்கள் மற்றும் சர்வதேச கூட்டாளர்களுடன் இணைந்து சர்வதேச மானிய உதவித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். சர்வதேச மானிய உதவி பெறுவது, வெளிநாட்டு கூட்டாளர்களுடன் எப்படி உறவுகளை வளர்த்துக் கொள்வது என்பதற்கு இது வாய்ப்பாக இருக்கும். அடுத்த கட்டத்தில் அவர்களாகவே முன்னோக்கிச் சென்று சர்வதேச மானிய உதவியுடன் திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

சர்வதேச மானிய உதவி கேட்டு விண்ணப்பிக்கும் போது எவான்ஸ்டனில் உள்ள RI வாரிய ஊழியர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்பதாக மாவட்டங்கள் புகார் தெரிவிக்கின்றன. இது சரியான மதிப்பீடு அல்ல என்று கூறுகிறார்கள். எவான்ஸ்டனில் உள்ள ஒருவரால், பீகானீர், கொல்கத்தா, ஜார்க்கண்ட் அல்லது மகாராஷ்டிரத்தில் உள்ள ஊரகப்பகுதியில் உள்ள உள்ளூர் பிரச்னைகளின் முக்கியத்துவத்தை எப்படி புரிந்து கொள்ள முடியும்? என்று கேள்வி எழுப்புகின்றனர் என்றார்.

இந்த கேள்விக்கு பதிலளித்து மேத்தா பேசுகையில், இதுபோன்ற விஷயங்களை நாம் பிராந்திய அளவிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். RI தலைமையகத்தில் பணிசெய்யும் ஒருவரால் எழுத்தறிவு இயக்கத் திட்டத்தையோ அல்லது ஆர்ஜென்டினா, ஆப்பிரிக்கா, இந்தியா அல்லது வங்கதேச நாடுகளின் தேவைகளை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? இது பிராந்திய அளவிலேயே இறுதி செய்யப்பட வேண்டும். சஞ்சய் பார்மர் மற்றும் அவரது சகாக்களுக்கு அதிகம் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அவர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக எழுத்தறிவு நிபுணர்கள் இருக்கிறார்கள். ரோட்டரி தலைமையகத்தில் செயல்படும் ஒரு நிபுணரால் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள எழுத்தறிவு பிரச்னையை புரிந்துகொள்ள முடியும். ஆனால், அதுபோன்ற நபர்கள் பிராந்திய அலுவலகத்திலும் இருக்க வேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் அது நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

பிராந்தியமயமாக்கல் முறை ஏற்கனவே CSR நிதியுடன் தொடங்கி விட்டது. இன்று RISAO ஊழியர்கள் செய்துவரும் பணிகளுக்கு நன்றி. CSR மானியங்கள் பிரத்யேகமாக இந்தியாவுக்கானவை. தெற்காசிய அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு அவை அனுமதிக்கப்படுகின்றன. பார்மர் மற்றும் அவரது இரு சகாக்கள் இப்போது CSR மானியங்களை சிறப்பாக கையாண்டு வருகின்றனர் என்றார் வாஹன்வதி.

அவர்கள் கேட்கும் கேள்விகள் மிகவும் முக்கியமானவை என்பதில் நாம் தெளிவாக இருப்போம். மேற்பார்வையிடும் விவகாரத்தில் எனக்கு தொடர்பு இருக்கிறது என்று வாஹன்வதி மேலும் கூறினார். சேகர் மற்றும் பரத் ஆகியோருடன் நான் முற்றிலும் உடன்படுகிறேன். சில சமயங்களில் 1,00,000 டாலர், உங்கள் கையொப்பத்தின் பேரில் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் நீங்கள் ரோட்டேரியன்கள் என்ற முறையில் உங்கள் மீது அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே அந்த நிதி அனுமதிக்கு முன்னதாக கேட்கப்படும் கேள்விகள் முக்கியமானவை மட்டுமல்ல, திட்டத்துக்கான மானிய உதவி முழுமையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை உறுதி செய்யும் பொறுப்பும் எங்களுக்கு உள்ளது என்றார்.

சில விஷயங்கள் அரசியல் காரணங்களுக்காக ஊதி பெரிதாக்கப்படுவதால் சில சமயங்களில் நேர்மையானவர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கோட்பாகியின் கேள்விக்கு பாண்ட்யா பதிலளிக்கையில், முதலில் மானிய நிதி முறையற்ற வழியில் பயன்படுத்தப்படுவதை நாம் பொறுத்துக் கொள்ளக்கூடாது. நிதியுதவி எதற்காக கொடுக்கப்பட்டதோ அதற்கு செலவழிக்கப்படாமல் வேறு நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்த விவகாரத்தில் இப்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளாலும் 5 சதவீதம் முறைகேடு நடந்தாலும் அதை பொறுத்துக் கொள்ள முடியாது என்றார்.

முறைகேடுகள் நடப்பது பற்றி தகவல் சொல்பவர் மற்றும் சில தனிநபர்கள் பாதிக்கப்படுவது குறித்து பொதுவான கருத்தை ஏற்க முடியாது. ஆனால், மாவட்டம் அல்லது மண்டலங்கள் தவறான தகவல்களால் பாதிக்கப்படுவதாகத் தெரியவந்தால் அந்த நபருக்கு அநீதி நடக்காமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

வாஹன்வதி தெரிவிக்கையில், முறைகேடுகள் குறித்து யாரேனும் புகார் தெரிவித்தால், அதை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அது முதலில் மேற்பாரவை பணியாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அவர்கள் அதில் ஏதேனும் முறைகேடுகள் நடந்திருக்கின்றனவா என்று தணிக்கை செய்யப்படும். ஒருவேளை அதில் உண்மை இருப்பதாகத் தெரிய வந்தால், அதுபற்றி விசாரிக்க ஒருவரை நியமிப்போம் என்றும் வாஹன்வதி குறிப்பிட்டார்.

இந்திய சங்கங்களில் TRF-க்கு தனிநபர் பங்களிப்புத் தொகையை அதிகரிப்பது குறித்த கேள்விக்கு பாண்ட்யா பதிலளிக்கையில், முதலில் மக்கள் பங்களிப்புடன் மானியத்தை தொடர்புபடுத்தி பார்க்கக்கூடாது. நாம் அதிகமாக பங்களிப்புச் செய்தால்தான் நமக்கு அதிக மானியம் கிடைக்கும் என்று மக்களிடம் சொல்லக்கூடாது. இந்த ஆண்டு சேகர் மேத்தா RI தலைவராக இருப்பதால், நாம் அதிகப் பங்களிப்புச் செய்ய வேண்டும். நிதியுதவி அதிகம் கிடைப்பதற்காக அல்ல. நிதிப்பங்களிப்புச் செய்வது நமது பொறுப்பும் கடமையும் ஆகும் என்றார்.

மேலும் வருடாந்திர நிதி (Annual Fund) அளிப்பது முக்கியமானது. ஏனெனில் அந்த நிதி வறண்டு போனால், உலகில் நமது பகுதியில் பணிகளைத் தொடர முடியாது என நினைக்கிறேன்

இந்த ஆண்டு இந்திய சங்கங்கள், சர்வதேச மானிய உதவியில் 10 சதவீத திட்டங்களை இந்தியாவுக்கு வெளியே நிறைவேற்றும் என்று மேத்தா மீண்டும் தெரிவித்தார். பல ஆப்பிரிக்க நாடுகளுக்கு உதவி செய்வதாக நாங்கள் வாக்களித்திருக்கிறோம். தங்களுக்கு என்னவேண்டும் என்பதை அவர்கள்தான் தெரிவிக்க வேண்டும் என்றார். ■

# திட்டங்களைப்பற்றிய அறிமுகங்கள்

ரோட்டரி செய்திக் குழு

## சண்டிகரில் LN-4 முகாம்




*முகாமில் ஒரு சிறுவனுக்கு LN-4 செயற்கை கை பொருத்தப்படுகிறது.*

*RC சண்டிகர் சென்ட்ரல், RID 3070, தன்னுடைய ஏக் ஹாத் ஆஷா கா திட்டத்தின்கீழ் 1,340 பேருக்கு LN-4 செயற்கைக் கைகளைப் பொருத்தியது.*

## திருப்பூரில் கோவிட் ICU



*ரோட்டரி திருப்பூர் வெஸ்ட் கோவிட் ICUவை பார்வையிடும் DG K சண்முகசுந்தரம் மற்றும் சங்கத்தலைவர் நாகராஜ்.*

*RC திருப்பூர் வெஸ்ட், RID 3203, திருப்பூர் பல்லடம் அரசு மருத்துவமனையில் ரூ.32.71 லட்சம் செலவில் ஒரு கோவிட் ICUஐ அமைத்தது. இந்தப் பன்னாட்டு நல்கைத் திட்டத்தை DG K சண்முகசுந்தரம் தொடங்கிவைத்தார், DGN டாக்டர் S சுந்தரராஜன், PDG A கார்த்திகேயன், சங்கத் தலைவர் L நாகராஜ் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.*

## பாலிக்ளினிக்கில் புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் பராமரிக்கும் கருவி



*PDG E K சகாதேவன், DG K சுந்தரலிங்கம், சங்கத்தலைவர் P L யேகப்பன், A G Dr ரோஜஷ், திட்டத்தலைவர் வஸந்த் புஸல்கர் மற்றும் சங்க செயலாளர் A உடையப்பன் மருத்துவ சாதனங்கள் மருத்துவமனையிற்கு அர்பணிக்கின்றனர்.*

*RC சேலம் காலக்ஸி, RID 2982, சேலம் பாலி க்ளினிக்குக்கு ரூ.11.5 லட்சம் மதிப்புள்ளர்கள், செயற்கை மூச்சுவிடல் கருவிகளில் வைக்கப்பட்டுள்ள குறைப் பிரசவக் குழந்தை களுக்கு வெப்ப நிலைத்தன்மையை வழங்குகிற மருத்துவக் கருவி ஒன்றை வழங்கியது.*

## ஆடை நன்கொடைச் சேவை



*சங்கத்தினர் பழங்குடியினருக்கு ஆடைகள் வழங்குகின்றனர்.*

*RC விசாகப்பட்டினம், RID 3020, உறுப்பினர்கள் பொது மக்களுடைய உதவியுடன் ஆடைகள், குளிர்கால உடைகள் மற்றும் படுக்கை விரிப்புகளைத் திரட்டினார்கள், இந்த நகருக்கு அருகில் உள்ள பழங்குடியினப் பகுதியாகிய படேரு-வில் உள்ள 500 மக்களுக்கு அவற்றை வழங்கினார்கள்.*

Rotary PEOPLE OF ACTION

# அமராவதி சங்கங்களின் அற்புத செயல்பாடுகள்

V முத்துகுமரன்

‘கடவுள் செய்யும் வேலையை ரோட்டரி செய்து வருகிறது. மக்களிடம் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி ரோட்டேரியன்களிடம் உள்ளது. இது ஒரு வரப்பிரசாதமாகும். எனவே நாம் ஒன்றிணைந்து பலரின் வாழ்க்கை சக்கரத்தில் மாற்றத்தை உருவாக்கு வோம்’ என்றார் ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா. RID 3030க்கு உட்பட்ட சங்கங்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை இலக்கை தாண்டியதற்கும், TRF நன்கொடையாளர்களுக்கும் அமராவதியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

அமராவதியில் உள்ள நான்கு சங்கங்களும் நிறைவேற்றி வரும் சுகாதாரத் திட்டங்கள் (இவற்றில் பல நிரந்தரமானவை) மற்றும் சமூக மேம்பாட்டுக்கான முன்முயற்சிகளைக் கண்டு வியந்த மேத்தா, சங்கத்தின் தலைவர்களும், செயலாளர்களும் ரோட்டரி ஆண்டின் எஞ்சிய காலத்தில் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுமாறு வலியுறுத்தினார். இது வாழ்நாளில் கிடைத்துள்ள அரிய வாய்ப்பு என்றும் அவர் குறிப்பிட்டார். DG ரமேஷ் மெஹர் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். அவரைத் தொடர்ந்து DGE ஆனந்த் ஜுன்ஜுன்வாலா மற்றும் DGN ஆஷா வேணுகோபால் ஆகியோரும் சிறப்பாகச் செயல்பட காத்திருக்கின்றனர். ஏராளமான மகிழ்ச்சியும், நம்பிக்கையும் உங்களுக்கு காத்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

7 லட்சம் மக்கள்தொகை கொண்ட சிறிய நகரமான அமராவதியில் PDG




*இரத்த தான வண்டி துவக்க விழா வில் RI தலைவர் சேகர் மேத்தா உடன் (இடதிலிருந்து) சாரதா மற்றும் DG ரமேஷ் மெஹர், RC அமராவதி மிட்டவுன் முன்னாள் தலைவர் வினாயக்கடு, சங்கத்தலைவர் ஆனந்த் தாஷ்புடே, PDG கிஷோர் கேடியா மற்றும் PDG மகேஷ் மோகல்கர்.*

கிஷோர் கெடியா மற்றும் மெஹர் தலைமையில் ரோட்டரி பல சிறப்பான திட்டங்களைக் கொண்டுள்ளது என்றார் மேத்தா.

‘மேலும் வளருங்கள், மேலும் சேவை செய்யுங்கள்’ மற்றும் ‘ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டுவர வேண்டும்’ ஆகிய இரண்டும்தான் அவரது தாரக மந்திரம். இதன் மூலம் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையை 1.3 மில்லியனாக அதிகரிக்க முடியும், இதற்கு நமது மண்டலங்கள் கணிசமாக பங்களிக்க முடியும் என்பது அவரது கருத்து.

மாவட்ட ஆளுநர் மெஹர் பேசுகையில், 2022ம் ஆண்டு ஜூன் 30ம் தேதிக்குள் தமது மாவட்டத்தில் 1,000 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டு இலக்கு எட்டப்பட்டு விடும் என்று மேத்தாவுக்கு உறுதியளித்தார். RID 3030க்கு உட்பட்ட 96 சங்கங் களும், 9 பெண்கள் உள்பட தலா 30 உறுப்பினர்களைச் சேர்த்து தங்கப் பட்டயம் பெறுவது என்ற உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் ‘வீராங்கனா’ திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 1,00,000 பெண்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சி அளிக்கப் படும் என்றும் அவர் கூறினார்.

### TRF நன்கொடையாளர்கள்

RID 3030 மாவட்டத்தில் AKS




## RID 3030ன் மனநல முயற்சி

*மகாராஷ்டிரத்தின் விதர்பா பகுதியில் இளைஞர்கள் சக்தி முன்னிலையில் உள்ளது. 500 உறுப்பினர்கள் மற்றும் 11 வாரிய இயக்குநர்கள் கொண்ட மனநல வளர்ச்சிக்கான முன்முயற்சி எடுக்கும் ரோட்டரியின் மாவட்ட செயல்குழு (DAGMHI) மனச்சோர்வு மற்றும் மன அழுத்தத் தால் தவிக்கும் மாணவர்கள், ரோட்ராக்டர்கள், ரோட்டேரியன் அல்லாத இளைஞர்களுக்கு மெய்நிகர் மற்றும் ஆன்லைன் மூலம் ஆலோசனை வழங்கி வருகின்றனர். இந்தியா முழுவதும் ஆன்லைன் அமர்வுகள் மற்றும் பட்டறைகள் நடத்தி வருகிறோம். 2015ம் ஆண்டிலேயே இந்த குழு தொடங்கப் பட்டாலும் 2021-ஜூலையிலிருந்து தான் இவை தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. நாசிக் கிரேப் சிட்டி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ஆபா பிம்பிரிகர் முன்முயற்சி, நாக்பூர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் ரீடா அகர்வால் ஆலோசனையின் பேரில் செயல்பட்டு வருகிறது என்றார் DAGMHI நிர்வாக இயக்குநர் பங்கஜ் அகர்வால்.*

*குழந்தைகளின் ஆரோக்கியத் திலும் நாங்கள் முன்னுரிமை அளித்து வருகிறோம். அவர்களுக்கு தேவையான நேரத்தில் முறையான ஆலோசனைகளை வழங்கி வருகிறோம். மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினர் மற்றும் தேர்வுக்கு தயாராகி வரும் மாணவர்களுக்கு மனநல ஆலோச னைகளைக் கூறி வருகிறோம். இதுவரை 50க்கும் மேற்பட்ட மெய்நிகர் நிகழச்சிகள், ஆன்லைன் ஆலோசனை நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன என்றார். ஆன்லைன் மூலம் ஆலோசனை அளிக்க உளவியல் நிபுணர்கள் அல்லது மனநல மருத்துவரை அழைக்கிறோம். பங்கேற்பாளர்களுக்கு அவர்கள் வழிகாட்டுவார்கள். இதுவரை ரோட்டரி அதிரடி செயல்குழு மூலம் நாடு முழுவதிலும் 2,000த்துக்கும் மேற்பட்டவர்கள் ஆலோசனை பெற்று பயனடைந்துள்ளனர். வரும் காலங்களில் ஆன்லைன் மற்றும் நேரடி ஆலோசனைகளின் மூலம் மேலும் விரிவுபடுத்த திட்ட மிட்டுள்ளோம் என்றார் அச்சால்பூர் ரோட்டரி சங்கத்தின் IPP-யும் 15 ஆண்டு களுக்கு மேலாக ரோட்டேரியனாக இருப்பவருமான அகர்வால்.*

ஜோடியாக முதன்முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள PDG ராஜீவ் சர்மா மற்றும் ராஷ்மி தம்பதியினர், எண்டோவ்மென்ட் நிதி பங்களிப்புக்காக (டாலர் 25,000), DGN ஆஷா வேணுகோபால், PDG கிஷபாவ் கோட்போலே (எண்டோவ்மென்ட்), AG ராஜேந்திர பவார் மற்றும் ஹேமலதா (பெரு நன்கொடையாளர்கள்) மற்றும் முன்னாள் தலைவர் உதய்ராஜ் பட்வர்த்தன் மற்றும் ரேகா (கால நன்கொடை: 30,000 டாலர்) ஆகிய ஐந்து பேருக்கும் தங்க பேட்ஜுகள் அணிவிக்கப்பட்டன.

PHS உறுப்பினர்கள் எண்ணிக்கையை 19-லிருந்து 39 ஆக அதிகரித்ததற்காக பால் ஹாரிஸ் சொசைட்டி தலைவர் அனிருத் பால்டிவால் பாராட்டப்பட்டார். நாசிக் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன் ரவி மஹாதேவ்கர்




*நடமாடும் பல் மருத்துவமனை முன் RI தலைவர் மேத்தாவுடன் (இடதிலிருந்து) கௌரவ் வான்கடே, ஆஷிஷ் ஹர்குட், RC அமராவதி அம்பாநகரி தலைவர் சங்கட் மோஹ்டா, Dr சமீர் கேடியா மற்றும் சுரேஷ் மேத்தி.*

இரண்டு CSR திட்டங்களுக்காக கௌரவிக்கப்பட்டார். ஒன்று சிங்கர் நிறுவனத்துடன் இணைந்து பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கும் திட்டம். மற்றொன்று நெஸ்லே நிறுவனத்துடனான பால் தடை திட்டம். 100 சதவீத PHF சங்கமான வார்தா காந்தி சிட்டி ரோட்டரி சங்கம், EREY சங்கமான நாசிக் சிட்டி ரோட்டரி சங்கம் இரண்டும் கௌரவிக்கப்பட்டன. DRFC மற்றும் PDG மகேஷ் மொகால்கர், TRF-க்கு 5,00,000 டாலர் பங்களிப்பு என்ற இலக்கை மாவட்டம் பூர்த்தி செய்துவிடும். இதில் பாதி வருடாந்திர நிதிக்கு சென்றுவிடும் என்று தெரிவித்தார்.



*RC அமராவதி மிட்டவுன் நிறுவிய எரிவாயு தகன மேடையை பார்வையிடும் RI தலைவர் மேத்தாவுடன் PDG கிஷோர் கேடியா மற்றும் சங்கத்தினர்.*

## உறுப்பினர் சேர்க்கை

கூடுதலாக 30 புதிய உறுப்பினர்கள் சேர்க்கை, நான்கு புதிய சங்கங்கள் உருவாக்கம், மேலும் 6 சங்கங்களை நிறுவுவதற்கான நடவடிக்கை ஆகியவற்றுக்காக நாசிக் ரோட்டரி சங்கம், நாக்பூர் இஷான்யா மற்றும் நாக்பூர் சவுத் ஆகிய மூன்று ரோட்டரி சங்கங்களுக்கு தங்க பட்டயம் வழங்கப் பட்டது. இந்த மாவட்டத்தில் 500 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். DMC ராஜேஷ் வியாவாஹரே பேசுகையில், உறுப்பினர்கள் எண்ணிக்கையும் 4,720-லிருந்து 5,215 ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவித்தார். ரோட்டரி தலைவரின் பிறந்ததினத்தை குறிப்பிடும் வகையில், மாவட்டம் முழுவதும் 175 இரத்த தான முகாம்கள் நடைபெற்றன. மொத்தம் 3030 யூனிட் இரத்தம் சேகரிக்கப்பட்டது என்றார் DG மெஹர்.

## பெரிய திட்டங்கள்

நடமாடும் வேன் மூலம் இரத்த தானம் பெறும் (ரூ.32 லட்சத்திலான சர்வதேச நிதி) அமராவதி மிட் டவுன் ரோட்டரி சங்கத்தின் திட்டத்தை மேத்தா தொடங்கி வைத்தார். Dr பஞ்சாப்ராவ் தேஷ்முக் நினைவு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை யும் மேத்தா பார்வையிட்டார். இந்த மருத்துவமனையுடன் இணைந்துதான் அமராவதியில் உள்ள சங்கங்கள் சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

2016ம் ஆண்டு, மார்ச் மாதம் தாய்ப்பால் வங்கியும் (GG: ரூ.12 லட்சம்) மற்றும் பிறந்த குழந்தைகளைப் பராமரிக்க குழந்தைகள் நலப்பிரிவும் (GG: ரூ.10 லட்சம்) ஏற்படுத்தப்பட்டது. தாய்ப்பால் வங்கி மூலம் 7,500 சிசுக் களும் NICU வார்டு மூலம் 5,000 குழந்தைகளும் பலன் பெற்றுள்ளன என்று அமராவதி மிட்டவுன் ரோட்டரி சங்க திட்ட பொறுப்பாளர் டாக்டர் ராஜேஷ் பூப் தெரிவித்தார்.

நவம்பர் மாதத்தில் தொடங்கப் பட்டாலும் 20 படுக்கைகள் கொண்ட நோய்த் தடுப்பு சிகிச்சை மையம் (ரூ.30 லட்சம்: உறுப்பினர்கள் நன்கொடை) டிசம்பர் இறுதியில்தான் செயல்படத் தொடங்கியது என்றார் அவர். தீராத நோயால் அவதிப்படுபவர்கள், புற்றுநோயாளிகளுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படும் என்றார் மிட்டவுன் ரோட்டரியின் முன்னாள் தலைவர் ராஜு முந்தஹாதா. ஒவ்வொரு மாதமும் சராசரியாக 2,000 பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் பரிசோதனை நடத்தப் படுகிறது. இதற்காக சங்க நிதி ரூ.1




*AKS உறுப்பினர்களான PDG ராஜீவ் ஷர்மா மற்றும் அவர் மனைவி ராஷ்மி ஆகியோரை RI தலைவர் மேத்தா, DG மெஹர் மற்றும் PDG கேடியா முன்னிலையில் கௌரவிக்கிறார்.*

கோடியில் மம்மோகிராபி கருவிகள் கொண்ட நடமாடும் வாகனம் வாங்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் சராசரியாக ஒரு சதவீதம் அதாவது 20 பேருக்கு இத்தகைய நோய் இருப்பது கண்டறியப்படுகிறது. அமராவதி அம்பாநகரி ரோட்டரி சங்கம் மூலம் உயர் தொழில்நுட்ப கண் பரிசோதனை மற்றும் பல் மருத்துவ பரிசோதனை வேன்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

ரோட்டரி டயாலிசிஸ் மையத்தில் செய்யப்படும் ஒவ்வொரு டயாலிஸிஸுக்கும் மார்ச் 2020 முதல் மூன்று இயந்திரங்களுக்கு ரூ.30 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. சிறுநீரக சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெறும் நோயாளிக்கு சங்கம் சார்பில் ரூ.700 வழங்கப்படுகிறது. நோயாளி ரூ.400 செலுத்தினால் போதுமானது என்றார் முந்தாஹாதா. ரோட்டரி ஹாலில் (ரூ.10 லட்சத்தில் நிறுவப்பட்டது) மருத்துவப் படுக்கைகள், ஆக்ஸி செறிவூட்டிகள், சக்கர நாற்காலிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் சேமித்து வைக்கப்பட்டு 15 ஆண்டுகளாக தேவையான நோயாளிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றார் அவர்.

### எரிவாயு தகனமேடை

ஹிந்து ஸ்மாஷன் ஸன்ஸ்தான் என்ற அமைப்புடன் இணைந்து 2014 ஆம் ஆண்டு ரூ.1.5 கோடியில் எரிவாயுவில் இயங்கும் தகனமேடை அமைக்கப்பட்டுள்ளது. கோவிட் தொற்று உச்சத்தில் இருந்தபோது இறந்து போனவர்களின் உடல்கள் எரிப்பதற்காக இங்கு கொண்டு வரப்பட்டன. அப்போது 24 மணி நேரமும் இந்த தகனமேடை செயல் பட்டது. உடல் தகனத்திற்காக 7 முதல் 8 மணிநேரம் வரை காத்திருக்க நேரிட்டது. அது ஒரு கோரமான காட்சியாக இருந்தது என்றார் AG டாக்டர் P R சோம்வாஞ்சி. பதேர்னா ரயில்நிலையத்தில் ரூ.8 லட்சம் செலவில் நிறுவப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் பயணிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள்

தொலைதூர கிராமங்களில் சுகாதாரச் சேவை வழங்குவதற்காக பழங்குடியினர் வசிக்கும் குக்கிராமங்கள் மற்றும் கிராமப்பகுதிகளில் வசிக்கு 1,000 பேருக்கு மருத்துவச் சுகாதார சிகிச்சை அளிக்க நான்கு பெரிய முகாம்கள் நடத்தப்பட உள்ளன என்று அமராவதி மிட்டவுன் ரோட்டரி சங்கத் தலைவர் ஆனந்த் தாஷ்புடே தெரிவித்தார். 'இஸ்கான்', மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் RSS அமைப்புடன் இணைந்து அமராவதி மாவட்டம், தரணி தாலுகா, மேல்காட் பகுதியில் உள்ள 300 கிராமங்களைச் சேர்ந்த 2,000 கர்ப்பிணிகளுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவுப் பொருள்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

118 உறுப்பினர்கள் கொண்ட மிட்டவுன் ரோட்டரி சங்கம் மூலம் தரணி தாலுகாவை சுற்றியுள்ள 100 மாணவர்களுக்கு ஸ்வெட்டர்கள், நோட்டுப்புத்தகம் மற்றும் எழுது பொருள்கள் வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.■

---

## கலிபோர்னியாவில் தலைவர்களின் சந்திப்பு

ரோட்டரி செய்திக் குழு



*RI தலைவர் சேகர் மேத்தா, லயன்ஸ் இன்டர்நேஷனல் தலைவர் டக்லஸ் அலக்சான்டர், ஆப்டிமிஸ்ட் இன்டர்நேஷனல் தலைவர் பாட்ஸி கார்னர் மற்றும் கிவானிஸ் இன்டர்நேஷனல் தலைவர் பீட்டர் மன்குசோ.*

ரோட்டரி இன்டர்நேஷனல், லயன்ஸ், ஆப்டிமிஸ்ட்ஸ் மற்றும் கிவானிஸ் ஆகிய நான்கு சேவை சங்கங்களின் தலைவர்கள் கலிபோர்னியாவின் பசடினா நகரில் ரோட்டரி சங்கம் மற்றும் ரோஸ் டே பரேட் குழு ஏற்பாடு செய்த கூட்டத்தில் ஒன்று கூடினர்.

முன்னதாக ஜனவரி 1ம் தேதி பசடினா நகரில் நடைபெற்ற 133வது ரோஸ் டே பரேட் அணிவகுப்பில் RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி ஆகியோர் ரோட்டரியின் மிதவையில் முன் நின்று சென்றனர். தொண்டு நிறுவனமான பசடினா டோர்னமெண்ட் ஆப் ரோசஸ் சங்கத்தால் ஒருங்கிணைக்கப்படும் இவ்வருடாந்திர அணிவகுப்பு பொதுவாக புத்தாண்டு தினத்தில் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான பார்வையாளர்களால் காணப்படுகிறது.■

# சதுப்புநிலத் தோட்டங்கள் மற்றும் கழிவு மேலாண்மையில் கவனம்

ஜெய்ஸ்ரீ

இந்தியாவில் 3 கோடி சதுப்புநில தோட்டங்களை நிறுவ நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்று RI தலைவர் சேகர் மேத்தா தெரிவித்தார். ESRAG (சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான ரோட்டரி செயல்குழு) தெற்காசிய பகுதிக்கான தலைவர் மீனாட்சி வெங்கடராமன் தெரிவித்த யோசனைக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார். கடந்த 50 ஆண்டுகளில் உலகின் 50 சதவிகித சதுப்பு நிலக்காடுகள் மறைந்து விட்டதாகவும் மீனாட்சி வெங்கட்ராமன் அதிர்ச்சி தரும் செய்தியையும் கூறினார். வளிமண்டலத்தில் கரியமிலவாயுவை உறிஞ்சுவதில் சதுப்புநிலங்கள் திறன்பெற்றவை. அவை நீலநிற கார்பன் சுற்றுச்சூழலில் முக்கிய உயிரினங்களின் வசிப்பிடமாக உள்ளன. அதுமட்டுமல்ல, கடலோர அரிமானத்தை தடுக்க உதவுகின்றன.

மீனாட்சி மற்றும் சுந்தரம் பருவநிலைக் கழகத்தின் நிறுவனர் மிருதுளா ரமேஷ் இருவரும் சுற்றுச் சூழல் நிலைத்தன்மை குறித்து மாநாட்டில் ஒரு அமர்வை வழங்கினர். RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி அவற்றை தொகுத்து வழங்கினார். வறண்ட ராஜஸ்தானில் நீர்த் திட்டங்கள், நீர் மட்டத்தை உயர்த்துதல், தடுப்பு அணைகள் கட்டுதல், கிணறுகள் மற்றும் கால்வாய்களைத் தூர்வாருதல் ஆகிய திட்டங்களில் PRID சுஷில் குப்தா மிகுந்த ஆர்வம் கொண்டி ருந்ததை அவர் நினைவுகூர்ந்தார்.

கடந்த நவம்பரில் கிளாஸ்கோவில் நடைபெற்ற COP 26 பருவநிலை மாற்ற மாநாட்டில் ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா ஆற்றிய உரையை மீனாட்சி நினைவுகூர்ந்தார். ரோட்டரியின் சுற்றுச்சூழல் திட்டத்தின் ஒருபகுதியாக சதுப்புநிலக்காடுகளை மீட்டெடுப்பதும் ஒரு முக்கிய அம்சமாக இருக்கும் என்று அவர் சரியாக அறிவித்திருந்தார். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கம் காரணமாக கடல் மட்டங்கள் உயரும், கடல் கொந்தளிப்பு, புயல் மற்றும் சூறாவளி ஏற்படும் அபாயம் உள்ளது. வெப்பமண்டல கடலோர சமூகங்களில் இவற்றின் பாதுகாவலன் சதுப்பு நிலங்கள்தான் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.




*இடமிருந்து:* RID *மகேஷ் கோட்பாகி,* ESRAG *தலைவர் மீனாட்சி வெங்கட்ராமன் மற்றும் சுந்தரம் பருவநிலை கழகத்தின் நிறுவனர் மிருதுளா ரமேஷ்.*

இந்தியாவில் உள்ள காடுகளின் பரப்பளவில் 3 சதவீதம் மட்டுமே சதுப்பு நிலக்காடுகள். சுந்தர்பான்ஸ் (மேற்கு வங்கம்), பிடர்கனிகா (ஒடிஸா), கட்ச் வளைகுடா (குஜராத்) ஆகிய இடங்களில்தான் அவை உள்ளன. நாம் போர்க்கால அடிப்படையில் சதுப்புநிலக் காடுகளை மீட்டெடுக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு பிராந்தியத்திலும் குறைந்தபட்சம் 1 கோடி சதுப்பு நில மரங்களை நட வேண்டும். நாம் ஏற்கெனவே மியாவாகி காடுகளை உருவாக்கி வருகிறோம். ஆனால், அவற்றிலிருந்து கார்பன் வெளிப்பட 40 ஆண்டுகள் ஆகும். சதுப்பு நிலக்காடுகளை மீட்டெடுத்தால் அது 3 ஆண்டுகளில் நல்ல பலனைத் தரும்.

சதுப்பு நிலச் செடிகளை ஆறு வருடங்கள் கவனமாக பராமரிக்க வேண்டும். அதன் பிறகு அவற்றை முகத்துவாரங்களில் மீண்டும் நடலாம். எனவே பல வருட அர்ப்பணிப்புக்கு நாம் தயாராக இருக்க வேண்டும். ஆனால், முதல் ஆண்டு உயிர் பிழைக்கும் விகிதம் 40 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது என்று அவர் எச்சரித்தார்.

சங்கங்களில் திட்டங்களின் தொடர்ச்சியை கட்டமைப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், மாவட்டங்களில் TRF தலைமைக்கு மூன்றாண்டுகள் அவகாசம் இருப்பது போல சுற்றுச்சூழல் தலைமைக்கும் மூன்றாண்டு கால அவசாகம் வேண்டும் என்றார். தில்லியில் அதிக அளவில் மின்சார வாகனங்கள் (EM Vehicles) ரீசார்ஜ் பேட்டரிகள் மூலம் இயங்கி வருகின்றன. தில்லியில் முக்கிய இடங்களில் ரோட்டரி சங்கங்கள் சூரிய சக்தி மின்சார நிலையங்களை நிறுவினால், அது ரோட்டரி மீதான நன்மதிப்பு உயர்த்தும். ரோட்டரியினர் பிரசாரம் செய்வதை முதலில்

அவர்களே பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். நீங்கள் பக்கத்து கிராமத்துக்கு சூரியசக்தி மின்சாரம் வழங்க விரும்பினால், முதலில் உங்கள் வீட்டில் அதைச் செயல்படுத்துங்கள் என்றார்.

### கழிவு மேலாண்மை

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவின் தாக்கத்தை நம்மால் மாற்றியமைக்க முடியாமல் போகலாம். ஆனால், குறைந்தபட்சம் ஓரளவாவது அதைத் தடுத்து நிறுத்த நம்மை நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். பருவநிலை மாற்றம் மற்றும் கழிவுகளுக்கு இடையிலான நெருக்கடியான தொடர்பை புரிந்து கொண்டு செயல்பட்டால் இதை அடைய முடியும் என்றார் மிருதுளா. சமூகப் பிரச்னைகளுக்கு அரசு தான் தீர்வுகாண வேண்டும் என்று காத்திருக்காமல், ஒவ்வொருவரும் தங்களால் முடிந்ததைச் செய்ய முன் வரவேண்டும் என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

மிக மோசமான தண்ணீர் நெருக் கடியிலிருந்து தமது வீடு எப்படி மீண்டது என்பதை அவர் விவரித்தார். 2017ம் ஆண்டு மதுரையில் 140 ஆண்டுகளில் இல்லாத அளவு வறட்சி ஏற்பட்டது. தண்ணீரை வாங்காத ஒரே வீடு எங்களுடையதுதான். ஆனால், இதற்கு முன்னதாக 2013 எங்கள் வீட்டு ஆழ்துளை கிணறு தூர்ந்துபோனபோது நாங்கள் சிறிது பணம் செலவழித்து தனியாரிடமிருந்து தண்ணீரை விலைக்கு வாங்கவேண்டியிருந்தது. அப்போதுதான் தனிப்பட்ட முறையில் செயல்படவேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன். புதிய வழியைக் கண்டுபிடித்து அதை சுதந்திரமாகச் செயல்படுத்தும்போது மறுசீரமைப்பு வெற்றியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

பூஜ்ய கழிவுக் கொள்கை ஆதரவாளரான அவர், தனது வீடு மற்றும் தொழிற்சாலையில் கழிவுகள் உற்பத்தியாவதை குறைத்த விதத்தை விவரித்தார். எங்களிடம் கழிவு-குப்பைகளுக்கான சேவை இல்லை என்று செ ால்லிப் பாருங்கள், பின்னர் மாற்று வழிகளையும், வாழ்க்கை முறையிலும் மாற்றத்தை காண முடியும். சமையலறை மற்றும் தோட்டக் கழிவுகளை வீட்டிலேயே குழிகளில் போட்டு மூடினால், அதை உரமாகவோ அல்லது எரிசக்தியாகவோ பயன்படுத்திக் கொள்ள முடியும். உங்கள் சமூகத்தினருக்கு கழிவுகளை எப்படிப் பிரிப்பது என்று சொல்லிக் கொடுங்கள். ஈரமான கழிவுகளை முறையாக நிர்வகித்தால் மாதம் ஒன்றுக்கு ஒரு சிலிண்டர் பயோ-கேஸ் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார் மிருதுளா.■

# மனநலன் மேல் அக்கறை கொள்வோம்

ரோட்டரி செய்திக் குழு



கடந்த 18 வருடங்களாக, RC சங்கர்புரா, RID 3182, கர்நாடகாவின் உடுப்பி மாவட்டத்தில் உள்ள சங்கரபுரா கிராமத்தில் தொடர்ந்து மனநல மருத்துவ முகாமை நடத்தி வருகின்றது. 2004-ல், நாங்கள் இந்த முகாமை தொடங்கியபோது 20 நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கினோம். ஆனால் தற்போது ஒவ்வொரு மாதமும் சுமார் 600 நோயாளிகள் சிகிச்சை பெற சுற்று வட்டாரங்களில் இருந்து வருகின்றனர் என மனநல மருத்துவ முகாமின் தலைவர் எட்வர்ட் மென்டாங்கா கூறினார். ஒவ்வொரு மாதமும் 30,000 ரூபாய் மதிக்கத்தக்க மருந்துப் பொருட்கள் வழங்கபடுகிறது. மேலும் உடுப்பியின் Dr N பன்தாரி மற்றும் மங்களூருவின் Dr ஸ்ரீனிவாசா பாட் ஆகிய இரு மனநல மருத்துவர்களும் அவர்களுடன் ஆலோசகர் குழுவும், மூன்று மருந்தாளர்களும், ஒரு செவிலியரும் சேர்ந்து முகாமில் சிகிச்சை அளித்துவருகின்றனர்

பண நெருக்கடி ஏதுமின்றி நடந்துக் கொண்டிருக்கும் திட்டம் இது. எங்களின் நலம் விரும்பிகள் மற்றும் பல ரோட்டரி சங்க உறுப்பினர்கள் கணிசமான தொகையை தங்களின் நிலைவைப்பு கணக்கில் செலுத்தி அதில் வரும் வட்டி தொகையை எங்களின் ரோட்டரி அறகட்டளை கணக்கில் செலுத்து கின்றனர். அந்த நிதியை கொண்டு இந்த முகாமை நடத்தி வருகிறோம். என மென்டான்கா கூறினார்.■

# மஹாப்ஸ் 21ல் ஊக்கமளிக்கும் நிகழ்ச்சிகள்

கிரண் ஜெஹரா மற்றும் ஜெய்ஸ்ரீ

அழகான நடன நிகழ்ச்சிகள், இசை கச்சேரிகள், ஆன்மிக குருக்கள் மற்றும் பிரபலங்களுடனான ஆற்றல் நிரம்பிய கூட்டங்கள், மஹாப்ஸ் 21 இன்ஸ்டிட்யூட்டை மறக்கமுடியாத நிகழ்வாக மாற்றியது. சென்னை கலாக்ஷேத்ராவின் ஆத்மா அறக்கட்டளையைச் சேர்ந்த மாணவ, மாணவியர் ரோட்டரி உறுப்பினர்களை நடனமாடி மகிழ்வித்தனர். பாரம்பரிய உடை அணிந்து அவர்கள் ஆடிய நடனத்தில் உண்மை, அஹிம்சை மற்றும் கல்வி போன்ற காலம் மாறாத கருத்துகளை செழுமையை சித்தரித்தனர்.

புகழ்பெற்ற இசைக்கலைஞரும் வீணை வாசிப்பாளருமான ராஜேஷ் வைத்யா மற்றும் அவரது இசைக் குழுவும் பார்வையாளர்களை தங்கள் வசப்படுத்தினர். அவரது மந்திர விரல்கள் ரெட்ரோ, பாலிவுட் மற்றும் தமிழ் மெல்லிசை பாடல்களை உருவாக்கியது. A R ரஹ்மானின் காவியம் ரோஜாவில் இருந்து மெல்லிசை பாடல்களோ அல்லது பியா து அப் து ஆஜா, மேரே சப்னோ கி ராணி போன்ற மறக்கமுடியாத பாலிவுட் பாடல்களோ அல்லது கதம் மற்றும் தபேலா இசைக் கலைஞர்களுக்கு இடையேயான ஜுகல்பந்தியோ அனைத்தும் பிரதிநிதிகளின் கால்களைத் ஆட்டம் போட வைத்தது.

ஒரு கூட்டத்தில் உரையாற்றிய ஆன்மீக ஆசிரியரும் ஆத்மயோக அறக்கட்டளையின் நிறுவனருமான ஆசான்ஜி, “மாற்ற முடியாததை மாற்றும் திறன் உங்களிடம் உள்ளது, இதுவே கடவுள் உங்களுக்கு அருளியுள்ள சக்தி” என்று கூறினார். புத்தியைக் கூர்மைப்படுத்த, தினமும் தியானம் செய்யுமாறு பரிந்துரைத்தார்.

வாழ்க்கை முறை பயிற்சியாளரும், ஊக்கமளிக்கும் பேச்சாளருமான கவுர் கோபால் தாஸ், தன்னலமற்ற சேவைக்காக ரோட்டரி உறுப்பினர்களை பாராட்டினார். நம் காலத்தின் முரண்பாடு என்னவென்றால், அதிக வசதி உள்ளவர்கள் பெரும்பாலும் திருப்தி அடையாமல் இருக்கின்றார். நல்ல மதிப்புகள், குடும்பம் மற்றும் நண்பர்கள் ஆகியவையே வெற்றியின் திறவுகோல் என்பதை மறந்துவிடா




*RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் இயக்குனர் A S வெங்கடேஷ் போலியோ சுடருடன் End Polio சாவடியில் இன்ஸ்டிட்யூட் தலைவர் M முருகானந்தம் மற்றும் PDG E K சகாதேவன் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

தீர்கள் என்று அவர் ரோட்டரி உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

தலைமைத்துவ பயிற்சியாளர் பிரகாஷ் ஐயர், சுறுசுறுப்பாக இருப்பது, நெருக்கடியின் போது செயல்படுவது மற்றும் தங்கள் அணிக்கு தகுந்த நன்மதிப்பு அளிப்பது போன்ற தலைமைத்துவப் பாடங்களை விளக்கினார். "நீங்கள் எல்லா சிறிய விஷயங்களையும் சரியாகச் செய்தால் பெரிய விஷயங்கள் தானாகவே நடக்கும்,'' என்று அவர் கூறினார். பாக்கெட்டில் இருந்து ஒரு தேநீர் பையை வெளியே எடுத்து தலைவர்கள் ஒரு தேநீர் பை போன்றவர்கள், அவர்களை வெந்நீரில் (அழுத்தம்) வைக்க, அவர்கள் எவ்வளவு திடமானவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். தலைவர்கள் சவால்களுக்கு என்றும் பயப்பட மாட்டார்கள். என கூறினார்.



*வீணை வித்வான் ராஜேஷ் வைத்யா*

End Polio Now தலைவர் PDG E K சகாதேவன், இன்ஸ்டிட்யூட்டின் சிறப்பு End Polio சாவடியில் பார்வையாளர்களை போலியோ சுடர் கையில் ஏந்தி, போலியோ இல்லாத பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்காக பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.■

---

TRF உதவியுடன் நற்பணி

# பள்ளிகளுக்கு புது பொலிவு

ரோட்டரி செய்திக் குழு

மதுரையில் உள்ள மேலூர் வட்டத்தைச் சேர்ந்த இரண்டு அரசு பள்ளிகளில் ரூ.41 லட்சம் மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் வழியாகப் மறுசீரமைத்துள்ளது RC மதுரை இன்னொவேட்டர்ஸ், RID 3000.

வகுப்பறைகள், சுற்றுச் சுவர் புதுப்பிப்பு, புதிய கழிப்பறைத் தொகுதிகள் கட்டுதல், டிஜிட்டல் வசதிகளை அமைத்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து, இந்தப் பள்ளிகளில் புதிய சேர்க்கைகள் 70% மேம்பட்டுள்ளன. இந்தப் புதுப்பிப்பால் கூடுதல் மாணவர்கள் இங்கு சேர்ந்துள்ளார்கள், இது அருகிலுள்ள கிராமங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்'' என்றார் திட்டத்தின் தொடர்பு நபர் Rtn P குமரப்பன்.

தொடக்க விழாவில் பேசிய தமிழ் நாடு பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பையன்கள் நன்றாகப் படித்தால், அது சமூகத்துக்கு வரம், ஆனால், பெண்கள் நன்றாகப் படித்தால் ஒட்டுமொத்தச் சமுதாயத்துக்கும் வரம் என்றார்.

இந்தச் சங்கம் பள்ளி மறுசீரமைப்புத் திட்டத்துக்காக RC ஃப்ரெஷ்வாட்டர் பே, RID 9455, ஆஸ்திரேலியா என்ற பன்னாட்டுக் கூட்டாளருடன் பணியாற்றியது. நடராஜ் எண்ணெய் ஆலையின் CSR நிதி மற்றும் நன்கொடையாளர்கள் Rtnகள் Dr N செந்தில்நாதன், Dr G M பரத்குமார் ஆகியோரும் இதை ஆதரித்தார்கள். மாநில வணிக வரிகள் அமைச்சர் P மூர்த்தி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் Dr S அனீஷ் சேகர், DG Dr R ஜெயக்கண், DGE I ஜெரால்ட் மற்றும் DGN R ஆனந்த ஜோதி ஆகியோர் பள்ளிகளை மறுசீரமைத்த இந்தச் சங்கத்தைப் பாராட்டினார்கள்.■



*தமிழ்நாடு பள்ளிக்கல்வி அமைச்சர் மகேஷ் பொய்யாமொழியுடன் DG R ஜெயக்கன், DGE I ஜெரால்டு மற்றும் DGN ஆனந்த ஜோதி புதுப்பிக்கப்பட்ட பள்ளி ஒன்றில்.*

Rotary PEOPLE OF ACTION

# பள்ளி குழந்தைகளுக்கு ருத்ராபூர் ரோட்டரியின் பரிசு

கிரண் ஜெஹ்ரா

உத்தரகாண்ட் மாநிலம் சஞ்சய் நகரில் உள்ள அரசு ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கு RID 3110க்கு உட்பட்ட ருத்ராபூர் ரோட்டரி சங்கம் எழுதுபொருள்கள், புத்தகங்கள், நாற்காலி, மேஜைகள் மற்றும் தேவையான பொருள்களை வழங்கியபோது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் சமீபத்தில் பெய்த மழை, வெள்ளத்தால் வகுப்பறைகளிலும், நிர்வாக கட்டடத்திலும் வெள்ளநீர் புகுந்து எல்லாவற்றையும் அடித்துச் சென்றுவிட்டது. வெள்ளத்தின்போது பள்ளி வளாகமே ஐந்து அடி தண்ணீரில் மூழ்கியிருந்தது. இதனால் பதிவேடுகள் அறை, பர்னிச்சர்கள் மற்றும் புத்தகங்கள் வெகுவாக சேதமடைந்தன. இது எங்கள் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட போது, அவர்கள் மீண்டும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக தேவையான பொருள்களை வழங்கி மாணவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்த தீர்மானித்தோம் என்றார் சங்கத்தின் தலைவர் விகாஸ் சர்மா.

இரண்டு நாட்களுக்குப் பிறகு சர்மாவும் அவரது குழுவினரும் பள்ளியில் படிக்கும் 107 மாணவர்களின் வீடுகளிலும் வெள்ளநீர் புகுந்ததால் அவர்களின் புத்தகப் பை, சீருடைகள், மற்றும் பாடபுத்தகங்கள் சேதமடைந்ததை அறிந்தனர். ஏழை மாணவர்கள் சிலர் பள்ளிச் சீருடை தவிர வேறு உடைகள் அணிவதற்கு இல்லாமல் இருந்த அவல நிலையையும் உணர முடிந்தது. மேலும் சில மாணவர்கள் புத்தகங்கள் இல்லாததால் பள்ளிக்கு வருவதையே நிறுத்திவிட்டிருந்தனர்

### சரியான நேரத்தில், விரைவான நடவடிக்கை

ஒரு வாரத்திற்குள் சங்க உறுப்பினர்கள் ரூ.52,500 மதிப்பிலான புத்தகப்பைகள், NCERT பாட புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள்,




*சங்கத்தினர் பள்ளிக்குழந்தைகளுக்கு பாட புத்தகங்களை வழங்குகின்றனர்.*





எழுது பொருள்கள் மற்றும் விளையாட்டு பொம்மைகள் சகிதம் பள்ளிக்குச் சென்றனர். கல்வி கற்பதற்கான புதிய உபகரணங்களை மாணவர்கள் பெற்றபோது அவர்கள் முகத்தில் வெளிப்பட்ட மகிழ்ச்சி எங்களை நெகிழ வைத்துவிட்டது என்றார் சங்கத் தலைவர் சர்மா புன்னகையுடன்.

பள்ளி நிர்வாகம் மற்றும் மாணவர்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை நினைவுகூர்ந்தார் பள்ளி முதல்வர் சஞ்சலேஷ் கட்டாரியா. பொது முடக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டு அப்போது தான் மாணவர்கள் பள்ளிக்கு வர ஆரம்பித்தனர். அதற்குள் வெள்ளம் அவர்களை வெகுவாக பாதித்தது. பள்ளியில் தேங்கியிருக்கும் தண்ணீரை வெளியேற்றி பள்ளியைச் சீரமைத்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர 6 மாதங்கள் ஆகலாம் என்று நினைத்திருந்த வேளையில், ரோட்டேரியன்கள் தக்க சமயத்தில் தாராளமாக உதவி எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். அதனால், இயற்கை பேரிடலிருந்து நாங்கள் விரைவில் மீண்டுவர முடிந்தது என்றார் அவர்.



*ரோட்டரி சஹேலி மையத்தில் தையல் பயிற்சியில் பெண்கள்.*

### ஊரகப் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

ரோட்டரி ருத்ராபூர் பவனில் உள்ள ரோட்டரி சஹேலி மையம், பெண்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சியை அளித்து வருகிறது. தற்போது அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த 30 பெண்களுக்கு தொழில் மற்றும் ஆளுமைத் திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்கள் வேலை தேவைப்படும் பெண்களை இங்கு பயிற்சிக்காக அனுப்பிவைக்கின்றனர். இந்த மையம் அவர் களுக்குத் தேவையான பயிற்சி அளித்து அவர்கள் தொழில் செய்து வருமானம் ஈட்ட உதவி வருகிறது என்றார் சர்மா. சமீபத்தில் யெஸ் வங்கிக்கு 1,000 முகக் கவசங்களையும், உள்ளூர் அரசியல்வாதிக்கு 5,000 முகக் கவசங்களையும் இந்த மையம் தயாரித்து அளித்துள்ளது. இதன் மூலம் பெண்கள் ஐந்து நாள் இடைவெளியில் தலா ரூ.1,000 வருமானம் ஈட்ட உதவியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.■

# பொன் விழா ஆண்டில் RC ஹிரியூர்

V முத்துகுமரன்

கர்நாடகத்தின் சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய நகரத்தில் ஏராளமான ரோட்டரி செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அங்கு பூங்கா, அரங்கம் மற்றும் சமூகக் கூடம் போன்றவற்றை அமைத்தல் உள்ளிட்ட பல சேவைத் திட்டங்களின்மூலம் தன்னுடைய மக்களுக்குப் (பெரும்பாலும் உழவர்கள், சிறு வணிகர்கள் மற்றும் வியாபாரிகள்) உதவுவதற்காக RC ஹிரியூரைப் பாராட்டினார் DG V திருப்பதி நாயுடு, RID 3160.

தன்னுடைய பொன்விழா ஆண்டை முன்னிட்டு, முதன்முறையாக, நாங்கள் சம்ப்ரமா என்ற இரண்டு நாள் மாவட்டக் கருத்தரங்கு ஒன்றை நடத்தினோம். இதில் 400 ரோட்டரியன்கள் பங்கேற்றார்கள். உறுப்பினர் எண்ணிக்கையை வளர்த்தல், எழுத்தறிவு, பொதுத் தோற்றத்தைக் கட்டமைத்தல் ஆகியவைபற்றிய நிகழ்ச்சிகளில் PDGகள் ரவி தோத்ரெ, ராஜேந்திர ராய், தீபக் ஷிகர்பூர், முனி கிரீஷ், ஸ்ரீராம் மூர்த்தி, சின்னப்ப ரெட்டி ஆகியோர் ரோட்டரியின் முக்கியப் பிரச்சனைகளைப்பற்றிப் பேசினார்கள்'' என்கிறார் சங்கத் தலைவர் H கிரண் குமார். முந்தைய 50 ஆண்டுகளில், ஹிரியூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் 600க்கும் மேற்பட்ட கண் பரிசோதனை முகாம்கள், 300 உடல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன, மருத்துவப் பராமரிப்பு கிடைக்காத 45,000 பேர் இதனால் பலன் பெற்றார்கள் என்கிறார் இவர். நாங்கள் 10,000 கண் புரை அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளோம், நல முகாம்களில் சர்க்கரை, புற்றுநோய் மற்றும் இதய, சிறுநீரக நோய்களுக்கான பரிசோதனைகளைச் செய்கிறோம்.

ஒவ்வோர் ஆண்டும் 20லிருந்து 30 பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் நினைவுப் பரிசும் ரொக்கப் பணமும் கொண்ட தகுதி விருதுகள் வழங்கப்படுகின்றன. PUC (பல்கலைக்கழகத்துக்கு முந்தைய படிப்பு) மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான ஆண்டு இளைஞர் கருத்தரங்குகள் மிகவும் புகழ் பெற்றுள்ளன. ஏனெனில், நாங்கள் தேசியம், நல்ல குடிமக்களாக இருத்தல், பணி வாழ்க்கையைக்

*DG V திருப்பதி நாயுடு, சங்கத் தலைவர் கிரண் குமார், PDG ராஜேந்திர ராய் (RID 3190) மற்றும் RID 3190 DLCC குருகணேஷ் ஆகியோருடன் RC ஹிரியூரின் பொன்விழா கொண்டாட்டங்களை துவக்கி வைக்கிறார்.*



கட்டமைத்தல், தலைமைப் பண்புத் திறன்கள்பற்றிய ஆர்வமூட்டும் நிகழ்ச்சிகளை வழங்குகிறோம். இதுவரை இப்படி 30 நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறோம். தற்போது, ஐந்து மகிழ்ச்சிப் பள்ளிகள் சங்க நிதியில் நடத்தப்படுகின்றன. அத்துடன், குறைந்தது 240 ஆசிரியர்களுக்குப் பலன் அளிக்கும்வகையில் 6 முதல் 7 ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகளை நாங்கள் நடத்தியுள்ளோம்'' என்றார் குமார்.



### ரோட்டரி பவனா

10,000 சதுர அடி அளவுள்ள கம்பீரமான இந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் தரைத் தளத்தில் இரண்டு சந்திப்பு அரங்கங்கள் உள்ளன, இரண்டாம் தளத்தில் ஒரு மிகப் பெரிய நிகழ்ச்சி அரங்கம் உள்ளது. இந்த நிகழ்ச்சி அரங்கத்தில் சமூக நிகழ்ச்சி களும் சமுதாய ஒன்றுகூடல்களும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

முதன்மைக் கட்டடம் (ரூ.30 லட்சம்) 1997ல் H S சுந்தர்ராஜ் பதவிக் காலத்தின் போது தொடங்கப்பட்டது. ரோட்டரியன்கள், நன்கொடையாளர் கள், நலம் விரும்பிகள் இதற்குத் தாராளமாக நிதியளித்தார்கள். பின்னர், M S ராகவேந்திரா தலைமையின்போது ஹிரியூர் அவை உறுப்பினர் பூர்ணிமா ஸ்ரீனிவாஸ் ஒரு பெரிய தொகையைக் கொடையளித்தார், நாங்கள் 2018–19ல் முதல் தளத்தைச் சேர்த்தோம் (ரூ.20 லட்சம்)'' என்று விளக்குகிறார் இவர்.

பெரிய சமூக விழாக்களுக்காக 1993ல் ஒரு திறந்த வெளி அரங்கம் (ரூ.13 லட்சம்) கட்டப்பட்டது. மிகப் பெரிய கொடையாளரான சேதுராம் தன்னுடைய மறைந்த பெற்றோர் நினைவாக இதற்குப் பெரிய அளவில் பங்களித்தார். இங்கு நீங்கள் மத விழாக்கள் அல்லது சமூக ஒன்று கூடல்களுக்காக 2,000க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுகூடுவதைப் பார்க்கலாம். இந்த அரங்கிற்கு அருகில் ஒரு ரோட்டரி பூங்காவை ரோட்டரியன் வெங்கடரத்னம் ஆதரித்தார்; ரோட்டரியன் H V ஸ்ரீனிவாசன் சிறுவர் நூலகம் ஒன்றுக்குக் கொடையளித்தார், இது பின்னர் ஒரு சந்திப்புக் கூடமாக மாற்றப்பட்டது.




### முதல் GG திட்டம்

அடுத்த சில மாதங்களில், இந்தச் சங்கம் முதன்முறையாக ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்துக்கு விண்ணப்பம் செய்யும். ரூ.30 லட்சம் முதல் ரூ.40 லட்சம்வரை செலவாகும் இந்தத் திட்டம் சூரிய ஒளியில் இயங்கும் தெரு விளக்குகள், வீட்டு விளக்குகளை அமைக்கும். இந்த நல்கை எங்களுக்குக் கிடைத்தால், ஹிரியூர் வட்டத்தில் உள்ள 2,000க்கும் மேற்பட்ட வீடுகள், 20 கிராமங்கள் இதனால் பலன் பெறுவார்கள். இந்த நல்கையைப் பெறுவதில் DRFC மற்றும் PDG K மதுபிரசாத் எங்களுக்கு வழிகாட்டுகிறார்.

இந்தச் சங்கம் தன்னுடைய 50வது ஆண்டுக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, ஆண்டு முழுவதும் வாரத்துக்கு இரண்டு நாட்கள் GH, ஹிரியூரில் உள்ள நோயாளிகள், அவர்களைக் கவனித்துக் கொள்வோ ருக்குப் புதிதாகத் தயாரிக்கப்பட்ட 300 உணவுப் பொட்டலங்களை வழங்கியது. ரூ.7 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டத்தை நகரப்பிரிவு முன்னாள் உறுப்பினர் G பிரேம்குமார் ஆதரித்தார்.

ஹிரியூர் ஒரு மிகச் சிறிய ஊர்; இங்குள்ள சவால் மிகப் பெரியது. கோவிட் உச்சத்தில் இருந்தபோது, இரண்டு ரோட்டரியன்கள் பாதிக்கப்பட்டார்கள். முன்பு 65 உறுப்பினர்களைக் கொண்டிருந்த எங்கள் சங்கத்திலிருந்து சிலர் விலகிவிட்டார்கள் என்கிறார் இவர். ■



# வெயிலுடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்!

பரத் — ஷலன் சவூர்

“வைட்டமின் டி” என்பது சூரிய ஒளி மூலம் கிடைக்கிறது என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், வைட்டமின் டி உடல்நலனில் முக்கிய பங்கு வகிக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. உங்கள் உடலில் போதுமான அளவு வைட்டமின் டி இல்லாவிடில், கோவிட் மற்றும் இதர வைரஸ் தாக்குதலை தடுப்பதற்கான தடுப்பூசியின் செயல் திறன் குறைந்துவிடுகிறது. அதாவது வைட்டமின் டி குறைபாடு இருந்தால் தடுப்பூசியால் போதுமான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க முடியாது.

### வெளியில் செல்லுங்கள்

ஒருவருக்கு வைட்டமின் டி குறைபாடு ஏன் எற்படுகிறது? அதற்கு இரண்டு காரணங்கள்: அதிகம் வெளியில் செல்லாதவராக இருக்கலாம். எனவே நீங்கள் வயதானவராகவும், அதிகம் வெளியில் செல்லாமல் வீட்டிலேயே இருப்பவராகவும் அல்லது வீட்டிலிருந்தபடியே வேலைசெய்யும் நிர்வாகியாகவும் இருந்தால் வெயில்படும்படி நடந்து செல்லுங்கள். மளிகைப் பொருள்கள், மருந்துப் பொருள்களை வீட்டு வாசலில் டெலிவரி செய்வதற்கு பதிலாக நடந்து சென்று அவற்றை வாங்கி வாருங்கள். முகக்கவசம் அணிந்து வெயில் அடிக்கும் திசையில் நடந்து செல்லுங்கள். உலகம் முழுவதும் 1 பில்லியன் மக்கள் வைட்டமின் டி குறைபாடுகளுடன் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சில அறிகுறிகள் இருந்தால் அதற்கு வைட்டமின் டி குறைபாடுகள் காரணமாக இருக்கலாம். அவை: சோர்வு, மூட்டு வலி, தசைகள் பலவீனம், தசை வலி மற்றும் தசைப்பிடிப்புகள். உடற்பயிற்சி செய்பவர்கள் ஒவ்வொரு நாளும் உடற்பயிற்ச்சிக்குப்பின் இந்த அறிகுறிகள் பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதை உடற்பயிற்சியால் ஏற்படும் வலிகள் என்று ஒதுக்கிவிடக்கூடாது. மற்றொரு அறிகுறி மனச்சோர்வு மற்றும் அதன் தொடர்ச்சியான குறைந்த மின்னோட்டம். மனச்சோர்வுடன் தொடர்புடைய மூளையின் பகுதிகளில் தூண்டுதலுக்கு பதிலளிக்கும் வைட்டமின் டி உள்ளது. இந்த ஊட்டச்சத்து குறைவாக இருந்தால் வீக்கம் ஏற்படும்.

### D – K கூட்டணி

Dr ஜோசப் காம்பெல் கருத்துப் படி, நமக்கு போதுமான சூரிய ஒளி கிடைக்காவிடில், நமக்கு 4,000 முதல் 10,000 iu (international units) வைட்டமின் டி-க்கு பதிலான ஊட்டச்சத்து தேவைப்படுகிறது. அப்போது 200 மைக்ரோ கிராம் வைட்டமின் K2 வை ஒருவர் எடுத்துக் கொள்ளலாம். K–D கலவையானது உடலில் தேவையான கால்சியத்துடன் எலும்புக்கான வலுவை கட்டமைக்கிறது. மேலும் தமனி மற்றும் திசுக்களில் அவை படிந்து கடினத் தன்மை ஏற்படுவதையும் தடுக்கிறது.

வைட்டமின் டி நோய் எதிர்ப்பு செயல்பாடுகளை வலுப்படுத்து வதுடன், உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், பெருங்குடல் நோய் மற்றும் இதய நோய்க்கு எதிராக போராட உதவுகிறது. இது அதிக அளவில் இருப்பது நோய்த் தொற்று ஏற்படுவதிலிருந்தும் மரணத்திலிருந்து காக்கிறது. மேலும் ஒரு குணப்படுத்தும் காரணி உள்ளது. நாம் பிறக்கும்போது இருப்பது மரபணுக்கள். நாம் வாழும் வாழ்க்கையில் ஏற்படும் சூழலுக்கு மேல்மரபியில் காரணிகளாகின்றன. அந்த வகையில் வைட்டமின் டி நமது மரபணுக்களை இயக்குகிறது. இது 2,500 மரபணுக்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது மொத்தத்தில் 12 சதவீதமாகும். புதுப்பிக்கப்பட்ட எண்ணிக்கையின்படி நம்மிடம் 21,000 மரபணுக்கள் செயல்பாட்டில் உள்ளன.

மனிதர்களும் மற்ற உயிரினங் களும் சூரிய ஒளியில் வாழ வடிவமைக்கப்பட்ட வெப்பமண்டல உயிரினங்கள் என்பதை மருத்துவ நிபுணர்கள் அறியத் தொடங்கியுள்ளனர் என்பது சுவாரஸ்யமான தகவல். நமது கிரகம் ஒரு சூரிய கிரகம். நமது முழு சுற்றுச்சூழல் அமைப்பும் சூரிய ஒளியை நம்பி வாழ்கிறது. எனவே இதமான வெயிலை அனுபவிப்பது, சூரியக்குளியல் மற்றும் உடலில்

பொலிவு ஏற்படுவதற்காக நாம் வெளியில் நடமாடுகிறோம். தொற்றுக் காலத்தில் பல குழந்தைகளுக்கு கால்கள் வளைந்து காணப்பட்டன. அந்த பிஞ்சுகளின் கால்களுக்கு சூரிய ஒளி கிடைக்காததும், வைட்டமின் டி போதுமான அளவு கிடைக்காததும்தான் காரணம். உடல் எடை அதிகமானதும், எலும்புகள் வலுவிழந்து வளைந்துவிட்டன.

### அளவுக்கு அதிகமாக சாத்தியமில்லை

புற்றுநோய், சுவாசக்குழாய் தொற்றுகள், நாள்பட்ட அழற்சி நோய்கள், தன்னுடல் எதிர்ப்பு நோய்கள் மற்றும் தண்டுவர மரப்பு நோய் ஆகியவற்றிலிருந்து வைட்டமின் டி நம்மை பாதுகாக்கிறது. மேலும் இந்த வைட்டமின் டி சூரிய ஒளி மூலம் கிடைத்தால், அது அளவுக்கு அதிகமானாலும் ஆபத்தில்லை. அது நோய் எதிர்ப்பு செயல்பாடு மற்றும் பயன்பாட்டுத் திறனைக்கூட ஒழுங்குபடுத்துகிறது. monocytes and macrophages எனப்படுவது வெள்ளை அணுக்கள். (மோனோ சைட்ஸ் எனப்படும் ஒருவகை வெள்ளை அணுக்கள் சில தொற்று களை எதிர்த்துப் போராடுவதுடன், இதர வெள்ளை அணுக்களுடன் சேர்ந்து சேதமடைந்த திசுக்களையும், புற்றுநோய் உண்டாக்கும் உயிரணுக் களையும் அழித்துவிடுகின்றன.), T மற்றும் B அணுக்கள், கிளை அணுக்களும் இதற்கு உதவுகின்றன. தேவையான சூரிய ஒளியை மட்டும் பெறுவதால் இவற்றால் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடியாது. அதே நேரத்தில் வைட்டமின் அதன் உற்பத்தியை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் கட்டுபாடற்ற நோயெதிர்ப்பு செயல்பாடு வீக்கத்தை ஏற்படுத்தும்.

இப்போது எழும் கேள்வி: எனக்கு வைட்டமின் டி குறைபாடு இருந்தால், அதை சரி செய்ய எவ்வளவு நாளாகும்? தினமும் 2,000 முதல் 4,000 மில்லிகிராம் எடுத்துக் கொண்டால் நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் சரியாகி விடும். ஆனால், மருந்தை எடுத்துக் கொள்வது குறித்து முதலில் நீங்கள் உங்கள் மருத்துவரிடம் ஆலோச னை பெறவேண்டும் என்கிறார்கள் ரதீஷ் நாயர் மற்றும் அருண் மசீஹ் இருவரும். சில டாக்டர்கள் ergocalciferol (வைட்டமின் டி-2)-க்கு பதிலாக வைட்டமின் டி-3-யை (cholecaliciferol) பரிந்துரைக்கலாம் என்கிறார் டாக்டர் தீபக் சோப்ரா.

### வெயிலில் செலவிடும் நேரம்

வெயிலில் எவ்வளவு நேரத்தைச் செலவிடலாம்? இந்தியாவில் தினமும் காலை 7 மணியிலிருந்து 9 மணிக்குள் அரைமணி நேரம் அல்லது மாலை 5 மணிக்குப் பிறகு 30 நிமிடங்கள். அப்போதுதான் அல்ட்ரா வயலெட் பி கதிர்வீச்சு வலுவாக இருக்கும். காலை 10 மணிக்குப் பிறகு அவற்றின் வீச்சு கடுமையாக இருக்கும். சூரிய ஒளி அதிகம்படாமலிருக்க உடலில் கிரீம்களை (வேதிப் பொருள்களைப் பூசிக் கொள்வது, நமது நோக்கத்தை தோற்கடித்துவிடும். அதனால்தான் காலை நேரம் பரிந்துரை செய்யப் படுகிறது. சில குறிப்புகள்: ஜன்னல் கண்ணாடி வழியாக சூரியக் குளியல் நல்லதல்ல. அல்ட்ரா வயலெட் பி கதிர்கள் ஜன்னல் வழியாக ஊடுருவ முடியாது. நீரிழப்பு ஏற்படாமல் இருக்க போதுமான தண்ணீரை குடிக்க வேண்டும். உங்கள் தோல் உணர்ச்சியுடன் இருந்தால் அது இளஞ்சிவப்பு நிறத்துக்கு மாறுவதற்கு முன்னர் சூரியக் குளியலை நிறுத்தி விடுங்கள். உங்கள் தோல் மங்கலாக இருந்தால் அதன் சகிப்புத் தன்மையை பொருத்து ஒரு மணி நேரம் வரை சூரியக்குளியலில் ஈடுபடலாம்.

### வைட்டமின் டி-க்கான உணவுகள்

வைட்டமின் டி அதிகம் உள்ள இயற்கை உணவுகள்:

**காளான்கள்:** அவை நமக்கு எர்கோஸ்டெராலை (ergosterol) வழங்குகின்றன. இவை புற ஊதாக் கதிர்களுக்கு வெளிப்படும்போது வைட்டமின் டி ஆக மாறுகிறது. சூரிய ஒளியில் அவை அதிகம் வெளிப்படும். 100 மில்லி கிராம் காளானில், 100 எம்.சி.ஜி. வைட்டமின் டி கிடைக்கும்.

**தயாரிப்பு:** அவற்றை பூண்டு மற்றும் உப்பு சேர்த்து வதக்கவும். அவற்றின் மீது உப்பு மற்றும் மிளகு தூளைத்தூவி சுடவைக்கவும்.

**முட்டை கரு:** ஒரு முட்டை கருவில் 35 iu வைட்டமின் டி இருப்பதாக ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகிறார்கள். கோழிகள் கூண்டில் அடைக்கப்படாமல் வெயிலில் சுற்றித்திரியும் பண்ணை களிலிருந்து முட்டைகளை வாங்குமாறு அறிவுறுத்துகின்றனர்.

**தயாரிப்பு:** முட்டையை சாலடாகவோ அல்லது வறுத்தோ பயன்படுத்தலாம். இது சைனீஸ் பிரைடு ரைஸ் மற்றும் இந்திய மசாலாக்கள் நிறைந்த கலவை சாதத்துக்கு ஏற்றது.

**மீன்:** காலா, கொய், சூடை, சாளை மற்றும் வெளவால் மீன்கள் போன்ற கொழுத்த மீன்களை விரும்புங்கள். 3 அவுன்ஸ் மீன்களில் 17.9 எம்.சி.ஜி. வைட்டமின் டி உள்ளது.

**தயாரிப்பு:** வறுக்கப்பட்ட காலா மீன்கள் அல்லது மூலிகைகளுடன் வேகவைக்கப்பட்ட வெளவால் மீன்கள் நல்ல உணவு. பிரபலமான கோவா மற்றும் மங்களூர் தேங்காய் குழம்பு கறி வகைகள் அல்லது பஞ்சாபி வறுத்த வெளவால் மீன்கள் பிரபலமானவை.

**மீன் எண்ணெய்:** மீன் எண்ணெய்யில் வைட்டமின் டி அதிகம் உள்ளது. ஒரு நாளைக்கு ஒரு தேக்கரண்டி மீன் எண்ணெய்யில் 113 சதவீதம் RDA உள்ளதாக ஊட்டசத்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

**தயாரிப்பு:** ஒரு தேக்கரண்டி மீன் எண்ணெய் குடித்துவிட்டு, அதற்கு பிறகு பழரசங்கள் குடிக்கலாம். பால், பழங்கள் கலவை அல்லது ஐஸ்கிரீம்களுடன் கலந்து சாப்பிடலாம். ஒவ்வொரு நாளும் மீன் எண்ணெய் மாத்திரைகளை சாப்பிடுவது இன்னும் சிறந்தது.

**குறிப்பு:** மீன் எண்ணெய்யை கை, கால்களிலும் தடவிக் கொள்ளலாம். தேகம் பொலிவு பெறும்.

அன்பு வாசகர்களே! சூரியனில் உங்கள் மிகழ்ச்சியான இடத்தை கண்டறியவும். எலும்புகள், மூளை, இதயத்தை சூடுபடுத்துங்கள். வலுவாக இருங்கள். ஆரோக்கியமாக இருங்கள். உடலில் வெயில் படும்படி இருங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும்
Fitness for Life மற்றும் Simply Spritiual
— You Are Naturally Divine
என்ற ஆங்கில நூல்களின்
எழுத்தாளர்கள்.

# ரோட்டரி ஆளுநர்





**சுனில் பதக்**

மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி, RC ஜபல்பூர் சவுத், RID 3261

## GG திட்டங்கள் நம் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும்

MP, ஒடிசா மாநிலங்களின் பகுதிகள், சத்திஸ்கர் முழுவதையும் கொண்ட இந்த மாவட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி பெரிய சவாலாக உள்ளது. காரணம், பெரும்பாலான பகுதிகள் தொலைவில் உள்ளவை, பழங்குடியினக் குடியிருப்புகள், அங்குள்ள மக்களுக்கு ரோட்டரிபற்றிய விழிப்புணர்வு இல்லை என்கிறார் சுனில் பதக். ஆனால், நம்முடைய GG திட்டங்கள் நம் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும், நாம் வளர உதவும்'' என்று இவர் நம்புகிறார். ஜூன் 30க்குள் 20 புதிய சங்கங்களைச் சேர்த்துச் சங்கங்களின் எண்ணிக்கையை 100க்குக் கொண்டு செல்லத் திட்டமிடுகிறார் இவர், இதில் 12 சங்கங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன.

இந்த ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை 350 கூடும், மொத்த எண்ணிக்கை 3,300 ஆகும் என்று இவர் நம்புகிறார்.

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு $100,000. ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகை பரிமாற்ற விகிதம் அடிப்படையில் அமையக்கூடாது, அது ரூபாய் மதிப்பில் நிலைநிறுத்தப்படவேண்டும். அத்துடன், 18% GST விகிதம் என்பது மிகக் கூடுதலானது, சங்கக் கட்டணத்தைக் கட்டுப்படியாக்கும் நிலைக்குக் கொண்டுவருவதற்காக அரசு இந்த விகிதத்தைக் குறைக்கவேண்டும்'' என்கிறார் இவர். பதக் 13 ஆண்டுகளுக்குமுன் தன்னுடைய குழந்தைப்பருவ நண்பர் Rtn ஜிதேந்திர குல்கர்னி அவர்களால் ஊக்கம் பெற்று ரோட்டரியில் சேர்ந்தார்.

**M G ராமச்சந்திர மூர்த்தி**

பட்டயக் கணக்காளர், RC ஷிமோகா மிட்-டவுன், RID 3182

## ஷிமோகாவில் வரவிருக்கும் உயிரியல் பன்முகத்தன்மைக் காடு

இவருடைய மிகப் பெரிய முக்கியத்துவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு; ஷிமோகாவில் எட்டு ஏக்கர் பரப்பில் ஒரு மிகப் பெரிய ரோட்டரி உயிரியல் பன்முகத்தன்மைக் காடு உருவாக்கப்படுகிறது. நாங்கள் ஏற்கெனவே 1,800 மரக்கன்றுகளை நட்டுவிட்டோம்; வேலை முழு வீச்சில் நடைபெறுகிறது'' என்கிறார் ராமச்சந்திர மூர்த்தி. 12 ஏரிகளைப் புதுப்பிப்பதற்கு ரூ.48 லட்சம் மதிப்புள்ள ஒரு GG செயல்முறையின் கீழ் உள்ளது; ''பிளாஸ்டிக் பயன்பாட்டை நிறுத்துவது'' பற்றிய மிகப் பெரிய விழிப்புணர்வுத் திட்டம் செயல்பட்டுவருகிறது, இது 3Rகளில் (குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்தல்) கவனம் செலுத்துகிறது; எலக்ட்ரானிக் குப்பைகளை முறையாகவும் அறிவியல் முறையிலும் அகற்றுவதுபற்றிச் சங்கங்கள் மக்களுக்கு நுண்ணுணர்வை உண்டாக்கிவருகின்றன.

இந்த மாவட்டத்தின் சங்கங்கள் வெவ்வேறு இடங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மரக் கன்றுகளை நடுகின்றன. ஜூன் நிறைவுக்குள் மேலும் ஐந்து சங்கங்களைச் சேர்த்துச் சங்க எண்ணிக்கையை 90க்குக் கொண்டுசெல்ல இவர் திட்டமிடுகிறார். நான் உறுப்பினர் எண்ணிக்கையை 33% உயர்த்தி 4,000க்குமேல் கொண்டுசெல்லவுள்ளேன்.

இவருடைய TRF வழங்கல் இலக்கு, $200,000. சேவைத் திட்டங்கள் ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துவதால், மேலும் பல தொழில் வல்லுனர்கள் ரோட்டரியில் இணைவார்கள் என்று சொல்லும் மூர்த்தி, 1992ல், PDG டாக்டர் நாராயணா, முன்னாள் தலைவர் டாக்டர் ஷிவராமகிருஷ்ணா ஆகியோரால் ஊக்கம் பெற்று ரோட்டரியில் சேர்ந்தார்.

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



**ஓம் பிரகாஷ் B மோடிபாவாலெ**
எடிட்டர்/பதிப்பாளர்,
RC லாட்டூர் சென்ட்ரல், RID 3132

## பெண்களுக்கு உதவ கால்நடை, மிதிவண்டிகள்

பெண்களுக்கு ஆற்றல் அளிக்கிற, பாதுகாப்பான வருவாயுடன் தங்களுடைய குடும்பங்களைத் தொடர்ந்து நடத்த அவர்களுக்கு உதவுகிற பல திட்டங்கள் இங்கு செயல்படுத்தப்படுகின்றன. ஏற்கெனவே, 300 பெண்கள் மசாலாக் கலவை, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், அப்பளம், பால் அடிப்படையிலான நொறுக்குத் தீனிகள் போன்ற வீட்டில் செய்யப்படும் பொருட்களைத் தயாரிப்பதில் பயிற்சி பெற்றுள்ளார்கள். சங்க நிதியளித்தலின் வழியாக நாங்கள் மேலும் 700 பெண்களுக்குப் பயிற்சி அளிப்போம்'' என்கிறார் ஓம்பிரகாஷ் மோடிபாவாலெ. ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக, தொலைவில் உள்ள, மலையில் உள்ள பகுதிகளில் வசிப்போரை இங்குள்ள சங்கங்கள் அணுகி, 127 குடும்பங்களுக்குத் தலா ஐந்து ஆடுகளை வழங்குகின்றன.

தொலைவில் உள்ள பகுதிகளில் பள்ளி மாணவிகளுக்கு ஒரு பன்னாட்டு நல்கையின்கீழ் இரண்டாயிரம் மிதிவண்டிகள் வழங்கப்படும் என்கிறார் மோடிபாவாலெ. 10 புதிய சங்கங்களைச் சேர்த்து ஜூன் நிறைவுக்குள் மொத்தச் சங்கங்கள் எண்ணிக்கையை 95க்குக் கொண்டு செல்வது இவருடைய இலக்கு. அதில் ஐந்து சங்கங்கள் ஏற்கெனவே அமைக்கப் பட்டுவிட்டன. நாங்கள் 400 புதிய ரோட்டரியன்களைச் சேர்த்து எங்கள் உறுப்பினர் எண்ணிக்கையை 4,000க்கு மேல் உயர்த்துவோம். இதுவரை நாங்கள் 600 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளோம். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $110,000. முன்னாள் ரோட்டராக்டரான மோடிபாவாலெ 2001ல் ரோட்டரியில் இணைந்தார். காரணம், இதழாளரான நான், நம் நாட்டில் ரோட்டரியின் செயல்பாடுகளைக் கண்டு ஊக்கம் கொண்டேன்.



**ராஜசேகர் ஸ்ரீனிவாசன்**
மின் ஆலோசகர்,
RC கோயம்பத்தூர் மிட்-டவுன், RID 3201

## ''நம் அழகிய பூமி'' மீது வெளிச்சம் இடுவோம்

நம் அழகிய பூமி என்கிற இந்த மாவட்டத்தின் முதன்மைக் கருப்பொருளின்கீழ், 153 சங்கங்களும் 500க்கும் மேற்பட்ட சேவைத் திட்டங்களின்மூலம் பலவிதமான களப் பணிகளின் வழியாகப் பூமி, நீர் மற்றும் மனித குலத்தில் நேர்விதத் தாக்கத்தைக் கொண்டுவருகின்றன. என்னுடைய முதன்மை நோக்கங்களை நான் ''ரோட்டரியின் ஏழு அதிசயங்கள்' என வரையறுத்துள்ளேன், இதில் எங்கள் ஆண்டு இலக்குகள் பட்டியலிடப்பட்டுள்ளன'' என்கிறார் ராஜசேகர் ஸ்ரீனிவாசன். இவர் ஏழு புதிய சங்கங்களைத் தொடங்குகிறார்; 70 புதிய ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கங்களை அமைக்கிறார்; 700 RCCக்களை அமைக்கிறார்; உறுப்பினர் எண்ணிக்கையை 7,000ஆக உயர்த்துகிறார் (அவர் ஆண்டைத் தொடங்கியது 5,700உடன்); RYLA, ரோட்டராக்ட் போன்றவற்றின் வழியாக 7,000 இளைஞர்களை அணுகுகிறார்; ஏழு லட்சம் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கிறார்; $1.5 மில்லியன் TRF பங்களிப்பின் ஒரு பகுதியாக, வருடாந்திர நிரந்தர நிதி (APF)க்கு ரூ.7 கோடி ($1 மில்லியன்) வழங்குகிறார்.

மகாப்ஸ் 21 சந்திப்பில் பெருமைப்படுத்தப்பட்ட புதிய AKS உறுப்பினர்களில் ஸ்ரீனிவாசனும் ஒருவர். இப்போது, 68 GG திட்டங்கள் வெவ்வேறு செயல்படுத்தல் நிலைகளில் உள்ளன, இந்த ஆண்டு மேலும் 20 பன்னாட்டு நல்கைகளுக்கு விண்ணப்பித்துள்ளோம். மக்கள் நம்முடைய திட்டங்களைப் பார்த்துள்ளதால் ரோட்டரியில் இணைய விரும்புகிறார்கள் என்கிறார் இவர். இவர் 2001ல் தன்னுடைய குடும்ப நண்பர் Rtn பாபூ கண்ணன் அவர்களால் ஊக்கம் பெற்று ரோட்டரியில் இணைந்தார்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

இசையும் & இனிமையும்

# டி.எம்.எஸ், நம்பிக்கையின் பாடகர்

SR மது

உலகிற்கு எப்படி ஒரே ஒரு சூரியனும் சந்திரனும் இருக்கிறதோ அதே போல் ஒரே ஒரு டி.எம்.எஸ் மட்டுமே இருக்க முடியும்'' என்று பல வருடங்களுக்கு முன்பு ஒரு நிகழ்வில் தமிழ் திரைப்பட இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் கூறியுள்ளார்.

தமிழ் சினிமா வரலாற்றின் தலைசிறந்த பாடகர் டி.எம். சௌந்தரராஜன் ஆவார். ஆனால் அந்த அங்கீகாரத்திற்காக அதிகம் போராடியவரும் அவர்தான். அவர் பல தசாப்தங்களாக அடைந்த அபாரமான வெற்றிக்கு முன்னர் பல ஆண்டுகள் மனதை கலங்கடிக்கும் தோல்விகளையும் சந்தித்துள்ளார். வெகுஜன மக்களால், தாழ்மையான மக்களால் -- உணவகத் தொழிலாளர்கள், செருப்புத் தொழிலாளிகள், சலவை செய்பவர், ரிக்ஷாகாரர்கள், குயவர்கள், குழாய் செப்பனிடுபவர், கூலியாட்கள் ஆகியோரால் அவர் போற்றப்பட்டார். அவர்களுக்கு டி.எம்.எஸ் நம்பிக்கையூட்டும் பாடகர் ஆவார்.

ஆனால், அவர் வசதி படைத்த சமூகத்தாலும் போற்றப்பட்டார். "இந்தியாவில் மட்டுமல்ல, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, மத்தியகிழக்கு நாடுகளில், செழிப்பான தமிழர்கள் ஆடம்பரமான கார்களை ஓட்டும்பொழுது அவர்கள் செய்த முதல் காரியம் வானொலியில் டி.எம்.எஸ் பாடல்களை கேட்பதே என்று தமிழ் நடிகர் விவேக் கூறினார்.

"அவரது குரல் கல்லையும் உருக்கும், சாந்தமானவர்களை கர்ஜிக்க வைக்கும், தவறிழைத்தவர்களை மனந்திருந்த வைக்கும்'' என்று ஒரு தயாரிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

டி.எம்.எஸ் 1923 இல் பிறந்தார், 1946 இல் தனது பாடல் கலைப்பயணத்தை தொடங்கினார், 91 வயது வரை வாழ்ந்து 2013ல் இறந்தார். ஆறு தசாப்தங்களாக அவரின் ஈடுபாடு





இசைத்துறையில் இருந்தது, அப்பொழுது ஆயிரக்கணக்கான படங்களில் 10,000க்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். மேலும் அவரது விருப்பமான முருகன் உட்பட பல தெய்வங்களுக்கு 2,000 மேலான பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார். ஆனால் சுமார் 30 ஆண்டுகள் 1955 முதல் 1985 வரை - அவர் தமிழ் சினிமாவை ஆட்சி புரிந்தார். அவரது குரல் நாள் முழுவதும் இசை அரங்குகள், டீக்கடைகள், வீடுகள் மற்றும் ஸ்டுடியோக்களில் இருந்து ஒலித்தது.


பூஜை மற்றும் பஜனைகள் மூலம் வாழ்க்கையை நடத்தி கொண்டிருந்த ஒரு சிறு அர்ச்சகரின் மகனாக டி.எம்.எஸ் மதுரையில் பிறந்தார். சிறுவயதிலேயே இசையின் மீது மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். பஜனைகள், பக்திப் பாடல்கள், திரைப்படப் பாடல்கள், குறிப்பாக தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டாரான எம் கே தியாகராஜ பாகவதரின் பாடல்கள் என தனக்குக் கிடைத்த அனைத்து பாடல்களையும் மனப்பாடம் செய்து பாடினார். பாகவதர் பாடல்கள் அவருக்கு பகோடா மற்றும் காபி போன்ற வெகுமதிகளைப் பெற்றுத்தந்தது. அவரும் அதனை மனதார உட்கொண்டார்.

அவரது தந்தையால் டி.எம்.எஸ் அவர்களுக்கு முறையான இசைப் பயிற்சியைக் அளிக்க முடியவில்லை, எனவே சிறுவனாக இருந்தாலும் அதை தானே ஏற்பாடு செய்துக்கொண்டார். மதுரையில் திரையரங்க உரிமையாளர்களுக்கு பணிவிடை செய்தார், பண்டிகை காலங்களில் பாடல்கள் பாடினார். அதற்கு வெகுமானமாக இசைப்பாடத்திற்கான கட்டணம் மாதம் 15 ரூபாயை அவர்கள் மாறி மாறிச் செலுத்தினர். அவரது குரு காரைக்குடி ராமானுஜ ஐயங்கார் ஆவார்: கர்நாடக இசையின் 12 வர்ணங்கள் மற்றும் 48 கீர்த்தனைகளை அவர் கற்க கவனம் செலுத்தப்பட்டது, இது அவரின் கலைக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை அளித்தது.

இதற்கிடயே, டி.எம்.எஸ் படிப்பிலும் மற்றும் தேர்விலும் தோல்வியடைந்தார். அவரின் எதிர்காலம் கேள்விகுறியானது. தந்தை போல் பூசாரி ஆக விரும்பமில்லாததால் அவர் கோயம்புத்தூரில் உள்ள சென்ட்ரல் ஸ்டுடியோவில் வேலைக்கு சேர்ந்தார். அங்கே சுத்தம் செய்தல், சமையல் செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற பல்வேறு வேலைகளை செய்தார். அவர் ஒரு படத்தில் பிச்சைக் காரனாக நடித்தார், அதில் ஒரு பாடலையும் பாடினார். படத்தின் வேலைசெய்தோர் புத்தகத்தில் “பிச்சைக் காரன்: டி எம் சௌந்தர்ராஜன்” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

22 வயதில், திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான அவர், தனது பாக்கெட்டில் 250 ரூபாய் மற்றும் தனது பாடல்களின் கிராமபோன் இசைத்தட்டுகளுடன் சென்னைக்கு புறப் பட்டார். தங்குவதற்கு ஆழ்வார்பேட்டையில் ஒரு மலிவான அறையைக் கண்டு பிடித்தார், ஒரு நாளில் ஒரு வேளை மட்டும் சாப்பிட ஒரு மலிவான உணவகத்தையும் கண்டுபிடித்தார். நாள் முழுவதும் பாட வாய்ப்பு தேடிக் கொண்டிருந்த அவர், தனக்குக் கிடைத்த அனைத்து வாய்ப்பையும் பற்றிக் கொண்டார்.

ஆனால், ஐந்து வருடங்களுக்குப் பிறகு 1950-ல் தான் டி.எம்.எஸ் அவர்களுக்கு தமிழ்த் திரைப்படங்களில் பாடும் வாய்ப்பு கிடைத்தது. பின்னணிப் பாடகராக ஆகும் தனது கனவை கைவிடும் தருவாயில் இருந்த டி.எம்.எஸ் அவர்களுக்கு 1954ம் ஆண்டில் முதல் பெரிய வாய்ப்பு கிட்டியது. சிவாஜி கணேசன் அவர்களை வைத்து எடுக்கபட்ட தூக்கு தூக்கி படத்தில் எட்டு பாடல்களை திருச்சி லோகநாதன் பாடவிருந்தார். ஒரு பாடலுக்கு 500 ரூபாய் சம்பளமாக கேட்டவரிடம். நீங்களே 8 பாடல்களைப் பாடவிருப்பதால் ஏன் கட்டணத்தை குறைக்கக் கூடாது? என்று தயாரிப்



*டி.எம்.எஸ் மற்றும் இசைஞானி இளையராஜா.*



பாளர்கள் கேட்டுள்ளனர். அதற்கு நான் ஒரு பாடலைப் பாடினாலும் சரி அல்லது எட்டுப் பாடல்களைப் பாடினாலும் சரி எனது விலை ஒரு பாடலுக்கு 500 ரூபாய் என்று லோகநாதன் கூறினார்.

பலரால் பேசப்பட்ட மதுரையை சேர்ந்த இளைஞனை பாட வைக்க தயாரிப்பாளர்கள் முடிவெடுத்தனர். பல பின்னடைவுகள் மற்றும் முடிவில்லா மறுப்புகளையும் சந்தித்த டி.எம்.எஸ் மனமுடைந்து சாலையில் நடந்து சென்ற கொண்டிருந்த போது, அருணா பிலிம்ஸ் நிறுவனத்தினர் அவரைத் தங்கள் காரில் இருந்து தடுத்து நிறுத்தி, நீங்கள் டி.எம்.எஸ் தானே?, நாங்கள் உங்களை தான் தேடிக்கொண்டிருக்கிறோம் என்று கூறினார். அவரை சோதித்து, அவர் குரல் பிடித்து, எட்டு பாடல்களையும் பாட ரூ.2,000 கட்டணமாக நிர்ணயித்து அவரை ஒப்பந்தம் செய்தனர். டி.எம்.எஸ் அளவில்லா மகிழ்ச்சியடைந்தார். ஆனால் இச்செயலால் வருத்தமடைந்த சிவாஜி கணேசன், எனக்கு ஒரு புதுமுகத்தை எப்படி பாட வைப்பீர்கள்? பராசக்தியில் எனக்காக பாடிய சி எஸ் ஜெயராமனை ஏன் பாட வைக்கக் கூடாது? என்று கேட்டார்.

இதனை அறிந்த டி.எம்.எஸ் கலக்கமடைந்தார். அவர் சிவாஜியிடம், தயவு செய்து என்னை ஒரு முறை முயற்சிக் கவும். நான் மூன்று பாடல்களை பாடுகிறேன். நான் பாடுவது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், நான் வீட்டிற்குச் சென்று விடுகிறேன். நீங்கள் என்னை மீண்டும் பார்க்க மாட்டீர்கள் என்று கூறியுள்ளார். சிவாஜி அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார். டி.எம். எஸ்ஸின் கணீர் குரல் மற்றும் உணர்ச்சிமயமான உச்சரிப்பையும் கேட்டு வியப்படைந்தார். ஏன் மூன்று பாடல்கள், எட்டு பாடல்களையும் அவரே பாடட்டும் என்று தயாரிப்பாளர்களிடம் கூறினார்.

தூக்கு தூக்கி திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது, மேலும் அதன் பாடல்கள் தமிழிசை வரலாற்றில் அசைக்க முடியா இடத்தை பிடித்தது. தங்க ஜோடியான, சிவாஜி கணேசன் மற்றும் பத்மினி அவர்கள் நடித்த முதல் படங்களில் இதுவும் ஒன்று. சுந்தரி சௌந்தரி, பெண்களை நம்பாதே மற்றும் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் ஆகிய மூன்று பாடல்களும் 1950களில் விரும்பி கேட்கப்பட்ட பாடல்கள் ஆனது.

அதே ஆண்டு எம்ஜிஆர் மற்றும் சிவாஜி இணைந்து நடித்த ஒரே படமான கூண்டுக்கிளி வெளியானது. அப்படத்தில் வரும் கொஞ்சும் கிளியான பெண்ணை என்ற டி.எம்.எஸ் பாடல் எம்.ஜி.ஆரை கவர்ந்தது. அதனால் எம்.ஜி.ஆர், தனது மைல்கல் திரைப்படமான மலைக்கள்ளனில் மிக முக்கியமானதாகக் கருதிய பாடலை டி.எம்.எஸ் அவர்களை பாடவைத்தார். அப்பாடல்: எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே. அதில் எம்.ஜி.ஆர் குதிரை இழுக்க அதன் மீது பானுமதி அமர்ந்து காட்சியளித்தார். அப்பாடலும் படமும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது, திலீப் குமார் நடிப்பில் இந்தியில் ஆசாத் என்ற பெயரில் உருவாக்கபட்டது.

தூக்கு தூக்கி மற்றும் மலைக்கள்ளன் திரைப்படங்கள் டி.எம்.எஸ்ஸை தமிழ் சினிமாவின் நட்சத்திரங்களான எம்.ஜி.ஆர் மற்றும் சிவாஜியின் விருப்பமான பாடகராக மாற்றியது. அவரது



தொழில் வாழ்க்கை மென்மேலும் உயர்ந்தது. வெற்றி மேல் வெற்றியை அள்ளிக்குவித்தார். சில மாதங்கள் முன்பு வரை, அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரப்போகிறது என்று தெரியாமல் இருந்த நபர், இன்று அனைவராலும் நாடப்பட்டார். பல ஆண்டுகளாக பாழடைந்த சைக்கிளை தவிர வேறு எந்த வாகனமும் தெரியாத டி.எம்.எஸ் அவர்களின் வீட்டிற்கு முன்னே தயாரிப்பாளர்கள் மற்றும் நட்சத்திரங்களின் ஆடம்பரமான கார்கள் அணிவகுத்து நின்றன.

அடுத்த சில தசாப்தங்களாக, டி.எம்.எஸ்ஸின் ஆற்றல் நிரம்பிய குரல் ஒவ்வொரு மனநிலையையும், தாளத்தையும் பிரதிபலித்தது, ஒவ்வொரு உணர்வையும் வெளிப்படுத்தியது. அந்த வல்லவரிடமிருந்து காதல், மகிழ்ச்சி, நகைச்சுவை, துன்பம் அவநம்பிக்கை, தத்துவ பிரதிபலிப்பு, மத பக்தி, தொன்மை ராகங்கள், மேற்கத்திய தாளங்கள் என்று அனைத்து வகையான பாடல்களும் பொங்கி வழிந்தன. அது அவரின் ஈடுஇணையற்ற பல்துறை பரிமாணங்களை வெளிபடுத்தியது.

இங்கே டி.எம்.எஸ்ஸின் திறனைப் பற்றிய ஒரு கதை கூறப்பட வேண்டும் . ஒரு சமயம், சிவாஜி கணேசன் ஒரு பாடல் காட்சியில் நடிக்கவிருந்தார். டி.எம்.எஸ்ஸின் பாடல் ஒலிப்பதிவைக் கேட்ட அவர், உடனடியாக ஸ்டுடியோவை விட்டு வெளியேறினார். கவலையடைந்த தயாரிப்பாளர் சிவாஜியிடம் என்ன நடந்தது என்று கேட்டனர். டி.எம்.எஸ் அப்பாடலை மட்டும் பாடவில்லை, அதை எனது குரலில் மிக சிறப்பாக பாடியுள்ளார். பாடலுக்கு மதிப்பு சேர்க்க ஒரு நடிகராக என்னால் என்ன செய்ய முடியும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்று சிவாஜி கூறியுள்ளார்.

தமிழ்த் திரைப்படங்களில் பல மறக்க முடியாத காட்சி கள் டி.எம்.எஸ் பாடல்களை அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாக: தூங்காதே, தம்பி, தூங்காதே-நாடோடி மன்னன், 1958.

“தூங்காதே தம்பி தூங்காதே” என்று சிறைக் காவலர்களிடம் கைதி எம்.ஜி.ஆர் பாடுவார். எம்.ஜி.ஆர் வேலையை வணங்கியவர், சோம்பலை வெறுத்தவர் என்பது இப்பாடல் மூலம் மக்களுக்கு கொண்டு சேர்க்கப்பட்ட முக்கிய கருத்து. எம்.ஜி.ஆர் மற்றும் டி.எம். எஸ் இருவருடனும் எப்போதும் நினைவுக்கூறப்படும் ஒரு பிரபலமான பாடல்.

### வந்த நாள் முதல், இந்த நாள் வரை - பாவ மன்னிப்பு, 1961

“வந்த நாள் முதல் இந்த நாள் வரை வானம் மாறவில்லை, வான்மதியும் மீனும் கடல் காற்றும் மலரும் மண்ணும் கொடியும் சோலையும் நதியும் மாறவில்லை மனிதன் மாறிவிட்டான்” என்று டி.எம்.எஸ் பாட சிவாஜி மிதிவண்டி செலுத்துவார். பாடலாசிரியர் கண்ணதாசன், பாடகர் டி.எம்.எஸ், நடிகர் சிவாஜி ஆகியோருக்கு இப்பாடல் மிகப்பெரிய வெற்றியை தேடித்தந்தது.

### அச்சம் என்பது மடமையடா - மன்னாதி மன்னன், 1961

வியக்கத் தக்க காட்சிகள், சண்டைகள், இசை, நடனம் மற்றும் காதல் நிறைந்த இப்படம் , எம்.ஜி.ஆர் “அச்சம் என்பது மடமையடா” என்று ரதத்தில் அமர்ந்து பறைசாற்றும் பாடலுடன் தொடங்குகிறது. “அவரது குரல் அச்சமற்ற தன்மையை உள்ளடக்கி தங்களுக்கு ஊக்கமளிக்கிறது” என்று டி.எம்.எஸ்ஸின் ரசிகர்கள் வலியுறுத்தினர்.

### சித்திரம் பேசுதடி — சபாஷ் மீனா (1965)

டி.எம்.எஸ்ஸின் வசீகரமான குரலில் சிவாஜி தனது அழகான காதலியான மாலினியை அவரது உருவப்படத்தின் முன் புகழ்கிறார்; உண்மையான மாலினி ஒரு திரைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அவரது புகழை கேட்டு ஆனந்தமடைகிறார். அற்புதமான காட்சி கள், மனதைக் கவரும் மெல்லிசை.



*டி.எம்.எஸ், கவிஞர் வைரமுத்து மற்றும் பின்னனி பாடகர் P சுசிலாவுடன்.*





## கம்பீரகுரலும் ஒப்பற்ற தமிழும்

டி.எம்.எஸ்ஸை ஒரு தனித்துவமான பாடகராக மாற்றியது எது? பாடலாசிரியர் வைரமுத்து இரண்டு பண்புகளைக் குறிப்பிடுகிறார்: அவரது கம்பீர குரல் மற்றும் அவரது ஒப்பற்ற தமிழ். என் பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்க, டி.எம்.எஸ் அவர்களின் பாடல்களை கேட்க செய்தேன். ஒவ்வொரு எழுத்தையும் அவர் உச்சரித்த விதம் கச்சிதம்.

டி.எம்.எஸ்ஸின் குரலில் இருந்த கம்பீரத்தை மெருகேற்றியவர் இசையமைப்பாளர் ஜி ராமநாதன் என்கிறார் வைரமுத்து. டி.எம்.எஸ் அவர்களே தன் சிம்மக்குரலுக்கு முக்கிய காரணம் ஜி ராமநாதன் அவர்களே என்று பாராட்டியுள்ளார். இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதனுக்கும் டி.எம்.எஸ் மிகவும் கடமைபட்டிருக்கிறார். அவர் டி.எம்.எஸ்ஸை மேற்கத்திய இசைக்கு அறிமுகப்படுத்தி, அவரது குரலை நவீனமாக்கினார்'' என்கிறார் வைரமுத்து.

சிவாஜிக்காக டி.எம்.எஸ் பாடிய பல பாடல்கள் அவரது குரலின் ஆற்றலையும், தமிழ் மொழியின் கம்பீரத்தையும், பண்டைய ராகங்களின் கவர்ச்சியையும் எடுத்துக் காட்டுகின்றன. திருவிளையாடல் படத்தில் சிவாஜி நடிக்க, டி.எம்.எஸ் அவர்களால் அருமையாகப் பாடப்பட்ட பாட்டும் நானே, பாவமும் நானே பாடல்.

எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரை, டி.எம்.எஸ்ஸின் சக்தி வாய்ந்த குரல் அவரின் அரசியல் ஆசைகளுக்கு ஒரு ஆதாரமாக அமைந்தது. நான் ஆணையிட்டால் (எங்க வீட்டுப் பிள்ளை) என்ற புகழ்பெற்ற பாடலானது ஒரு உதாரணம், இதில் எம்.ஜி.ஆர் சமூகத்தின் விரோதிகளை திட்டி, ‘‘ஏழைகளை மோசமாக நடத்துபவர்களை நான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன்'' என்று இடி முழக்கமிடுவார். மக்கள் தங்கள் ஒப்புதலை நாயகன் எம்.ஜி.ஆரை தாண்டி நிஜ வாழ்க்கை எம்.ஜி.ஆருக்கு அளித்தனர்.

## குரல் மாற்றும் திறன்

டி.எம்.எஸ்ஸின் மிகப்பெரிய ஆற்றல் எதுவெனில், எந்த ஒரு நடிகருக்கும் பாடும் போது, அந்த நடிகரின் பேச்சு மற்றும் குரல் முறைகளை ஆய்வு செய்து அவர் தனது குரலை மாற்றியமைத்து பாடும் விதம் என்கிறார் வைரமுத்து. உதாரணத்திற்கு சிவாஜி பாடலுக்கும், எம்.ஜி.ஆரின் பாடலுக்கும் அவருடைய உத்திகள் வேறுப்படும். சிவாஜிக்கு உரத்த குரலிலும் எம்.ஜி.ஆருக்கு மென்மையாக குரலிலும் பாடினார்.

பார்வையற்ற ஒருவர் டி.எம். எஸ் பாடலைக் கேட்கும் போது, எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி கணேசன், முத்துராமன், ஜெய்சங்கர் அல்லது ரவிச்சந்திரன் என்று எந்த நடிகருக்காகப் பாடினார் என்பதைச் சொல்ல முடியும் என்கிறார் நடிகர் விவேக்.

1980-ன் பிறகு, டி.எம். எஸ் பல நேரடி இசை நிகழ்ச்சி களை வெளிநாட்டில் உற்சாக மிக்க ரசிகர்கள் கொண்ட முழு அரங்கங்களில் நடத்தினார். 2006 ஆம் ஆண்டு பாடகராக டி.எம். எஸ் கலைப்பயணத்தை தொடங்கி 60 வருடம் முடிவுபெற்றதை முன்னிட்டு அப்போதைய முதல்வர் மு. கருணாநிதி தலைமையில் மதுரையில் மாபெரும் பாராட்டு நடத்தப்பட்டது. இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து கலைஞர்களும் தமிழ்த் திரைப்பட இசையின் முடிசூடா மன்னன் என்று டி.எம்.எஸ் அவர்களை பாராட்டினர். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, 2013-ல் அவர் காலமானார்.

கட்டுரையாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

ADVT.

# Unlock greater potential in your child.




21K School is more than just schooling. It's about discovering the hidden talents and aptitude in your child and nurturing these towards excellence. It's a format that gives your child more time, more energy, more knowledge, more belief, more creativity... in short, enabling your child to **Be More** in life.

**UNIQUE FEATURES**

- Research-based curriculum
- Tech-based learning
- Trained teachers from around the world
- Learning at own pace and from own space
- Data-driven
- Spotlight on every child

**Save over 8% on school fees by enrolling now!**







**ADMISSIONS OPEN**
**2022-23**
LIMITED SEATS.

Scan to Connect

WhatsApp Chat:
+91-96632 13636
+91-87927 39334

www.21kschool.com
info@21kschool.com

## 21K School

World Class Education For Your World

**35+** Countries | **400+** Cities | **3500+** Students

CURRICULUM: Indian • British • American

/21kschool

Day School • Day Boarding • Dual Diploma

# Dreams deferred



**Sandhya Rao**

For many, London throbs with exciting shopping opportunities; it is also a living repository of history. Along comes a book that presents a side of London few know or even care about.

*This Is London* by Ben Judah was longlisted for the Baillie Gifford prize for nonfiction in 2016. This award is touted as the UK's premier honour for a work of nonfiction, and for those who enjoy nonfiction, a visit to its website is a must. The 2021 winner was Patrick Radden Keefe's *The Empire of Pain: The Secret History of the Sackler Dynasty*. The Sackler name, apparently, 'adorns the walls of many storied institutions — Harvard, the Metropolitan Museum of Art, Oxford, the Louvre. They are one of the richest families in the world, known for their lavish donations to the arts and the sciences. The source of the family fortune was vague, however, until it emerged that the Sacklers were responsible for making and marketing a blockbuster painkiller that was the catalyst for the opioid crisis.'

Previous winners include *East West Street* by Phillipe Sands, *How to Survive a Plague* by David France, *Chernobyl* by Serhil Plokhy, *The Five: The Untold Lives of Women Killed by Jack the Ripper* by Hallie Rubenhold, and *One Two Three Four: The Beatles in Time* by Craig Brown. But it's not just the winning titles that will hook you, the longlists in themselves are a library of amazing reading that will engage you for years!

Judah's London reaches out to us in the voices of Arabs, Afghans, Nigerians, Poles, Romanians, Russians and others. As the Baillie Gifford citation describes it: 'This is the new London: an immigrant city. Over one-third of Londoners were born abroad, with half arriving since the millennium. This has utterly transformed the capital, for better and for worse. … Ben Judah is an acclaimed foreign correspondent, but here he turns his reporter's gaze on home, immersing himself in the hidden world of London's immigrants to reveal the city in the eyes of its beggars, bankers, coppers, gangsters, carers and witch-doctors. From the backrooms of its mosques, Tube tunnels and nightclubs to the frontlines of its streets, Judah has supped with oligarchs and spent nights sleeping rough, worked on building sites and talked business with prostitutes; he's heard stories of heart-breaking failure, but also witnessed extraordinary acts of compassion. … *This is London* explodes fossilized myths and offers a portrait of what it's like to live, work, fall in love, raise children, grow old and die in London now.'


Just back from a visit to this most engaging of cities, I instantly connect with these words. I've met an Albanian cleaner, a Bolivian waiter, and seen the work of a Lithuanian house painter. Whichever way you turn, you see its rainbow-coloured hues. At Thai Taste restaurant in Kensington, a young man from Rwanda waits our table. At the Cos showroom in Westfield mall, a charming woman from Bangladesh finds exactly the right woollens for us. And when we thank the distinctly un-white young man at the checkout for the friendly service, he smiles and speaks proudly of their multicultural profile. In M&S we bump into 'Divya' who checks her stocklist to answer

I've come to London to fiddle and beg. They told me these were the richest streets in the whole world.

**A Romanian in London**



our queries regarding the availability of a certain style of jacket; we discover that she has lived in Nungambakkam, Chennai! And in a neighbourhood shop where we go to get colour printouts of documents for the return travel, we meet two helpful brothers of Pakistani origin who patiently attend to all our technologically-challenged needs. Everywhere you are made aware that population of London is no longer 'English-Vinglish', and statistics reinforce this perception.




However, that's just one flavour emanating from this salad bowl. Judah's stories are not about those who have assimilated or become true-blue Londoners. It's about those on or outside the fringes of society, both economically and socially. It's a narrative the author conveys in direct but compelling prose, often in the lingo of his subjects. Sometimes it seems overstated, but we know that in life, we actually never know.

The best way to listen to these stories, then, is by accepting that they need to be told repeatedly. Take the Romanian outside Lanesborough Hotel, for instance, fiddling scratchily on a violin, confessing, 'I've come to London to fiddle and beg'. The crops in his northern Romanian village had sold for nothing, his fridge was empty, his children were weeping and the loan sharks didn't care for him. 'They told me these were the richest streets in the whole world,' he tells Judah. 'You'll never get anything about what it is to be a beggar until you've slept on the streets.' And that's exactly what the author sets out to do in order to understand migrant lives from the inside out.

Blake Morrison points out in a review in *The Guardian*: 'Some of what he uncovers makes for dispiriting reading: the fierceness with which each ethnic group sticks to its own enclave; the drug wars and protection rackets; the speed at which the inner city is being socially cleansed and "old immigrant London" pushed out to the fringes. But the book is reportage, not a moral tract; Judah wants to tell it like it is, with I-am-a-webcam neutrality, not preach or harangue. He hears things being said and, even if they are paranoid or semi-literate, faithfully sets them down: "Look what's happening in London, mate … Zone 1's being sold to the Russians and Zone 2's being bought by the poshos." "You know what shock me about the London. That you on your own. People not friendly … Some bad men come and mug you … and they will walk right past you." "You want the same fucking Mo Farah* wonder story … well, let me tell you what, you're ain't gonna find it." (*Mohamed Muktar Jama Farah is a Somali-born long distance runner, and Britain's most successful track athlete in modern Olympics history.)

Judah seems to have a knack for getting people to share their stories: the policeman of Nigerian origin who like countless others slipped into England seeking a better life which translated into doing odd jobs in restaurants, cleaning trains and finally being recruited into the police force. Or Moses whose life as a teenager was ruled by drugs and trafficking, or the Filipina housemaid or the imam… Margarita, a cleaner from Poland, who boasts she knows everything about the homeowners. 'I know a lot. I know that the woman I am cleaning in the Clapham, she cheats, because I clean the sheets. I know the banker who I clean in Clerkenwell, he is taking the cocaine, because I find the Oyster card with the powders on the table.' We get a glimpse into the kind of work migrants do and we read about what migrants think about the British: rude, snobbish, entitled, lazy. Still, they pin their hopes on London the city and the possibility of survival government policies enable.


The best thing about the book is that Judah or Judah's voice pops up only occasionally; most of the time it's the migrants' voices you hear, their eyes you see through. It's social history writing that gets as good as it can get, though, clearly, no record of any kind of history can be entirely unbiased. Keep this in mind and there's no doubt this book with 'the stories you never hear, the people you never see' will compel you to empathise with the world it describes.

*The columnist is a children's writer and senior journalist*



# பார்வையற்ற மாணவர்களுக்கு புனேவில் ஒரு ரோட்ராக்ட் சங்கம்

கிரண் ஜெஹரா



*RAC திவ்யா ஜெப் உறுப்பினர்கள் புனே அருகில் ஒரு கோட்டையை சுற்றி பார்கின்றனர்.*

பார்வையற்றவர்களின் லட்சியங்களுக்கு வடிவம் கொடுக்கும் வகையில், அவர்களுக்காக புனேவில் பிரத்யேகமாக RAC திவ்யா ஜெப் என்ற ரோட்ராக்ட் சங்கத்தை RC புனே ஈஸ்ட் துவங்கி யுள்ளது. அதன் 26 உறுப்பினர்கள் புனேவில் உள்ள சார் பரசுராம்பாவ் கல்லூரியின் மாணவர்கள்.

ரோட்ராக்ட் உறுப்பினர்களுக்கு வேலை சார்ந்த பயிற்சி வழங்கப் படும், மேலும் அவர்கள் பட்டப்படிப்பை முடித்தவுடன், அவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்று பொருளாதார ரீதியாக தங்களை ஆதரித்து கொள்ள முடியும்'' என்கிறார் RC புனே ஈஸ்ட் தலைவர் வினய் பாட்டீல். பார்வையற்றவர்கள் பல சமூக இடையூறுகளை எதிர்கொள்கின்றனர் என்றும் பெரும்பாலான பணியிடங்கள் அவர்களுக்கு ஏற்றவாறு இல்லை என்றும் அவர் கூறினார்.

RAC திவ்யா ஜெப்பின் தலைவரான சம்ருத்தி பல்வாங்கர், ஒரு கவிஞர், எழுத்தாளர் மற்றும் விவாத பேச்சாளர் ஆவார். தனது கல்லூரியின் இரண்டாம் ஆண்டு படிப்பில் மொழி மற்றும் கலை துறையில் 88 சதவீத மதிப்பெண்கள் பெற்றவர். பிறப்பிலேயே பெருமூளை வாதம் கொண்டவரான அவர் தனது உடலின் இடது பக்கம் ஆற்றல் செயலிழந்தவர். "ஆனால் அது என்னை வரையறுக்கவில்லை அல்லது ஜெர்மனிக்குச் சென்று சமஸ்கிருத ஆசிரியராக வேண்டும் என்ற எனது கனவுக்கு தடையாக இருக்க போவதில்லை,'' என்று அவர் நம்பிக்கையுடன் கூறுகிறார். தனது ரோட்ராக்ட் பயணத்தைப் பற்றி உற்சாகமாக இருக்கிறார். மேலும் "புதிய நபர்களைச் சந்திப்பதற்கும், அர்த்தமுள்ள செயல்களில் பங்கேற்பதற்கும், ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்க எனக்கு உதவும் புதிய திறன்களைக் கற்றுக் கொள்வதற்கும் ஆவலுடன் காத்திருக் கிறேன்.'' என்று கூறினார்.

நவம்பர் 2021 இல் அறிமுக விழாவின் போது, ரோட்ராக்ட் உறுப்பினர்களுக்கு ஆதரவளித்த ரோட்டரி சங்கம் வெள்ளை ஊன்றுகோல்களை வழங்கியது. "இது ஒரு அர்த்தமுள்ள பரிசு'' என்று சங்கத்தின் செயலாளரான Rtr யுவராஜ் தால்வே கூறினார்.



RID 3131 DG *பங்கஜ் ஷா* RAC *திவ்யா ஜெப் தலைவர் சம்ருத்தி பல்வாங்கர் அவர்களிடம் சங்க பட்டயத்தை வழங்குகிறார்.*

இந்தக் கல்லூரியின் பார்வையற்ற மற்றும் உடல் ஊனமுற்ற மாணவர் களுக்கு பரீட்சைகளை எழுத உதவும் நபர்களை ஏற்பாடு செய்யும் குழுவின் பெயரே புதிய ரோட்ராக்ட் சங்கத்திற்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த குழு வளாகத்தில் ஒரு நூலகத்தைத் தொடங்கியுள்ளது, அங்கு பார்வையற்ற மாணவர்களுக்கு தன்னார்வலர்கள் புத்தகங்களைப் வாசிக்கின்றனர். மேலும் அவர்கள் நூலக கணினிகளில் நிறுவப்பட்ட வாசிப்பு மற்றும் கேட்கும் மென் பொருளைப் பயன்படுத்தலாம் அல்லது பிரெய்ல் மூலம் புத்தகங் களைப் படிக்கலாம். ஊனமுற்ற மாணவர்களுக்கு கல்லூரியில் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்க சமமான வாய்ப்பை வழங்க விரும்புகிறோம். இச்செயலின் நோக்கம் பரிதாபமோ அனுதாபமோ அல்ல, அவர்களை சமமாக நடத்துவது, தனிப்பட்ட அளவில் அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வது மற்றும் சில சமயங்களில் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்வது என்கிறார் குழுவின் நிறுவனர் மற்றும் கலைத் துறையை பேராசிரியர் யோகிதா காலே. அவர் புதிய ரோட்ராக்ட் சங்கத்தின் வழிகாட்டியாகவும் திகழ்கிறார்.

திவ்யா ஜெப் குழு அதன் உறுப்பினர்களுக்காக புனேவைச் சுற்றியுள்ள பல்வேறு கோட்டைகளுக்கு பயணங்கள் மற்றும் மலையேற்றங்களை ஏற்பாடு செய்கிறது. அவர்கள் ஏறுவது கடினமா? ஆம், ஆனால் அவர்கள் தங்கள் வரலாற்றுப் பாடங்களை, குறிப்பாக சத்ரபதி சிவாஜி மகாராஜா பற்றிய கதைகளில் வருவதை நேரில் அனுபவிக்க விரும்புகிறார்கள். அவர்கள் அங்கே பெரிய கதவுகளைத் தொட்டு, மேற்பரப்பை உணர்ந்து, கோட்டையின் தரையில் படுத்து, அறை எவ்வளவு பெரியது என்பதை அறிய விரும்புகிறார்கள், என்று அவர் கூறுகிறார். சில நேரங்களில் குழு வழிகாட்டி மீண்டும் கோட்டையில் கதைகளை விவரிக்கிறார், அதை அவர்கள் மிகவும் விரும்புகிறார்கள். இச்சிறப்பு ரோட்டராக்ட் உறுப்பினர்கள் நடனத்தில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற பல்வேறு சமூக பிரச்சனைகளை மையமாக கொண்டு தெரு நாடகங்களை நடத்துகிறார்கள். "RC புனே ஈஸ்ட் உதவியுடன், எங்கள் மாணவர்கள் மென்மேலும் சாதிக்க முடியும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்'' என்று யோகிதா கூறுகிறார்.■

# பசுமை ஆடைக்கு மாற வேண்டிய தருணம் இது

ப்ரீதி மேஹரா

சுற்றுச்சூழல் பாதுகாப்பை பொருத்தவரை என்ன ஆடை அணிய வேண்டுமோ அதையே நாம் அணிந்துகொள்ள வேண்டும். உலகில் செல்வாக்கு மிகுந்தவர்கள் நீங்கள் என்ன அணிய வேண்டும், எதை அணியக்கூடாது-எதை அடிக்கடி வாங்க வேண்டும் என்று வலியுறுத்து கிறார்கள். ஃபாஸ்ட் பேஷன் என்பது ஸ்மார்ட்டாக இருப்பதற்கான மந்திரமாக இருக்கலாம். ஆனால், சுற்றுச்சூழலுக்கு அது மரண அடி போன்றது.

இது இவ்வாறு இருக்கும் நிலையில், ஜவுளித் தொழில் உலகளாவிய கார்பன் உமிழ்வில் 10 சதவீத பங்களிப்பைச் செய்கிறது. இது அனைத்து சர்வதேச விமானப் போக்குவரத்து மற்றும் கடல் வழி கப்பல் போக்குவரத்து வெளியிடுவதை விட அதிகமானதாகும். எனவே பாதிப்பை குறைக்க நாம் என்ன செய்யலாம்? ஆனால், அதற்காக ஆடைகளுக்கு “குட் பை” சொல்ல வேண்டியதில்லை. என்ன ஆடை அணிய வேண்டும் என்பதை நாமே தேர்ந்தெடுக்கலாம். நமது அலமாரியில் எத்தனை ஆடைகள் இருக்கலாம் என்பதை நாமே தீர்மானிக்கலாம்.

சமீபகாலங்களாக பேஷன் என்ற பெயரில் மலிவான விலையில் ஆடைகள் பெருமளவில் தயாரிக்கப் பட்டு சில்லறை விற்பனைக்கு வருகின்றன. இந்த ஆடை ரகங்கள் நிமிடத்துக்கு நிமிடம் மாறுபட்டு இருக்கும். உலக அளவில் ஆடைகள் குவிந்து கிடப்பதற்கு காரணம் இவர்கள்தான். கடந்த 20 ஆண்டுகளில் ஆடைகள் உற்பத்தி ஏறக்குறைய இரண்டு மடங்குக்கு மேலாக அதிகரித்து விட்டது. அதாவது ஆண்டுக்கு 100 பில்லியன் வகை ஆடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், இவற்றில் 85 சதவீதம் குப்பைத் தொட்டிக்குத்தான் செல்கின்றன. ஏனெனில் இவை விலை குறைந்தவை, தர வேறுபாடு உள்ளவை மற்றும் நீண்டநாள் உழைக்காதவை. இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு நொடியும் லாரி நிறைய துணிகள் குப்பைகளாக கொட்டப்படுகின்ற



அல்லது எரிக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழலில் ஆர்வம் உள்ள குடிமகன் என்ற முறையில் நாமும் நமது குழந்தைகளும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஆன்லைன் மூலம் ஆடைகள் ஆர்டர் செய்வதற்கு ஒரு கட்டுப்பாட்டை வகுத்துக் கொள்ள வேண்டும். கடந்த 15 ஆண்டுகளில் ஒரு ஆடையை அணிவது 36 சதவீதம் குறைந்துவிட்டதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலானவர்கள் பேஷன் மாறிவிட்டது என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள். மேலும் இதன் மூலம் வேலைவாய்ப்பு உருவாகிறது, ஜவுளி ஊழியர்களுக்கு உதவ முடிகிறது. நுகர்வோர் பல தரப்பட்ட ஆடைகளை வாங்க வாய்ப்பு கிடைக்கிறது, ஜவுளிப் பொருளாதாரம் வலுப்பெற உதவுகிறது என்றெல்லாம் கூறுகின்றனர். பல நிறுவனங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு துணிகளை அல்லது ஆடைகளை பேக் செய்து அனுப்புவதாகக் கூறுகின்றன. ஆனால், இந்த வாதங்கள் போதுமானதல்ல.

உதாரணமாக, நுகர்வோர் ஒருவர் ஒரு ஆடையை விலைகொடுத்து வாங்கினாலும் அதில் ஒரு சிறிய பகுதி தான் ஜவுளித்துறை ஊழியர்களைச் சென்றடைகிறது என்பது நம் அனைவருக்கும் தெரியும். பல ஜவுளி நிறுவனங்களில் பிராவிடண்ட் நிதி, பணிக்கொடை அல்லது உடல்நலன் பேணுவதற்கான ஈட்டுத் தொகை போன்ற பணப்பலன்கள் கிடையாது. ஜவுளி நிறுவனங்களில் 90 சதவீதம் பெண்கள்தான் பணிபுரிகின்றனர். அவர்களில் பலர் வறுமையில் தான் வாழ்கிறார்கள். பேஷன் தொழில்களில் பேன்ஸியான பிராண்டுகள் எனக் கூறி கோடிக்கணக்கில் லாபம் பார்க்கின்றனர். ஆனால், உற்பத்தி மற்றும் வர்த்தக நடைமுறைகளில் விதிமுறைகளைச் சரிவர பின்பற்றுவதில்லை.

ஆடைகளில் புதுப்புது பேஷன்கள் உருவாவதால் நுகர்வோர் விருப்பப்படி ஆடைகளை தேர்வு செய்யலாம் என்றாலும், அதே முடிவுகளை எட்டுவதற்கு வேறு வழிகள் உள்ளன. ஒரு சில நகரங்களில் ஆடைகளை வாடகைக்கு தரும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. திருமணம், விழாக்கள், பொது நிகழ்வுகளுக்குச் செல்வதற்கு நாம் இங்கு துணிகளை வாடகைக்கு எடுத்து அணிந்தாலே போதுமானது.

மூன்றாவது வாதம் என்னவெனில் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையிலான பேக்கிங். இது பொருளைத் தயாரிக்கும் எந்த ஒரு நிறுவனமும் செய்யக்கூடியது. ஆனால், நிலையான பேஷன் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. இச்சூழலில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் ஒரு பச்சை நிற பேக்கில் எந்தவித சூழலுக்கும் பொருந்தாத ஆடைகள் இருக்கலாம்.

அப்படியானால், நாம் ஆதரிக்க வேண்டிய மற்றும் தேர்வு செய்ய வேண்டிய நிலைத்தன்மையான பேஷன் என்றால் என்ன? இது விதையிலிருந்து தொடங்குகிறது. பருத்தி விளைச்சல் மற்றும் அது துணியாக நெய்யப்படுவது குறித்தது. கம்பளிக்காக வெட்டப்படும் ரோமங்களால் விலங்குகளுக்கு ஏற்படும் செலவுகள், ஊழியர்களுக்கு வழங்கப்படும் கூலிகள் ஆகியவை இதில் அடங்கும். உலகம் முழுவதும் ஜவுளித் தொழிலில் குறைந்த கூலிக்கு அதிக நேரம் உழைக்கும் தொழிலாளர்கள் வேலை செய்வதை நாம் பார்க்கிறோம். இவையும் ஆடைகள் நிலைத்தன்மை இல்லாததாக ஆக்குகின்றன.

உதாரணமா, நீங்கள் அடிக்கடி டி-ஷர்ட் மற்றும் ஜீன்ஸ் பேண்ட் அணிவீர்கள். டி ஷர்ட்டை உருவாக்க 2,700 லிட்டர் தண்ணீரும், ஒரு ஜோடி ஜீன்ஸ் பேண்ட் தயாரிக்க 7,571 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் சொல்லப்போனால் பேஷன் தொழிலில் மட்டும் உலக கழிவுநீரில் 20 சதவீதம் உற்பத்தியாகிறது. துணிகளை துவைப்பதால் மட்டும் ஆண்டுக்கு 5 லட்சம் டன்கள் மைக்ரோ ஃபைபர்கள் கடலில் கலக்கின்றன. எதிர்கால வளர்ச்சி பற்றிய முன்கணிப்பு இது தான்: இதை கவனிக்காமல் விட்டுவிட்டால் 2050ல் பேஷன் தொழில்கள் உலகில் கார்பன் பட்ஜெட்டில் கால் பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளும்.

விவேகமுள்ள நுகர்வோர் இப்போது ஆர்கானிக் (இயற்கையான) பருத்தி ஆடைகளை நோக்கி நகர்கின்றனர். இந்த ஆலைகள் 91 சதவீதம் குறைவான தண்ணீரையே பயன்படுத்துகின்றன. இதன் மூலம் 45 சதவீத கார்பன் டை ஆக்ஸைடு (கரியமில வாயு) வெளிப்பாடு குறைகிறது. மேலும் அதன் வளர்ச்சியில் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படுவதில்லை. இயற்கையான பருத்தி என்பது மிகவும் விலை உயர்ந்தது. மலிவான ஆடைகள் தேவைப்படுபவர்களை ஈர்க்காது. விரைவில் தூக்கி எறியும் விலை குறைந்த ஆடைகளை விட, நீடித்து உழைக்கும் தரமான ஆடைகள் சில இருந்தாலே போதுமானது என்பதுதான் பச்சை ஆடைகள் குறித்த வாதம்.

ஆன்லைன் மூலம் அல்லது பிராண்டட் ஸ்டோர்கள் மூலம் புதுமையான ஆடைகளை வாங்கி உங்கள் அலமாரிகளை எப்படி பசுமையாக்கலாம் என்பது பற்றி அடுத்து விரிவாக பார்க்கலாம். உங்களுக்கு சில குறிப்புகள்:

புவி வெப்பமடைதலின் தாக்கத்தை குறைக்க உதவும் காலநிலை நடவடிக்கைக்கான 2018 பேஷன் தொழில் சாசனத்தில் கையெழுத்திட்டுள்ள பிராண்டுகளைத் தேர்ந்தெடுங்கள். அடிடாஸ், டெக்காத்லான், GAP, இன்கார்ப், H&M, K-Mart, லெவிஸ்டிராஸ், நைக், Otto, Puma உள்ளிட்ட பிரபல பிராண்டுகள் இதில் கையெழுத்திட்டுள்ளது உங்களுக்கு மகிழ்ச்சியான செய்தி. சில சிறிய ஆனால், நேர்மையாகச் செயல்படும் நிறுவனங்களும் ஆர்கானிக் பொருள்களைப் பயன்படுத்துகின்றன. நிலையான, நேர்மையான நடைமுறைகளைப் பின்பற்றி நல்ல மனசாட்சியுள்ள நுகர்வோர்களுக்காக காத்திருக்கின்றன.

நல்ல தரமான ஆடைகளை வழங்கும் நிலையான பிராண்டுகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், பழையனவற்றை மறுசுழற்சிக்கு எடுத்துக் கொள்வதன் மூலம் மறுசூழற்சி செய்யப்பட்ட பொருள்களிலிருந்து தயாரிப்பதன் மூலம் கார்பன் உமிழ்வின் அளவை குறைக்க முடியும். கழிவுகளைக் குறைப்பதன் மூலம் உங்கள் பணத்தையும் சேமிக்க முடியும்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# Star Performers (Membership and

| Membership Awards | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| Highest Membership Growth | Rajesh Agarwal (RID 3054) | S Muthu Palaniappan (RID 3232) |
| Highest Membership Growth % | Gajendra Singh Narang (RID 3040) | S Muthu Palaniappan (RID 3232) |
| Highest Women Membership Growth | Rajesh Agarwal (RID 3054) | PNB Murugadoss (RID 3212) |
| Highest Number of New Rotaract Clubs Installed | Ramesh Bajaj (RID 3080) | S Muthu Palaniappan (RID 3232) |
| Highest Existing Membership Retention Growth % | Harish Kumar Gaur (RID 3053) | Ajith Weerasinghe (RID 3220) |




**Clockwise from above:** RI President Shekhar Mehta honours RID 3190 PDG Nagendra Prasad for membership growth. Also seen (from L) RC Gurjeet Singh Sekhon, PRID Bharat Pandya, PDG Ravi Dhotre, DG Fazal Mahmood, PDG Sameer Hariani and DGE Jeetendra Aneja. ● PRID Pandya and Madhavi felicitate IPDG Shabbir Shakir and his wife Jumana in the presence of PDGs Rajiv Sharma, Sangram Singh Bhonsle, Kishor Kedia, Anirudha Roy Chowdhury, Dr K Sunder Rajan and Mahesh Mokalkar. ● PRID Pandya and Madhavi present an award to IPDG Dr Hari Krishnan Nambiar and his wife Dr Smitha in the presence of RPIC V G Nayanar. ● RI President Mehta presents an award to PDG Ramesh Bajaj and Rekha in the presence of RID A S Venkatesh (R). ● IPDG Sudip Mukherjee receives an award from RI President Mehta in the presence of PDG Pradeep Mukherjee (R). ● and PRID Pandya gives a public image award to IPDG B Rajarama Bhat and his wife Varadhamba in the presence of Madhavi Pandya, Usha and PDG B N Ramesh.





# Public Image) — Zones 4, 5, 6 and 7

| Membership Awards | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| Highest Membership Growth | Rajib Pokhrel (RID 3292) | Nagendra B L Prasad (RID 3190) |
| Highest Membership Growth % | Rajib Pokhrel (RID 3292) | Nagendra B L Prasad (RID 3190) |
| Highest Women Membership Growth | Rajib Pokhrel (RID 3292) | Nagendra B L Prasad (RID 3190) |
| Highest Number of New Rotaract Clubs Installed | Sudip Mukherjee (RID 3291) | N V Hanmanth Reddy (RID 3150) |
| Highest Existing Membership Retention Growth % | Karunesh Srivastava (RID 3120) | N V Hanmanth Reddy (RID 3150) |

| PI Awards | Zone - 4 | Zone - 5 | Zone - 6 | Zone - 7 |
|---|---|---|---|---|
| Social Media | Gajendra Singh Narang (RID 3040) | Jose Chacko Madhavaserry (RID 3201) | Subhasish Chatterjee (RID 3240) | B L Nagendra Prasad (RID 3190) |
| Print Media | C A Davinder Singh (RID 3070) | Harikrishnan Nambiar (RID 3202) | Rajib Pokhrel (RID 3292) | Sangram Patil (RID 3170) |
| Audio/Visual | C A Davinder Singh (RID 3070) | K S Venkatesan (RID 2982) | Karunesh Kumar Srivastava (RID 3120) | Rashmi Kulkarni (RID 3131) |
| Special Event for PI | Prashant Jani | R Balaji Babu (RID 2981) | Rajan Gandotra (RID 3250) | |
| Overall activities | C A Davinder Singh (RID 3070) | R Balaji Babu (RID 2981) | Shabbir Shakir (RID 3030) | B Rajaram Bhat (RID 3182) |








## RC கும்பகோணம் சக்தி — RID 2981



அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்குச் சீருடைகள் வழங்கப் பட்டன.

## RC ஃபரீதாபாத் சன்ஸ்க்ருதி — RID 3011

ஃபரீதாபாதைத் தூய்மையாக, பசுமையாக ஆக்கக் கையொப்ப இயக்கம் ஒன்று தொடங்கப் பட்டது, உறுப்பினர்கள் தூய்மை உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள்.




## RC ஓசூர் — RID 2982




மதகொண்டப்பள்ளி கிராமத்தில் உள்ள இந்திரா காந்தி இல்லத்தில் உள்ள 100 பெண் குழந்தைகளுக்குப் புதிய ஆடைகள் வழங்கப்பட்டன.

## RC குன்ட்லி — RID 3012

மேக்ஸ் ஹைட் சொசைட்டியில், இந்தியப் புற்றுநோய்க் கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் சுமார் 100 பேருக்குப் புற்றுநோய்ப் பரிசோதனை நடத்தப் பட்டது. புற்றுநோயாளி ஒருவரை சங்கம் தத்தெடுத்துக்கொண்டது.



## RC மன்னார்குடி மிட்-டவுன் — RID 3000



திருமனெ ஏரிப்பகுதியில் உள்ள UOT பள்ளியில் குழந்தைகள் நாள் கொண்டாடப் பட்டது, மாணவர்கள் பல்சுவை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினார்கள்.

## RC மாலேகாவ்ன் ஃபோர்ட் — RID 3030

அம்ராவதியில் நடைபெற்ற மாவட்டக் கருத்தரங்கில் RI தலைவர் சேகர் மேத்தாவை இந்தச் சங்கத்தின் தலைவர் டாக்டர் அருண் பதாடெ பெருமைப் படுத்தினார்.



# செய்திகள்

## RC மஹேம்தாபாத் — RID 3060



யஷ் நோயியல் ஆய்வகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட ஒரு வார மருத்துவ முகாமில், திட்டத் தலைவர் டாக்டர் ஷைலேஷ் படேல், துணைத் தலைவர் டாக்டர் நிகுஞ் படேல் 240க்கும் மேற்பட்ட மக்களைப் பரிசோதித்தார்கள்.

## RC ஆக்ரா — RID 3110



நேரு நகர் பூங்காவில் 100க்கும் மேற் பட்ட மக்கள் சர்க்கரை நோய் பரிசோதனை செய்து கொண்டார்கள், டாக்டர் தருண் சிங்கால் நீரிழிவுபற்றிப் பேசினார்.

## RC ஃபகுவாரா மிட்-டவுன் — RID 3070



ஃபகுவாரா ரயில் நிலையத்தில் ஆதரவற்றோர், முதியவர் களுக்கு போர்வைகள் வழங்கப்பட்டன.

## ரோட்டரி E கிளப் புணே டயமன்ட் — RID 3131



RC புணே திலக் ரோட், சின்சன் மருந்து நிறுவனத்துடன் இணைந்து காந்திநகர், யெரவாடா-வில் நடத்திய நீரிழிவு முகாமில் 80 நோயாளிகள் பலன் பெற்றார்கள்.

## RI மாவட்டம் 3090



பட்டியாலாவில் உள்ள ஆத்மராம் குமார் சபா பள்ளி, சகுந்தலா பெண்கள் பள்ளி மாணவர்களுக்கு வீணான தாள்களில் இருந்து செய்த பென்சில்கள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தை AG ராஜீவ் கோயல் நடத்தினார்.

## RC அகமத்நகர் பிரியதர்ஷினி — RID 3132



இந்தச் சங்கம் பெல்பந்தாரி கிராமத்தில் உள்ள அங்கன்வாடி ஒன்றைப் புதுப் பித்தது. DG ஓம்பிரகாஷ் மோடிபாவாலெ, மாவட்ட எழுத் தறிவுத் தலைவர் சஞ்சய் குலெ-யும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

## RC பாம்பே சீ ஃபேஸ் — RID 3141



பல்கர் மாவட்டத்தில் உள்ள ஜனா கிராமத்தில் உள்ள 300 குழந்தைகள், ஆசிரியர்கள், பொது மக்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன. கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு கணினி ஆய்வகம் தொடங்கப்பட்டது.

## RC ஹூப்ளி ஈஸ்ட் — RID 3170



பெங்கேரி ரோட்டரி பள்ளியில் உள்ள 39 இன்டராக் டர்களுக்காக, ஹுப்பள்ளியில் உள்ள ஷுஷ்ருதா மருத்து வமனையில் பல் மருத்துவ முகாம் நடைபெற்றது.

## RC பத்லாபூர் இன்டஸ்ட்ரியல் ஏரியா — RID 3142



பாரத் கல்லூரியில், ரோட்டராக்டர்கள் ஆதரவுடன் நடைபெற்ற தலசீமியா விழிப்புணர்வு, பரிசோதனை முகாமில் சுமார் 120 மாணவர்கள் பலன் பெற்றார்கள்.

## RC ஷிமோகா — RID 3182



ஷிமோகா-வில் உள்ள வீணா சாரதா உயர்நிலைப் பள்ளி மாணவி களுக்குச் சீருடைகள் வழங்கப் பட்டன. சங்கத் தலைவரும் பிற உறுப்பினர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

## RC நெல்லூர் — RID 3160



நெல்லூர் மாவட்டத்தின் இண்டு குருபெடா மண்டலில் சில கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக் குச் சேலைகள் வழங்கப் பட்டன.

## RC அத்திபெளே சர்ஜாபுரா — RID 3190

இளம்பிள்ளைவாதத்தை உலகிலிருந்து நீக்குவதற்காக ரோட்டரி எடுத்த முயற்சிகளை பற்றி ஒரு மிகப் பெரிய அறிவிப்புப் பலகை மாநிலங்களுக்கு இடையிலான எல்லையில் சங்கம் நிறுவியுள்ளது.



# செய்திகள்

## RC சத்தி — RID 3203



இளம்பிள்ளைவாதத்தை உலகிலிருந்து நீக்குவதற்கான ரோட்டரியின் முயற்சி களைப் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி சங்கம் நடத்தியது. சங்கத் தலைவர் கந்தவேல் Polio Fundயிற்கு ரூ.1 லட்சம் கொடையளித்தார்.

## RC சென்னை கேலக்ஸி — RID 3232



இந்தச் சங்கம் இந்தியாமுழுவதற்கும் நடத்திய இணைய வழி விநாடி வினாவில் சுமார் 3,000 மாணவர்கள் பங்கேற்றார்கள், இதில் தில்லி பொதுப் பள்ளியைச் சேர்ந்த ராகவ் சிங் வெற்றிபெற்றார்.

## RC சிவகாசி கிரீன்ஸ் — RID 3212



AAA பன்னாட்டுப் பள்ளி, லீ தற்காப்புக் கலைகள் விளையாட்டுக் கழகம் உடன் இணைந்து மாநில அளவிலான சிலம்பப் போட்டி ஒன்று நடைபெற்றது.

## RC ஜக்தால்பூர் — RID 3261



கண் தானம்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக இச்சங்கம் ஒரு வாக்கத்தான் நடை நிகழ்ச்சியை நடத்தியது. இதில் பங்கேற்றோர் கண்களைக் கட்டிக் கொண்டு நடந்தார்கள்.

## RC வேலூர் நார்த் — RID 3231



காட்பாடியில் உள்ள கைரிகிரியில் உள்ள SIH-R மற்றும் LC மருத்துவ மனையில் சக்கர நாற்காலிகள் கொடையளிக் கப்பட்டன.

## RC கல்கத்தா என்டெவர் — RID 3291



RC கல்கத்தா, மெடிகா சிறப்பு மருத்துவ மனையுடன் இணைந்து ரோட் டரியன்கள், ரோட்டராக் டர்கள், அவர் களுடைய குடும்பத்தி னருக்குக் ரோட்டரி மெடிகா அட்டைகள் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# மாசுபட்ட தில்லியில் வாழ்வதின் அதிர்ச்சி

TCA ஸ்ரீனிவாச ராகவன்

இக்கட்டுரையின் கோபமான தொனிக்காக வாசகர்களிடம் ஆரம்பத்திலேயே நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் நான் கோபமாக இருக்கிறேன் என்பதே உண்மை. 1950களின் பிற்பகுதியில் இருந்து ஆட்சியில் இருக்கும் அடுத்தடுத்த அரசாங்கங்களின் வெளிப்படையான அலட்சியப்போக்கினை உணர்ந்த வர்கள் யாவராயினும் இவ்வாறே கோபம் கொள்வர். சற்று விளக்கமாக கூறுகிறேன். என் வாழ்க்கை முழுவதும் வடஇந்தியாவில் குறிப்பாக தில்லியில் வாழ்ந்துள்ளேன். 1990களின் பிற்பகுதி வரை வானம் இங்கு நீலமாகவே காணப்பட்டது. ஆனால் அதன் பிற்பாடு ஒவ்வொரு ஆண்டுகளாக வானத்தில் பழுப்பு நிறம் கூடிக் கொண்டே சென்றது. வான்வழியாக தில்லிக்கு வரும் போது, விமானம் 20 ஆயிரம் அடியில் இறங்கும்போதே காற்று பழுப்பு நிறத்தில் புழுதியும் மற்ற துகள்களும் கலந்து காணபடுகிறது. மென்மேலும் கீழே செல்ல தரை மங்கலாகவே காட்சியாளிகிறது. அதுவே 5 ஆயிரம் அடி அடையும் போது முற்றிலும் மறைந்துவிடுகிறது. இத்தகைய இழிவான காற்றையே நாம் ஒவ்வொரு நாளும் சுவாசிக்கின்றோம். சுத்தமான காற்றை சுவாசிப்பது என்னவென்றே என்பதை மறந்துவிட்ட நமக்கு மீண்டும் நினைவுபடுத்தியது ஏப்ரல் 2020-ன் முடக்கம்.

திடீரென டெல்லி மற்றும் NCR பகுதி மேலே வானம் முன்பை போல சுத்தமாகவும் நீலமாகவும் மாறியது. அக்டோபர் மற்றும் நவம்பர் 2020 தண்டு எரித்தல் நடந்து முடிந்த பிறகும் காற்று சுத்தமாகவும் நீலமாகவுமே இருந்தது. பின்பு படிப்படியாக முடக்கம் விடுவிக்கப்பட பழுப்பு புகைமூட்டம் மீண்டும் வரத்தொடங்கியது. இந்த ஏப்ரலில் மாசுபாடு முந்தய நிலைமைக்கு மீண்டும் சென்றது. அதிலிருந்து நிலை மாறாமல் அப்படியே உள்ளது.

NCR பகுதியின் இழிவான காற்றுக்கு வாகனப் போக்குவரத்து முக்கியமான காரணம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. நம் நுரையீரலை பாதிக்கும் துகளான PMஐ 2.5யின் காற்று தர குறியீடு 325 கீழ் செல்வது மிகவும் அரிதானது. வழக்கமாக அது 350க்கும் 400க்கும் இடையே இருக்கும். மேற்கில் வாழும் மக்கள் தினமும் காலை மழை பொழியுமா என்று காண்பது போல இங்கு இருக்கும் மக்கள் காற்று எவ்வளவு மோசமாக உள்ளது என காண்கின்றனர். காற்று தர குறியீடு 350 கீழ் இருந்தால் அனைவரும் நிம்மதி அடைகின்றனர். ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தைகளும் பிறந்த திலிருந்து புகை பிடிக்கும் பழக்கம் இருப்பது போன்று நம் அனைவரின் நுரையீரலும் பழுப்பு மற்றும் கருப்பு நிறமாகவே தற்போது மாறி இருக்கும் என்பதில் எனக்கு ஒரு துளியும் சந்தேகம் இல்லை.

அம்ரிட்ஸர் முதல் லக்னோ வரை உள்ள வட இந்தியா தற்போது ஒரு விஷவாயு அறை போன்று மாறிவிட்டது என்பதே உண்மை. கிட்டத்தட்ட 30 கோடி மக்கள் (அமெரிக்காவின் மொத்த ஜனத்தொகை) இங்கு வசித்து இந்தக் காற்றை சுவாசிக்கின்றனர். இதில் மிகச் சோகமான விஷயம் என்னவெனில் கொரோனா பெருந்தொற்றுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்த நமக்கு வருடத்தில் 12 மாதமும் இங்கு வாழும் அனைவரையும் பாதிக்கும் வாகன போக்குவரத்து மாசை கட்டுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே நிதர்சன உண்மை.

வைரஸ் பரப்பிய நோய்தொற்று போலில்லாமல் இந்த மாசுபாடு மென்மேலும் மோசமாகும் ஏனெனில் அரசாங்கம் தான் செய்யவேண்டிய சுலபமான செயலை செய்ய மறுப்பதே. அது என்னவெனில் அரசாங்க அலுவலகங்களை மற்ற நகரங்களுக்கு மாற்றுவதே. ஆனால் அதற்கு பதிலாக மேலும் பல அலுவலகங்களை தில்லியில் அமைத்துக் கொண்டே இருக்கின்றது அரசாங்கம். வாகன நெருக்கடி, அலுவலகம் மற்றும் வியாபார குவிப்பு, தேவையில்லாத கட்டுமானம் ஆகியவற்றால் பயிர் தண்டு எரித்தலால் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் 45 நாட்கள் மட்டுமே உண்டாகும் மாசு போன்ற நிலை வருடத்தில் 365 நாட்களும் நிலவுகின்றது

2011ல் தில்லியின் மொத்த ஜனத்தொகை 1.6 கோடியாக இருந்தது. அதுவே இன்று 2020ல் 2 கோடியாக அதிகரித்துள்ளது. NCR பகுதியில் இருந்து வாகனங்களை ஓட்டி வரும் மக்களைக் கணக்கில் எடுத்தால் அந்த ஜனத்தொகை 3 கோடியாகும். தில்லியில் மட்டும் சுமார் ஒரு கோடி வாகனங்கள் ஓடுகின்றன. அதனுடன் NCR பகுதியில் இருந்து வரும் 20 லட்சம் வாகனங்களும் மற்றும் 2 லட்சம் கனரக லாரிகளும் இங்கு ஓடுகின்றன. இது அனைத்தையும் சேர்த்து கணக்கெடுக்கும் போது இந்த மாசுபாட்டு பிரச்சனையின் அதித அளவு நமக்கு புரிகிறது.

**இதற்கான தீர்வு என்ன:** அடுத்த 10 ஆண்டுகளில் உள்ளாட்சி துறை பாதுகாப்புத்துறை வெளியுறவுத் துறை இதனை தவிர்த்து மற்ற துறைகளை NCR பகுதியிலிருந்து சிறிய ஜனத்தொகை கொண்ட மற்ற நகரங்களுக்கு மாற்ற வேண்டும். அந்த நகரங்களின் வசதிகள் விரிவடையும் மற்றும் NCR பகுதியின் மாசுபாடும் குறையும்.■

# செய்தித் துளிகள்




### அமெரிக்க நாணயத்தில் மாயா ஏஞ்சலோ

*கவிஞர், எழுத்தாளர் மற்றும் சமுதாய ஆர்வலர் மாயா ஏஞ்சலோ அமெரிக்காவின் கால் டாலர் நாணயத்தில் தோன்றும் முதல் கறுப்பினப் பெண்மணி ஆனார். அமெரிக்காவின் பிரசித்தமான பெண்கள் சிலரை கௌரவிக்கும் வகையாக அமெரிக்க வுமன் கோர்டேர்ஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக அவர் உருவம் பதித்த நாணயத்தை அமெரிக்க நாணய அச்சகம் வெளியிட்டுள்ளது. எமிலி டாம்ஸ்ட்ரா எனும் கலைஞர் ஏஞ்சலோவின் நினைவுக் குறிப்பான ஐ நோ ஒய் தி கேஜ்டு பேர்ட் சிங்ஸ்* (1969) *இருந்து ஒரு குறிப்பைப் பயன்படுத்தி அந்நாணயத்தை வடிவமைத்துள்ளார்.*




### வாலஸ் நகரத்தில் 'சேகர் மேத்தா தினம்'

*ஜனவரி* 11, 2022 *அன்று அமெரிக்க நகரமான வாலஸ் (வடக்கு கரோலினா),* RID 7730*வில்* RI *தலைவர் சேகர் மேத்தா ஒரு நிகழ்ச்சியில் உரை யாற்றியப் பின் அந்நகர மேயர் ஜாசன் வெல்ஸ் அந்த நாளை 'சேகர் மேத்தா தினம்' என்று அறிவித்தார்.* RI *தலைவர் மேத்தா அவருக்கு நன்றி தெரிவித்தார்.*



### PDG தீபக் ஷிகர்பூர் மகாராஷ்டிரா அரசால் கௌரவிக்கப்பட்டார்

*மகாராஷ்டிரா மாநிலத்தில் மென்பொருள் துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக* PDG *தீபக் ஷிகர்பூரை மாநில ஆளுநர் பகத் சிங் கோஷ்யாரி கௌரவித்தார். கடந்த இரண்டு ஆண்டுகளில், அவரது தொழில்-ஆலோசனை இணையதளம்* (www.itcareer-counselling.com) *நூற்றுக்கணக்கான ஆர்வம் கொண்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்தவும், பிரகாசமான வாழ்க்கையைஅமைத்துக் கொள்ளவும் உதவியுள்ளது. ஷிகர்பூர் தகவல் தொழில்நுட்ப துறையில்* 43 *புத்தகங்களை எழுதியுள்ளார் மற்றும் தற்போது* RID 3131*ன் ரோட்டரி பொது உருவ ஒருங்கிணைப்பாளராக* (RPIC) *பணியாற்றுகிறார்.*




### சண்டை போட்டியில் தங்கம் வென்ற ரோட்டரி உறுப்பினர்

RC *பெங்களூர் சவுத்,* RID 3190*ஐ சேர்ந்த டாக்டர்* M *ஸ்ரீனிவாஸ், மின்ஸ்க் நகரில் நடைபெற்ற* 55*வது முத்தவர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில்* 50–59 *வயது பிரிவின் கீழ் தனிநபர் சண்டையில் தங்கப் பதக்கம் வென்றார். ஸ்ரீனிவாஸ் அவர்கள் டான் பிளாக் பெல்ட் பெற்றவர் மேலும்* 12 *ஆண்டு களாக இந்த நிகழ்விற்காக பயிற்சி செய்துள்ளார்.*




### சானிட்டரி நாப்கின் இல்லா கிராமம்

*இந்தியாவின் முன்மாதிரியான சுற்றுலா கிராமம் என்று பாராட்டப்பட்ட கேரளாவில் உள்ள கும்பலாங்கி கிராமம், நாட்டின் முதல் சானிட்டரி நாப்கின் இல்லாத கிராமமாக மாற உள்ளது. அவள்காயி (அவளுக்காக) என்ற முயற்சியின் ஒரு பகுதியான இந்த நடவடிக்கை எர்ணாகுளம்* MP *ஹிபி ஈடன் அவர்களால் செயல்படுத்தப்படும். கிராமத்தில் உள்ள* 18 *வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களுக்கு* 5,000 *க்கும் மேற்பட்ட மென்ஸ்டுறல் கப்கள் விநியோகிக்கப்படும்.*

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-2024 | issue, including cover, 84. Price: ₹40
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

# ரோட்டரி இதழுக்கு சந்தா செலுத்தாத சங்கங்கள் நீக்கப்படும்




*பல ஆண்டுகளாக ரோட்டரி சங்கங்கள் ரோட்டரி நியூஸ் இதழுக்கு சந்தா செலுத்தாமல் அல்லது நிலுவை கட்டணங்களை செலுத்தாமல் இருப்பது பிராந்திய இதழின் மேலாளர்களுக்கு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. சந்தா செலுத்தாமல் இருப்பது, ரோட்டரியின் முக்கியமானச் செய்திகளைப் பகிர்ந்து கொள்வதில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.*

*இணக்கமாக இல்லாத சங்கங்கள் பற்றி கடந்த நவம்பர் மாதம் நடந்த வாரியக் கூட்டத்தில் RI தொடர்புக் குழு விவாதித்தது. இதையடுத்து அவற்றுக்கான விதிமுறைகள் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. புதிய விதிகள்படி அத்தகைய சங்கங்கள் நீக்கப்படலாம் என்பதுதான்.*

| முந்தைய செயல்முறைகள் | புதிய செயல்முறை 2022 ஜுலை 1ல் தொடங்குகிறது |
|---|---|
| ரோட்டரி இதழ் அலுவலகம் இணக்கமாக இல்லாத சங்கங்கள் பற்றிய அறிக்கையை ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கிறது. | **இணக்கமாக இல்லாத சங்கங்கள், பணம் நிலுவை வைத்துள்ளவா அல்லது சந்தா செலுத்தவில்லையா** என்று ரோட்டரி இதழ் அலுவலகம் ரோட்டரி தலைமைக்கு விளக்கம் அளிக்க வேண்டும். காலாண்டுக்கு ஒரு முறை அறிக்கை தர வேண்டும். |
| மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்படும் கடிதங்கள் ரோட்டரி இதழ் அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளப் படும். பின்னர் அவை சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். | இதழ் அலுவலகம் கடிதத்தை சங்கங்களுக்கு அனுப்பிவைக்கும். ரோட்டரி தனி கடிதம் மூலம் மாவட்ட ஆளுநருக்கு அறிவிக்கும். |
| சங்கத்தை இணங்கவைக்க அல்லது முடியாத பட்சத்தில் இடைநீக்கம் செய்ய 120 நாள் கால அவகாசம் உள்ளது. | சங்கத்தை இணங்க வைக்க அல்லது முடியாதபட்சத்தில் இடைநீக்கம் செய்ய **90 நாள்** கால அவகாசம் மட்டுமே உள்ளது. |
| சங்கம் இணக்கமாக இல்லை என்றால் ரோட்டரி இதழ் அலுவலகம் RIக்கு அறிக்கை அளிக்கும். அதன் பின் அந்த சங்கம் இடைநீக்கம் செய்யப்படும். | **90 நாள் சலுகை காலம் முடிவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக** ஒத்துழைக்காத சங்கங்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்படும். அப்போதும் அவை ஒத்துழைக்காவிட்டால் RIக்கு அறிக்கை அனுப்பபடும். சங்கங்கள் இடைநீக்கம் செய்யப்படும். |
| செயல்முறைகள் இத்தோடு முடிகின்றன | இணக்கமாக இல்லாத **சங்கங்களின் இடைநீக்கம்** 180 **நாட்களுக்குப் பிறகும் தொடர்ந்தால், "அவற்றின் செயல்பாடுகளை நிறுத்துவது பற்றி வாரியமே முடிவு செய்யும்"** என்று மற்றொரு கடிதம் அனுப்பி வைக்கப்படும். சங்கம் கண்காணிக்கப்படும். |
| | **PETS & GETS** நிகழ்ச்சிகளில் கட்டாய சந்தாக்கள் பற்றிய தகவல்கள் இருக்கும். |
| | இணக்கமின்மையை வரையறுக்கும் வரம்பு சங்க உறுப்பினர்களில் 20 அல்லது 50 சதவீதமா என்பது தீர்மானிக்கப்படும். |

இந்த நடைமுறை இப்போது **ரோட்டரியின் நடத்தை விதிமுறைகளில்** சேர்க்கப்படும் என்பதால் அதிக இணக்கத்தை காண்போம் என்று எதிர்பார்க்கிறோம். வாரிய இயக்குநர்கள் தங்கள் பிராந்தியத்தில் ரோட்டரி இதழுக்கு ஆதரவு திரட்ட வேண்டும். **சங்கங்கள் இணக்கமாக இல்லாதது மற்றும் கட்டாய சந்தா நடைமுறை குறித்து மாவட்ட ஆளுநர்களும், சங்கத் தலைவர்களும் அறிந்திராதது குறித்து RI இயக்குநர்கள் ஆச்சர்யம் தெரிவித்தனர்.** அதாவது PETS மற்றும் GETS நிகழ்வுகளில் கட்டாய சந்தா நடைமுறைக்கு அதிக அளவில் எடுத்துரைக்க வேண்டும்.

**நமது மண்டலங்களில் உள்ள ரோட்டரி சங்கங்கள், தங்கள் சந்தா கட்டண நிலுவைகளை வைராக்கியத்துடன் செலுத்த முன்வர வேண்டும் என்று ரோட்டரி நியூஸ் (Rotary News) கேட்டுக்கொள்கிறது.**

ரோட்டரி இன்டர்நேஷனல்